இலவச வெளியீடு: GERMANY , ENGLAND ஆவணி.Aug. 2016

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 66

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
மாபெரும்
தொடர் மலிவு விற்பனை!
விபரம் பக்கம் 10
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க நகைமாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

# இங்கிலாந்து (EU) இல் இருந்து வெளியேறுவதால்

## ஏற்படக்கூடிய சாதகமான, பாதகமான நிலமைகள்!



## 16 வயதுக்கு மேற்பட்டோர் கல்வியும் பெற்றோர் தலையீடும்



கறுப்பு வெள்ளை நினைவுகள்



பாடல் காட்சி
வெளியீடு
15.08.2016
விபரம் உள்ளே



## அடி ராவாச்சு போதும் புள்ளே!

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288 விபரம் பக்கம் 09

கனீன் எலக்ரோனிக்ஸ்
சகல Alarmanlage, Überwachung Kamera,பொருத்துதல்..
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 24

டோட்மூண்ட் நகரில் எட்டாவது ஆண்டில் எமது சேவை!
Gopara Gnanam Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
விபரம் 6ம் பக்கம்


என்றும் புதியது அழகின் இரகசியம் அது.

S.K.Silks & Gold Paraadise
மாபெரும் ராஜ முத்திரை
கேவலார் – மாதா திருப்பூசை விழாவில் 13.08.2016 சனிக்கிழமை எமது
மாபெரும் அதிரடி மலிவு விற்பனை!
புத்தம், புதிய, வரவுகளான எம்பிறோய்ட் சேலைகள் (Embroidery Sary)
மற்றும் திருமணப் பட்டுப்புடவைகள், அனைத்திற்கும் நாடுங்கள்.
தரம்! அதிக தேர்வு!! அனைத்தும், தங்களை அசத்தும்!!!
Mr.P.Sritharan.
Proprietor
Tel:0231 9501 647
Adler str 33 - 44137 Dortmund





# கஞ்சத்தனம் இல்லாமல் கஞ்சா கலக்கிறது!

**மாதவி**

இந்தியாவில் இருந்து மாதகல் கடற்கரைக்கு கொண்டுவரப்பட்ட 55 கிலோ கேரளா கஞ்சா 20.07.2016 மாதகல் கடற்கரைப்பகுதியில் கைப்பற்றப்பட்டது. இதனை இளவாலை பொலீஸ் அத்தியட்சகர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது ஒன்று அல்ல, பல தடவைகள். இப்போ யாழ்மாவட்டத்தில் கஞ்சா கடத்துபவர்கள் பிடிபட்டு வருகின்றனர். பிடிபட்வர்கள் சிலர், பிடிபடாதவர்கள் பலர். இதனால் இந்த தொழில் மிகவேகமாகப் பரவிவருகிறது. யார் யாருக்கு விற்பது என்பது தெரியாமல் நடைபெறும் இக்காரியத்தால் தம்மினம் அழிவது புரியவில்லை.
விரைவாக பணம்சம்பாதிக்க நாடும் வழிகளில் கஞ்சா, போதைவஸ்துப் பொருட்கள் முன்னணியில் உள்ளன.

அன்றும் கள்ளச் சாரயம் குடிசைக் கைத்தொழில்போல் பல இடங்களில் நடைபெற்றதுதான். அது மாணவ சமுதாயத்தை குறிவைக்கவில்லை. இன்று மாணவரையே குறிவைத்து இயங்கும் போதைப்பொருட்களால் கல்வி கலாச்சாரம் பறிபோகிறது.

கொள்ளை கற்பழிப்பு பாலியல் வன்முறை இவற்றை செய்ய, இந்தப்போதைப் பொருட்களும் முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவு துணை நிற்கவே செய்கின்றன. செய்வதைச் செய்து விட்டு, போதையில் செய்துவிட்டேன் எனச் சொல்பவர்கள்தான் இன்று அதிகம்.

மாதா, பிதா, குரு என்றார்கள். இன்று குருவும் பிள்ளை கொடுக்கிறார் என்று ஆசிரிய வர்க்கத்தையே குறைகூறும் வண்ணம் கொடுமைகள் பாடசாலைகளில் அரங்கேறு கின்றன. ஒருவர் செய்யும் தவறு ஆசிரியத் தொழிலையே களங்கப்படுத்திவிடுகின்றது.

ஒரு பாடசாலை மாணவன் 10 வயது இருக்கும். அவன் தனது சகமாணவனுடன் ஏற்பட்ட சண்டையில் இப்படிக் கூறினானாம். 'உன்னைக் கத்தியால் குத்துவேன். உன் அக்காவை ஆட்களிடம் சொல்லி கற்பழிப்பிப்பேன். இந்தச் சொற்களை அந்தப் பிஞ்சு உள்ளத்தில் ஆழ விதைத் தவர்கள் யார்.
தினமும் மாலை தனிப்பட்ட வகுப்புக்களால் மாணவர்கள் மன உழைச்சல். சுமய கலாச்சார நிகழ்வுகளில் மனதைச் செலுத்த நேரமின்மை. இதனால் வெள்ளிக்கிழமையும் ஞாயிறு காலையும், ரியூரறி வகுப்புக்கள் நடத்தக்கூடாது என யாழ் பிரதேச சபை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தற்போது வெளிநாடுகளில் இருந்து உறவினர்கள் வருவதால் அங்கு தம்பிள்ளைகளின் படிப்பு பாதிப்புறும் என்று பிள்ளைகளை ரியூரறிகிளில் மாலை அதிகநேரம் நின்று படிக்கவும் வழிசமைக்கிறார்கள். வெளிநாடுகளில் பிள்ளைப்பரபரிப்பு நிலையம்போல் தாய்மண்ணிலும் அவலங்கள் ஆரம்பம்.

இது காலத்தின் மாற்றம் என்று சொல்லி தட்டிக்கழிக்கவும் முடியாது.

ஆலயங்கள் யாவும் அழகாக பொலிவுறத் திகழ்கின்றன. நல்லூர் கந்தன் அர்ச்சனைக்கு ஒரு ரூபாய் ஆண்டவன் சன்னிதானத்தில் யாவரும் சமன் என்ற பதாதையுடன் தொடர்கிறது.




**இந்த நல்ல மாணவ சமுதாயத்தின் எதிர்காலம் யார் கையில்**

ஒரு பெரியவர் சொன்னார் கடவுளே என்று கடவுள் எல்லாம் நல்லா இருக்கினம். அப்படி என்றால் பக்தர்கள் எல்லாம் வளமாக உள்ளனர் என்றுதான் பொருளும் என்றார்.

காலையில் மணி ஓசை மனதுக்கு இதமானதாகவே உள்ளது.

கெட்டவை மட்டுமே உள்ளன. என்று சொல்லிவிட முடியாது. நல்லவையும் கலந்தே உள்ளன.
மனதை தொட்டவை!

துர்க்கா மகளிர் இல்லம். முதியவர் இல்லம், வாழ்வகம். சிவபூமி, புங்குடுதீவு சர்வோதயம். இப்படிப்பலவற்றைச் சொல்லலாம்.

மாடி வீடுகள் படிப்படியாக எழும் காலத்தில். தம் பெற்றோர் நினைவாக பல நினைவாலயங்களையும் சமூக நல்நோக்கில் அமைத்தும் வருகின்றனர். கோண்டாவில் கிழக்கு ராஜா பிளாசாவின் மாதிரிக்கிராமம் 15 வீட்டமைப்புத் திட்டம். கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அமரர்கள் கந்தையா இராசையா, திருமதி இராசையா சரஸ்வதி ஆகியோரது ஞாபகர்த்தமாக அவர்களது குடும்பத்தினரால் அன்பளிப்பாக வளங்கப்பட்டது.

வன்னியைச் சேர்ந்த சிலருக்கும் வீடுகள் வழங்கப் பட்டுள்ளன. நல்லதும் கெட்டதும் கலந்ததுதான் வாழ்க்கையாயினும், ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் என்று ஆகிவிடப்படாது அல்லவா.

நாம் அங்கு வாழ்ந்தாலும் வாழவிட்டாலும் தாய்நாடு நமக்கு அதுவல்லவா.

## வெற்றிமணி

### முக்கிய அறிவித்தல்

வெற்றிமணி அபிமானிகளே அன்பான வேண்டுகோள்.

நிகழ்வின் நிழல்கள் என்னும் பகுதி.
நமது மக்களின் கலை, கல்வி, பண்பாட்டு நிகழ்வுகளின் பதிவுகளாக நீண்டகாலமாக வரும் ஒரு பகுதி.
இப்பகுதியில் இடம் பெறும் புகைப்படங்கள் தெளிவானதாக இருக்க வேண்டும்.
தெளிவில்லாத எந்தப்படமும், முக்கிய நிகழ்வாக இருப்பினும் பிரசுரிக்கப்பட மாட்டாது.
முக்கியமாக கைத்தொலைபேசியில் எடுக்கும் படங்கள் தவிர்க்கப்படவேண்டும்.
2 படங்கள் மட்டுமே அனுப்பலாம்.
தெரிவு செய்யும் பொறுப்பு வெற்றிமணி நிர்வாகத்தைச் சார்ந்தது.
மின் அஞ்சலில் மட்டுமே ஒவ்வொரு மாதமும் 14 ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும்.

e-mail: vettimaniy@hotmail.com




வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

—கவிஞர்.வி.க

ஓசை 239



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

“ஓவியக்கலைவேள்”

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com

Company No: 8876276


“வெற்றிமணிமொழி”

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Vettimaniy Ltd

Sanje:07824 61 83 83

vai g (U.K) 00 44 7788 195962


# இங்கிலாந்து (EU) இல் இருந்து வெளியேறுவதால்

## ஏற்படக்கூடிய சாதகமான, பாதகமான நிலமைகள்!

**ரகு தர்மரட்டணம்** ACMA CGMA



வீட்டு விலையில் வீழ்ச்சி? விமான பயணம் (Ryanair Easy jet) விலை அதிகரிப்பு? Mobile phone கட்டணம் அதிகரிப்பு?

கடந்த மாதம் யூன் ( June) 23 ம் திகதி நடைபெற்ற EU referendum வாக்கெடுப்பின்படி “remain“ 48% வீதத்தையும் 'Leave“ 52% வீதத்தையும் பெற்றுக்கொண்டது வாசகர்கள் அனைவரும் ஏற்கனவே அறிந்திப்பார்கள். இந்த Brexit இனால் வரக்கூடிய அனுகூலங்கள் (சாதகமான நிலமை) மற்றும் பாதகமான நிலமைகளை அடுத்துப்பார்ப்போம்.

**சாதகமான நிலமைகள்** (Advantages)

EU வில் இருந்து விலகுவதனால் EU budget ற்கு வருடந்தோறும் செலுத்தும் £ 8.5 bn பணத்தைச் செலுத்தத்த தேவை இல்லை. இது UK அரசாங்கம் NHS ல் செலவு செய்வதில் 7% என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது இருக்கும் EU சட்டத்தின்படி எந்த ஒரு EU நாட்டுப்பிரஜையும் இங்கிலாந்திற்கு Britain க்கு வருவதை தடுக்க முடியாது. Office for National Statistics கருத்தின்படி 945000 eastern Europeans ,Romanian, bolgainians இங்கு வேலை செய்வதுடன் 790,000 Western Europens ம் இங்கு வேலை செய்கின்றார்கள். இதனைவிட 2.90 m EU ற்கு வெளியே உள்ளவர்களும் (இந்தியா சினா) இங்கு வேலையில் ஈடுபட்டுவருகின்றனர்.

Ian Duncan Smith இன் கருத்துப்படி Brexit மற்றைய EU நாடுகளில் இருந்து பயங்கரவாதிகள் இந்த நாட்டுக்குள் வருவதைக் குறைக்கும் என்று கூறியுள்ளார்.
Sterling (பவுண்ஸ்) விலையில் வீழ்ச்சி ஏற்பட்டதினால் இங்கிலாந்தில் இருந்து ஏற்றுமதி (Export) செய்யப்படும் பொருட்கள் அதிகளவு அதிகரிப்பு ஏற்படச் சாத்தியங்கள் இருப்பதால் அப்படியான கட்பணிகளான Rolls Royce இன் வருமானத்திலும் பங்கு மதிப்பிலும் அதிகரிப்பு ஏற்படலாம்.

**பாதகமான நிலமைகள்** ( Dis Advantages)

இவ்வளவு காலமும் கிடைத்து வந்த Eu farming நிதி உதவிகள் இனி வரும் காலங்களில் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் இல்லாமையால் இது Uk இன் agricultural Sektor ஐ பாதிக்கும்.
UK இல் இருந்த airlines கம்பனிகளான Ryanair Easy jet கடந்தகாலங்களில் அனுபவித்துவந்த EU நிதி உதவிகள் இனி இருக்காவிட்டால் air fare இல் அதிகரிப்புச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.




June 23ம் திகதிக்குப்பின் Sterling pounds ல் பெரியதொரு தாக்கம் அதாவது அதன் நாணய மாற்று வீதம் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் 1-3500 என்ற நிலைக்கு கிழே வீழ்ந்தது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை அதிகரித்து, அது பின்னர் பணவீக்கத்தையும் ( Inflation) அதிகரிக்கலாம்.

Housing Sector கம்பனிகளான Taylor Wimpey,Barrat என்பனவற்றின் பங்கீட்டுவிலைகளும் 35 வீதம் உடனடியாக கீழே வீழ்ச்சியடைந்தது.





தொடர்ச்சி 04ம் பக்கம்...


உலகை வலம்வர
உற்றதுணை நாங்கள்!

CENTURY TRAVELS GMBH

**Century Travels GmbH**

website : www.centurytravels.de

Dortmund இல் உள்ள எமது நிறுவனம் கோடைகால விடுமுறையை முன்னிட்டு
28.07.2016 --22.08.2016 வரை விடுமுறை
உங்கள் தேவைகளுக்கு எமது Essen கிளையுடன் தொடர்பு கொள்ளலாம்.

Colombo
Guest House
3-4 Person
Pro Tage 39-59 €

Ram Nishanthan
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
017621682149

Sri lanka:
No-82
New Chetty street
Colombo 13
Tel: 011 23 22 838

இந்தியாவுக்கான விசா பெற்றுத் தரப்படும்

Fax: 0231 5844665
email : info@centurytravels.de

Essen மாநகரில்
Steeler str 150
45139 Essen
0201 64 888 225

29€

Rheinische Strasse 29
44137 Dortmund.Germany

Tel: 0231 58 96 557 /0231 55 74 319

Colombo airport Transfer 29€

# விரைவில் விவாகரத்தும் கேட்டு விடுவார்கள்.

நெடுந்தீவு முகிலன்



குழந்தை குமரி ஆனதும் தங்களிடம்
ஒரு தேவதை இருக்கிறாள் என்று...
ஊருக்கெல்லாம் அழைப்பு வைத்து
ஆடம்பரமாய் சடங்குகள் முடிகிறது.

முடி சிக்கு எடுக்காமலே ஓரங்களில் இரட்டை
பின்னலோடு திரிந்த இந்த சின்ன குருவி
வயதுக்கு வந்ததும் கூந்தலை அயன் பண்ணுகிறது.

பவுடர் பூசாமலே பள்ளிக்கூடம் போனது
நினைவில் இல்லை - இப்போது
பால்க்காரன் வெல் அடித்தாலும்
பேஸ் வோஸ் பண்ணிட்டுத்தான் கதவு திறக்க வருகிறது..

அம்மா மேல் கால் போட்டு படுத்த பிள்ளை
தனி அறையில் ஐ போனோடு சிரிக்கிறது.

உடம்பில் உடுப்பில் உணர்வில் உணவில் என்று
ஒட்டுமொத்தமாய் எல்லாம் மாற்றமடைகிறது.
எதைக்கேட்டாலும் வெட்கம் தருகிறது.

மழை வந்தால் முற்றத்தில் கூட்டமாய் காகிதத்தில்
கம்பல் விட்ட கதை மறந்து - இப்போது
மொட்டைமாடிக்கு போய் தனியாய்
லேசாக நனைந்து பாட்டு பாடும் ஆசை வருகிறது.

தன்னை தானே ரசிக்கும்
அழகிய பருவம் இது - ஆனால்
இந்த கனவை கொஞ்ச நாளிலே
கலைத்து குடும்பம்
ஒரு கலியாணம் கட்டி கொடுத்து
பெரிய மனிசி ஆக்கிடுது.

““தாவணிகளை அவசர
புடவைகளாக்காதீர்கள்.
விரைவில் விவாகாரத்தும்
கேட்டு விடுவார்கள்.““



## இங்கிலாந்து (EU) இல் இருந்து .. 3ம் பக்கத் தொடர்ச்சி




இந்தமாதிரியான வீழ்ச்சி எதிர்காலங்களில் வீட்டு விலைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம். IMF நிறுவனம் Brexit இங்கிலாந்து வீட்டுவிலைகளில் பெரிய விலை வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்றும், UK Treasury வீட்டு விலைகளில் 10 தொடக்கம் 15 வீதம் வரையான வீழ்ச்சி ஏற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

பவுண்ஸ் (Sterling) விலை வீழ்ச்சியால் வெளிநாடுகளுக்கு விடுமுறை மற்றும் வியாபாரரீதியாக பயணம் செய்பவர்கள் Sterling பணத்தில் அதிகம் முன்னரிலும் பார்க்க செலவு செய்ய நேரிடும்.

Europe ல் Mobile phone பாவிக்கும்போது ஏற்படும் செலவு அதிகரிக்கலாம். Bt,Vodafone போன்ற கம்பனிகள் தற்பொழுது அமுலில் இருக்கும், EU Mobile roaming caps“ இனி நடைமுறையில் இல்லாவிட்டால் இது கட்டண அதிகரிப்பை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

£/ $ எதிர்காலம்

இங்கு இருக்கும் வரை படத்தின்படி June மாதம் 24ம் திகதி கடந்த 30 ஆண்டுகாலத்தில் முதன்முறையாக £/ $ நாணயமாற்று வீதம் 1-3500 ற்கு கீழே சென்று இருக்கின்றது. இது ஒரு மிகப்பெரிய மாற்றம் என்பதனால் அடுத்த சில மாதங்களில் இதன் விலையானது 1-2000 வரை கீழே செல்லக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.




Wilhelm Str.09
33602 Bielefeld



Lakshmi Jewellery &Silks

கம் பிள்ளையார் தேர்த் திருவிழாவிலும் (07.08.2016)
கேவலார் – மாதா திருப்பூசை விழாவில் 13.08.2016 சனிக்கிழமை எமது
மாபெரும் அதிரடி மலிவு விற்பனை!
பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள்
இன்னும் பஞ்சாபிகள்
அனைத்தும் மிக மிக மலிவு விலையில்
கிடைக்கும்



தொலைபேசி: Ruban 0179 72 35 729
Tel:0521 4283 510


இலங்கையில்....
இதுவரை இலங்கையில் படமாக்காப்படாத புதிய தளத்தில் ......
WWW Tbbstars.com
அஷ்வ - சுலக்சிதா சுகுமார்
அடி ராவாச்சு
போதும் புள்ளே!
பாடல் காட்சி
ஒளிப்பதிவு:
ஜெனோஷன்
ஜெயரட்டணம்
WWW Tbbstars.com
இசை:சஞ்ஜே சிவா
ஒழுங்கமைப்பு:
பிரதீபா குலசிங்கம்
இணையத்தில் 15.08.2016 வெளியீடு
vetti Mani
Sanje Siva
தாயாரிப்பு: வெற்றிமணி


S.K.Silks & Gold Paraadise
மாபெரும் ராஜ முத்திரை
கேவலார் மாதா திருப்பூசை விழாவில்
13.08.2016 சனிக்கிழமை எமது
மாபெரும் மலிவு விற்பனை
13.08.2016
சேலைகள்
50 € முதல் 30€ வரை
தேரடியில் அதிரடி மலிவு
விலையில் கிடைக்கும்.
கொட்டன் சாறிகள் அனைத்தும்
அதிரடி மலிவு விலையில்
Adler str 33 - 44137 Dortmund
Tel:0231 9501 647
Mr.P.Sritharan.
Proprietor


முற்பதிவுக்கு முந்துங்கள்
Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
என்றும் மலிவான விலையில்
தரமான சேவையை வழங்குவது
Lucky Fly Reisebüro
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Allee Str.38-40a
44793 Bochum
www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de
இந்தியா
செல்வதற்கான
1 மாத,2.மாத,3.மாத
விசாக்கள்
பெற்றுத்தரப்படும்
Emirates
Graphic Design Vettimaniy Ltd
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
துரித பணமாற்றுச்
சேவை!!!
MoneyGram.
WESTERN UNION WU
moving money for better



## யாழ்ப்பாணப் பண்பாடு
# மறந்தவையும் மறைந்தவையும்



பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

# பாரம்பரிய விளையாட்டுக்கள்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழங்கிய பாரம்பரிய விளையாட்டுக்களைப் பதிவுசெய்து இன்றைய தலைமுறையினருக்குக் கொடுப்பது மிகவும் முக்கியமானது. இந் நூலாசிரியர் சிறுவனாக இருக்கும் பொழுது விளையாடிய விளையாட்டுக்கள்இ பார்த்த விளையாட்டுக்கள் என்பவையே இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

சிறுவர்கள்இ இளைஞர்கள, வளர்ந்தவர்கள்இ பெண்பிள்ளைகள் எனப்பலரும் மகிழ்வுடன் விளையாடிய பாரம்பரிய விளையாட்டுக்கள் பல இன்று மறைந்துவிட்டன. உடலுறுதிக்கும்இ அறிவுத்திறனுக்கும்இ மகிழ்வுக்குமாகப் பயின்றுவந்த பாரம்பரிய விளையாட்டுக்கள் பற்றி இன்றைய தலைமுறையினர் அறியமாட்டார்கள். அக்காலப் பாரம்பரிய விளையாட்டுக் களை இன்று வீடுகளிலோ, வீதிகளிலோ, விளையாட்டு வெளிகளிலோ காணமுடியாது. சமூகஇ பொருளாதாரஇ கல்விஇ பண்பாட்டு மாற்றங்கள் காரணமாக இவ்விளையாட்டுக்கள் கைவிடப்பட்டு மறைந்துபோயின எனக்கருதலாம்.

பாரம்பரிய விளையாட்டுக்கள் பெரும்பாலானவற்றுக்கு ஏதோவொரு வகையிலே இயைவுபட்ட - பொருத்தமான பாடல்கள் இடம்பெறுவதும் உண்டு. இத்தகைய பாடல்களை விளையாட்டுச் சார்ந்த நாட்டார் பாடல்கள் என்று அழைக்கின்றனர். பொதுவாக நாட்டார் பாடல்களுக்குரிய பண்புகளைக கொண்ட விளையாட்டுச் சார்ந்த பாடல்களும் இடத்திற்கு இடம், கிராமத்திற்குக் கிராமம் மாறுபட்டும் வேறுபட்டும் அமைவதையும் அவதானிக்க முடிகின்றது.

1. யாழ்ப்பாணப் பாரம்பரிய விளையாட்டுக்கள் பலவற்றைப் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை தமது காதலியாற்றுப் படையிலே பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.பாரம்பரிய விளையாட்டுக்கெனச் சிறப்பாகச் சில சொற்றொடர்களும் குழூகுறிகளும் பயன்படுத்தப்படுவதும் உண்டு. அத்துடன் இவ்விளையாட்டுக்கள் தொடர்பாகப் பழமொழிகளும் மரபுத் தொடர்புகளும் வழங்கி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
யாழ்ப்பாணப் பாரம்பரிய விளையாட்டுக்களைப் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

- சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள்
- இளைஞர்களுக்கான விளையாட்டுக்கள்
- வளர்ந்தவர்களுக்கான விளையாட்டுக்கள்
- பெண்பிள்ளைகளுக்கான விளையாட்டுக்கள்

இந்த வகைப்பாடு முற்றுமுழுக்கச் சரியானதென்றோஇ பொருத்தமான தென்றோஇ முடிவானதென்றோ கூறமுடியாது. சில விளையாட்டுக்கள் எல்லா மட்டத்தினரும் விளையாடுவதோடு, ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறுவர்கள் என நாம் இங்கே கருதுவது 12, 13 வயது வரை உள்ளவர்களையே எனினும் வயது வேறுபாட்டினை பாரம்பரிய விளையாட்டுக்களிலே சரியாகக் கணிப்பிட முடியாது என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.

சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள்

பொதுவாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள கிராமங்களிலேஇ சிறுவர்கள் கீச்சு மாச்சு தம்பலம்இ கண்ணாமூச்சிஇ நுள்ளுப்பிறாண்டிஇ வளையம் உருட்டுதல், கொழுத்தாடு பிடித்தல், மண்சோறு கறி காய்ச்சுதல்இ திருவிழா நடத்துதல்இ இராசா மந்திரி, கெந்தியடித்தல், மாபிள்(போளை)அடித்தல் முதலான விளையாட்டுக்களை விளையாடினர் எனக் குறிப்பிடலாம்.

### கீச்சு மாச்சு தம்பலம்

சிறுவர்கள் “கீச்சு மாச்சு தம்பலம்” என்னும் விளையாட்டினை விளையாடும் பொழுது.

கீச்சு மாச்சுத் தம்பலம்
கீயா மாயாத் தம்பலம்
மாச்சு மாச்சுத் தம்பலம்
மாயா மாயாத் தம்பலம்

என்று பாடியே விளையாடுவர்.

கண்ணாமூச்சி விளையாட்டின்போது

“கண்ணாரே கடையாரே
காக்கணம் பூச்சியாரே,
ஈயாரே எறும்பாரே

கோச்சி என்ன காச்சினாள்”என்ற வினாவை எழுப்பி நிறுத்த. விடையாக “கூழ்”என்று மற்றச்சிறுவன்(சிறுமி)கூறுவார். திரும்பவும் “கூழுக்குக் கறியென்ன?” என்ற வினாவைக் கேட்பார். மற்றைய சிறுவன் “புழு” என்று பதில் கூறுவர். கண்ணைப் பொத்தியிருந்த கையை எடுத்துக்கொண்டு “பெரும் புழுவாய்ப் பிடித்துக்கொண்டு ஓடி வா” என விடுவர். அவர் மற்றவர்களைத் தேடிப்பிடிக்க வேண்டும். இந்த விளையாட்டின் இன்னொரு வகையாக ஒரு சிறுவன் அல்லது சிறுமி மற்றவரின் கண்ணைக் கையாற் பொத்திக்கொண்டு சுற்றிச் சுற்றித் திரியும் பொழுது

“ இவடம் எவடம்? புங்கடி புளியடி
புங்கடி புளியடி எங் கெடி போறாய்?”

எனக் கூற்றும் மாற்றமுமாகக் கூறி விளையாடுவர்.

நுள்ளுப்பிறாண்டி
இவ்வாறே சிறுவர்கள் வட்டமாக இருந்து தமது கைகளை விரித்துத் தரையிலே வைப்பர். ஒரு சிறுவன் அல்லது சிறுமி வட்டமாக இருப்பவரின் கையில்

நுள்ளி,“ நுள்ளுப் பிறாண்டி
கிள்ளுப் பிறாண்டி
கொக்கா தலையிலே என்ன பூ?”

என்று கேட்பார். ஒருவன் “முருக்கம் பூ” என்று பதிலிறுப்பான். உடனே வினவிய சிறுவன்,

“ முருக்குத் தளைச்ச முன்னூறு மாம்பழம்
பட்டயிக்கை வைச்ச பழஞ்சோ றெங்க”
என்று கேட்டான்.

அதற்கு மற்றவர் “பண்டி திண்டிட்டுது” என்று பதிலிறுப்பர். முதல் வினாவைக் கேட்டவர்,

“ பண்டிக்கு மேலே படுவான் மிளைக்க
செட்டியாபிள்ளை ஒரு கையை
மடக்கென்டால் துடக்கு”

தொடர்ச்சி 6ம் பக்கம்

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளோம்
NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

## பாரம்பரிய விளையாட்டுக்கள்.

5ம் பக்கத் தொடர்ச்சி



என்று முடிப்பான். “துடக்கு” என்று கூறிக் கையிலே நுள்ளியதும் அவர் வெளியேற வேண்டும் (out). இந்த விளையாட்டிலே நுள்ளுப் பிறாண்டி என்பதற்குப் பதிலாக “நுள்ளுப் பினாட்டு” , “குறாப் பினாட்டு” என்று வழங்கும் வழக்காறும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய விளையாட்டுகளிற் பல இன்று முற்றாகவே மறைந்து விட்டன.

### கொழுத்தாடு பிடித்தல்

“கொழுத்தாடு பிடித்தல்” என்னும் விளையாட்டிலே ஒருவரின் பின்னால் ஒருவர் இடுப்பிலே பிடித்துக்கொண்டு இரண்டு அணியாக நின்று ஒரு அணி “கொழுத்தாடு பிடிப்பேன்!” என்று கூறுவர். மற்ற அணி “கொள்ளியாலை சுடுவேன்!” என்று கூறி விளையாடுவார்கள். இந்த விளையாட்டிற்கும் புகைவண்டி விளையாட்டிற்கும் ஒரோவழித் தொடர்பு உண்டெனக் கருதலாம்.

### புகைவண்டி விளையாட்டு

“சுக்குப்புக்கு, சுக்குப்புக்கு” எனப் பலமுறை பாடி விளையாடும் இந்த விளையாட்டைப்பற்றி செந்நெறிப் பாங்கான பாடல் ஒன்று பாலர்களுக்குரிய பாடப்புத்தகத்தில் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### திருவிழா விளையாட்டு

சிறுவர்கள் கூடித் திருவிழா நடத்தி விளையாடும் மரபும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே ஒரு காலத்தில் வழக்கில் இருந்தது. தாங்கள் பார்த்தவற்றைக், கலந்துகொண்டவற்றை, இரசித்தவற்றைப் போலச் செய்துகாட்டும் பண்பின் வெளிப்பாடாக இவ்விளையாட்டினைக் கருதலாம். கவிஞர் யாழ்ப்பாணன் சிறுவர்கள் திருவிழா நடத்தும் விளையாட்டுப் பற்றி அழகான பாடல் ஒன்றை எழுதியுள்ளார். அதன் ஒரு பகுதி பின்வருமாறு...

தம்பி நாங்கள் கோயில் கட்டி
சாமி ஒன்றை உள்ளே வைத்து
கும்பிட்டிங்கே பூசை செய்வோம்
கூடிஆடிப் பாடிக் கொள்வோம்
ஓட்டை வாளி நல்ல மேளம்
ஓலைச் சுருளே நாகசுரம்

பாட்டுப் பாடி பஜனை செய்வோம் இவ்வாறு அந்தப் பாடல் நீண்டு செல்லும். நிறுவர்கள் தேரிழுத்து விளையாடும் விளையாட்டினைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை தனது “காதலியாற்றுப்படை”யிலே பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

கா கா டுண் டுண் காகாடுண்டுண்
ஈதோ சாமி எழுந்து தேஉ வாறாஉ
காகா டுண்டுண் காகா டுண்டுண்
அம்மா வழிவிடு ஆத்தை நீ விலகு
காகா டுண்டுண் காகா டுண்டுண்

இவ்வாறு அக்கவிதை தொடர்ந்து செல்லும். இன்றைய காலச் சூழலில் சிறுவர்கள் இப்படி விளையாடுவதைக் கிராமங்களிற் கூடக் காண்பது அரிது.









# மனித உயிரின் நிறை 21 கிராம்.

Dj வினோ

உயிர் பிரிந்தால் மரணம், மரணித்தால் மாமேதையும் அஃறிணை தான். திரு குமாரசாமி, திருமதி சந்திரலேகா, பெரு மதிப்புக்குரிய லோகநாதன் என்றெல்லாம் அழைக்கப்பட்டவர்களை, உயிர் பிரிந்துவிட்டால் அந்தப் பிணத்தை எப்போது எரிப்பது என்று தான் கேட்பார்கள். மரியாதைக்குரிய லோகநாதன் என்ற உயர்திணை அடுத்த கணமே அது ஒரு பிணம் என்று அஃறிணையாக மாறுகின்றது. அந்த 21 கிராம் உயிருக்குத் தான் அத்தனை மரியாதையும் என்று சொன்னால் அது மறுக்கமுடியாத உண்மையாகும்.
மனித உயிரின் நிறை 21 கிராம் ஆகும். இதை பலரால் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் அதுவே உண்மை. Dr.டுங்கண்மக்டொவுகள் என்பவர் 1907 ஆம் ஆண்டு தனது அறிக்கையில் உயிர் உள்ள உடலுக்கும் உயிரற்ற உடலுக்கும் 21 கிராம் நிறை வித்தியாசம் இருப்பதை நிரூபித்தார். இருப்பினும் அவ்வாறு ஏற்படும் நிறை வித்தியாசம் எவ்வாறு ஏற்படுகின்றது? எவ்வூடகத்தினூடு வெளியேறுகின்றது? என்பதே ஆச்சரியமான கேள்விக் குறியாக விளங்குகின்றது!

மனிதனின் தொழில்நுட்பம் மனிதனைப் பார்த்தே உருவானது என்பது அனைவரும் அறிந்ததே. இயற்கையின் ஆற்றலைக் கண்ட மனிதன் அவ்வாற்றலை செயற்கையாக மாற்றும் முயற்சியில் தொழிநுட்பம் வளர்ந்தது. காட்டில் இருந்த மனிதன் மிருகங்களிடம் இருந்து தப்பிக்க வேகமாக ஓடினான். அவன் வேகத்தைவிட, மலையில் இருந்து உருளும் பாறைகள் வேகமாக இயங்குவதைக் கண்ட மனிதன் பாறை மேல் ஏறிப் பயணிப்போம் என்ற அறிவு வளர்ச்சி கண்டான். அவ்வறிவு வளர்ச்சி பல பரிமாற்றங்கள் கண்டு உருளும் சக்கரங்களாக மாறின. இவ்வாறே மனிதனின் பல தொழிநுட்ப வளர்ச்சிகள் பல பரிமாற்றம் கண்டே வளர்கின்றன. இந்த பரிமாற்றம் காண்கின்ற கால கட்டத்தில் பல உயிரிழப்பை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக, மனிதனின் குளிர்சாதனப் பெட்டி கண்டு பிடிப்பால் வளிமண்டலத்தில் ஓசோன் துவாரம் ஏற்பட்டது. அணு மின் உற்பத்தியில் இன்றும் எத்தனை உயிர்கள் பிரிகின்றன என்பது செய்தித்தாள் படிக்கும் அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு தொழிநுட்பம் என்ற பெயரில் உயிர்கள் அழித்தலை எந்த தொழிநுட்பமும் கண்டுகொள்வதில்லை. காரணம் அழிகின்ற உயிர்களை விட அதிகரிக்கும் சனத்தொகையின் எண்ணிக்கை அதிகம் என்பதே அதற்கான முக்கிய காரணம். இருப்பினும் அதிகரிக்கும் உயிர்கள் எவ்வாறு உருவாகின்றது, அழிகின்ற உயிர்கள் எங்கு செல்கின்றது. இவை இன்றும் தெளிவில்லாத வினாவாகவே உள்ளது. ஒரு வினாவிற்கு தெளிவில்லாத விடை கிடைத்தால் கூட ஏதோ ஒரு வகையில் புரிந்து கொள்ளலாம், ஆனால் வினாவே இங்கு தெளிவில்லாமல் இருந்தால் எவ்வாறு விடை காண்பது என்பதே சவாலான முடிவாக உள்ளது.
விஞ்ஞானிகள் அதீத புத்திசாலி இயந்திரங்களை உருவாக்குகின்றனர், மனித மூளையை விட வேகமாக தொழிப்படும் என்று கூறுகின்றனர், இவ்வாறு உருவாகும் இயந்திரங்களுக்குள் ஏதோ ஒன்று குறைவாக உள்ளதே, இன்றைய நவீன உலகின் குறைபாடு ஆகும். தானியங்கி இயந்திரமாக இருந்தாலும் அதன் இயக்கம் குறிப்பிட்ட கால இடைவேளைக்குள் தனக்கு கொடுக்கப் பட்ட செயலையே செய்து முடிக்கும் திறமை கொண்டிருக்கின்றது.

அதற்கான காரணம் விஞ்ஞானம் கண்ணுக்குத் தெரிந்த இயற்கையையே கண்காணிக்கின்றது. அதை கருவாகக் கொண்டு செயற்கைப் பொருளை படைக்கிறது. உதாரணமாக கண்ணைப் பார்த்து உருவாக்கப்பட்ட தொழிநுட்பங்கள் எவையெனில், தொலை நோக்கு கருவி, எறியி, ஒளிப்பதிவு கருவி, கதிர் குவியி என்று பல தொழிநுட்பங்கள் ஒரு சிறிய கண் என்ற விடையத்தைக் கொண்டு கண்டுபிடிக்கப்பட்டது. கண் என்பதை ஆராய்ந்து இத்தனை செயற்கைப் பொருட்களைக் கண்டு பிடித்த விஞ்ஞானத்தால் பார்வை என்ற ஒன்றைப் பற்றி ஆராய்ச்சி செய்ய முடியவில்லை. காரணம் "கண்" என்ற பொருள் கண்ணிற்குத் தெரிகின்றது, ஆனால் பார்வை என்பது உணரமட்டுமே முடிந்த ஒன்றாகின்றது. இப்போது புரிகின்றதா மனிதனின் கண்டு பிடிப்புக்கள் ஏன் முழுமையடையவில்லை என்று. இயற்கை எப்போதும் இருபரிமாணமாக உள்ளது. அதற்கு மனித உடலோடு உவமைப் படுத்தினால், உடலும் உயிரும் உவமை ஆகின்றது. உடலைப் பார்த்து இயந்திரமனிதனை உருவாக்க முயன்ற தொழிநுட்பம், உயிரைப் பற்றி ஆராய்ச்சி செய்ய மறந்துவிட்டது. அதனால் தான் பல மொழிகளில் உயிர் என்ற வார்த்தையே இல்லை. கண்ணுக்குத் தெரியாததை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.
தமிழ் மொழியில் உயிர் என்ற வார்த்தையும் அதற்கான விளக்கமும் தெளிவாக உள்ளது. ஆதிகால தமிழனின் தொழிநுட்பம் இன்றைய நவீன உலகின் தொழிநுட்பத்திற்கு இணையாக இருந்துள்ளமையை இதிகாசங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இருப்பினும் ஆதிகால தொழிநுட்பம் ஒருபடி முன்னோக்கி இருந்துள்ளமையை நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். அதற்கு காரணம் அன்றைய மக்கள் இயற்கையின் இரு பரிமாணத்தையும் அறிந்து அதனுடன் இசைந்து தம் தொழிநுட்பத்தை இயக்கினர். அதனால் தான் பல சக்தி வாய்ந்த வேலைகளை முனிவர்கள் செய்தனர் என்று கூறப்படுகின்றது. குழந்தை இல்லாத ராஜா குடும்பத்திற்கு குழந்தை வரம் கொடுத்து மகாபாரதத்தை ஆரம்பித்து வைத்தார் ஒரு முனிவர். போரில் ஆயுதங்களை பயன்படுத்துதல், விண்ணில் உள்ள கோள்களை ஆராய்தல் என்று இன்றைய விஞ்ஞானிகள் செய்யும் அனைத்தையும் அன்றைய முனிவர்கள் செய்து கொண்டிருந்தனர். அன்றைய முனிவர்களிடம் மெய்ஞானமும் விஞ்ஞானமும் இருந்தது. இன்றைய விஞ்ஞானியிடம் விஞ்ஞானம் மட்டுமே உள்ளது.

இருப்பினும் ஆதிகாலத்தில் முனிவர்கள் அறிந்திருந்த விஞ்ஞானம் அனைத்து மக்களும் அறிந்து பயன் படுத்திவிடக் கூடாது என்ற பாதுகாப்பு எண்ணத்தால், இறைவன் என்ற பெயரைச் சொல்லி பயத்தையும் பக்தியையும் பயன்படுத்தி பாதுகாத்தனர். இன்று அனைத்து மக்களும் பயன்படுத்தலாம் என்ற ஒரு வாய்ப்புக்கு கிடைத்ததால் அனைவரும் ராஜா குடும்ப வாழ்க்கை வாழ்கின்றோம்.

தன்னிடம் இருந்த ஆற்றலை அனைவருக்கும் பகிராமல் போனதே தமிழனின் வீழ்ச்சிக்கு காரணமாகியது. அதனால் தமிழைப் படிப்பதால் என்ன நன்மை என்று கேட்கும் அளவு வாழ்க்கை மாறிவிட்டது. இருப்பினும் விஞ்ஞானத்தில் முழுமை காண வேண்டும் என்றால், விஞ்ஞானத்தில் உள்ள குறைபாட்டைத் தீர்க்க வேண்டும். அதற்கான ஒரே தீர்வு தமிழை நன்றாகப் படித்தல் ஆகும். அதிகமாக மெய்ஞ்ஞானத்தை மட்டும் நம்பியதால் ஆதிகாலத்து மக்கள் ஆழிப்பேரலையால் அழிந்தனர் என்று வரலாறு கூறுகின்றது. வெறும் விஞ்ஞானத்தை மட்டும் நம்பி இப்போது உலகம் அழிந்து கொண்டுள்ளது இவற்றை சரிப்படுத்தி மனித வாழ்க்கை சீராக நடை பெற வேண்டும் என்றால். ஆதிகாலத்து குறை பாட்டையும் நவீன உலகில் இப்போது உள்ள குறைபாட்டையும் தெளிவாகப் பார்த்து அவற்றை நீக்கி புதுவித விஞ்ஞானம் படைக்க வேண்டும். அதற்கு நாம் செய்யவேண்டிய ஒரே வேலை தமிழை நன்றாகப் படித்து உயிரைப் பற்றி அறிந்து தொழில்நுட்பத்தை சீரடையச் செய்ய வேண்டும்.






# 16 வயதுக்கு மேற்பட்டோர் கல்வியும் பெற்றோர் தலையீடும்

கௌசி



அணுவைப் பகுப்பாய்ந்த விஞ்ஞானிகளிலிருந்து உளத்தைப் பகுத்தாயும் உளவியலாளர் வரை இளையோர் கல்வித் தேர்வு அவர்கள் கையிலேயே ஒப்படைக்கப்படல் வேண்டும் என்று கூறுகின்றார்கள். கற்றல் ஒருபுறம் கற்பித்தல் ஒருபுறம் இருக்க இடையில் பெற்றோர் பிள்ளைகளின் கல்வியில் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டியது அவசியமில்லை. பிள்ளையைப் பெற்றுவிட்டதற்காக அவர்கள் உணர்வுகள் பெற்றவர்களுடையதாக முடியுமா? பிறக்கும் போதே கட்டுச் சோற்றுடன்(பால்) வந்து பிறந்தவர்கள் அவர்கள். தங்கள் முயற்சியினால், வளர்ச்சிப்படிகள் கண்டவர்கள். "அவர்கள் வளர்வதற்குப் பெற்றோர்கள் ஒத்தாசையாய் இருந்திருக்கலாம். அவர்களுக்கூடாக வந்தவர்கள் என்பதற்காக அவர்கள் உணர்வாக பெற்றவர்கள் மாறுதல் கூடாது. அவர்கள் அவர்களுக்காகவே பிறந்தவர்கள்'' என இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் கூறியிருக்கின்றார். இவர்கள் தலைமுறை இடைவெளியில் கணனி உலகில் உலகத்தையே காலடியில் வைத்திருப்பவர்கள். அவர்களிடம் பெற்றவர்கள் கற்க வேண்டியது ஏராளம் இருக்கிறது. எனவே பெற்றோர்களே! கற்றுக் கொள்ளுங்கள். கல்வித் தேர்வுக்கு வழிவிடுங்கள்.

பிறந்த குழந்தையை தனியறையில் தூங்கவிடுவது தொட்டு பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரையில் தன்னம் பிக்கை போதிக்கும் கலாச்சாரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாடசாலை சீருடை பிள்ளைகளின் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்று சீருடையையே அறிமுகப்படுத்தாத ஜேர்மனி நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறான சூழ்நிலையிலுள்ள இளவயதினர் ஒவ்வொரு நடவடிக்கையிலும் (உதாரணம்: உணவு, உடை, பொழுதுபோக்கு) தமது ஆக்கிரமிப்பைப் பயன்படுத்தும் பெற்றோர் தாம் விரும்பிய கல்வியைத் தெரிவு செய்வதற்குரிய அடிப்படை கல்விச் சுதந்திரம், மனித உரிமையும் மறுக்கும் போது பெற்றோரிடம் ஒரு எரிச்சலை ஏற்படுத்தி பெற்றோர் பிள்ளை உறவிலே ஒரு பிளவை ஏற்படுத்துகின்றனர்.

## அப்பாடி பெற்றோர்களிடம் இருந்து தப்பிவிட்டோம்

பிள்ளைகளோ பல்கலைக் கழகங்களைத் தெரிவு செய்கின்ற போது "அப்பாடி தப்பிவிட்டோம்'' என்று தொலைதூரத்திலுள்ள பல்கலைக்கழகங்களைத் தெரிவுசெய்கின்றனர்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கனவு இருக்கின்றது. தமது கற்றல் வலு எத்தகையது. எது தம்மால் முடியும் என்னும் உண்மையை அவர்களே அறிந்தவர்கள். "கற்கக் கசடறக் கற்க'' அதாவது தெளிவுற ஒரு விடயத்தைக் கற்க வேண்டும். அப்படிக் கற்கவேண்டுமானால், ஒன்றில் முழுமனதுடன் ஈடுபட வேண்டும். விருப்பமான துறையென்றாலேயே முழுமனதுடன் ஈடுபடமுடியும். அதில் பரிபூரண வெற்றியையும் பெற முடியும். அதில் உயரத்தைத் தொட முடியும். எனது மகன் டொக்டர், எஞ்சினியர் என்று கூறுவதில் எமது பெற்றோர்களுக்கு ஒரு பெருமையிருக்கிறது. இது எங்கள் நாட்டிலிருந்து விமானம் ஏறும் போது விட்டுவிட்டு வந்திருக்க வேண்டிய பெருமை. டொக்டர், எஞ்சினியர், கணனி இவற்றை விட்டால், மற்றைய எதைப் படித்தாலும் பயனில்லை என்னும் தவறான அபத்தமான கருத்து எம்மவரிடையே இருக்கின்றது. இவற்றிற்குப் படிக்காவிட்டால், எங்கள் மானம் தான் போகும் என்று டிடயஉம அயடை பண்ணுவதனால் ஆவதென்ன? சொந்த விருப்பம், கற்கின்ற துறை என்று இரட்டைச் சூழலில் கற்க வேண்டிய நிலை இளவயதினருக்கு ஏற்பட்டு அவர்களுக்கு மனஅழுத்தம், ஏற்படுகின்றது. கல்விப்பழு சிலவேளை தற்கொலை செய்ய வேண்டிய நிலைக்கும் ஆளாக்கும்

"அம்மா எனக்கு இரத்தைக் கண்டால் பிடிக்கவில்லை. நான் ஜேனலிஸ்ட் படிக்கப் போகின்றேன். அது எனக்கு நன்றாகப் பிடித்திருக்கிறது'' என்னும் மகளிடம் "சும்மா இருடி நான் பி. ஏ லிட்ரிசர். இப்ப வீட்டில விதம்விதமாச் சமைக்கிறேன். விட்டுப்போட்டு ஒழுங்காப் படி. மானத்தைக் காப்பாற்றும் வழியைப் பார்'' என்று ஒரு அம்மா சொல்கின்றார். தன்னால் முன்னேற முடியவில்லை என்பதற்காக மகளாலும் முடியாது என்று ஒரு தாய் எப்படி நினைக்க முடியும். முன்னேற்றம் என்பது அவரவர் துறைகளைப் பொறுத்தது. கல்வியறிவில்லாத ஒருவர் தொழிலதிபதியாக வரவில்லையா?

பல்கலைக்கழகம் செல்லாத எத்தனையோ பேர் வெளிநாடு வந்து பட்டப்படிப்பு கற்கவில்லையா? காலச்சூழல், வயதுக்கோளாறு தள்ளிப்போட்ட கல்வி காலம் தாழ்த்தி வரவில்லையா?

எங்கள் பிள்ளைகளுக்கு அறிவு போதாது. கல்வியைத் தீர்மானிக்கும் பக்குவம் அவர்களுக்கு இல்லை. என்னும் அறியாமையில் நமது பெற்றோர் வாழுகின்றார்கள். எம்மை அறியாமலே எமது தோளைத் தாண்டி வளர்வது போல் எம்மை அறியாமலே அவர்களுக்கு அறிவு வளர்ச்சியும் உடல் வளர்ச்சியுடன் ஏற்படுகின்றது. சந்ததி இடைவெளி தரம் கூடிய சமுதாயத்தை உருவாக்குவதை, கற்கால மனிதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமக்குப் புரியவில்லையா? இதைவிட ஆசிரியர் மையக்கல்வியில் கல்வி பயின்று வந்த நாம், மாணவர் மையக்கல்வியில் கல்வி பயிலும் எமது இளவயதினருக்கு ஆலோசனை கூறுவது எந்த விதத்தில் பொருந்தும். இளையோருக்குத் தாமே ஒரு துறையைத் தெரிவு செய்யும்படிப் பாடசாலையிலேயே அவர்களுக்குச் சலுகை வழங்கப் படுகின்றது, வழிப்படுத்தப்படுகின்றது.

அவர்கள் எந்தத் தொழிலைத் தெரிவு செய்தாலும் அதில் முன்னேறவும், எந்தத் தொழிலாய் இருந்தாலும் மனிதாபிமானத்துடன் மதிப்புக் கொடுக்கவும் இந்த நாட்டில் பண்பு இருக்கின்றது.

அத்துடன் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறியதும் அல்லது தமது படிப்பை முடித்ததும் தொழில்வாய்ப்புக் கிடைக்கக் கூடிய துறையைத் தான் இளையோர் நாடுவர். அந்தத் துறை பற்றிய பூரண அறிவைப் பெறுவதற்காக கணனி, நூல்கள் என நுழைந்து அலசி ஆராய்வார்கள். அதற்குரிய வாய்ப்பும் அவர்களுக்கு இருக்கின்றது. எனவே நமது சிறுவர்களுக்கு எதுவும் தெரியாது. என்ற எண்ணத்தைப் பெற்றோர் கைவிடவேண்டியது அவசியம்.

இளையோர் ஆர்வமுள்ள கல்விக்கு ஊக்கம் கொடுப்பவர்கள் தான் சிறப்பான பெற்றோர்கள். இளையோர் தமக்குத் தகுந்த துறையைத் தாமே தெரிவு செய்ய பெற்றோர்கள் ஒத்துழைக்கும் போது பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு மொடல் பெற்றோரா வார்கள். பிள்ளைகளும் படிப்பில் முன்னேற்றம் காண்பார்கள்.





# குறைந்த அளவிலான பக்கவாதம்

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்



Hemiplegia

கேள்வி: எனது தந்தைக்கு 65 வயது. கடந்த வாரம் வரை அவருக்கு பெரிதாக காய்ச்சல் வந்துகூட நான் பார்த்ததில்லை. ஆனால் கடந்த வாரம் திடீரென்று மயங்கி விழுந்துவிட்டார். நாங்கள் உடனே வைத்தியரிடம் அழைத்துச் சென்றோம். வைத்தியர் இரத்த அழுத்தம் காரணமாகவே மயங்கி விழுந்தார் என கூறினார். தற்போது எனது தந்தைக்கு வலது கையும் வலது காலும் பலமில்லாமல்

இருப்பது போல் கூறுகின்றார். அத்துடன் பேசுவதற்கும் சிரமப்படுகின்றார்.

இதற்கான காரணம் என்ன? இதை முழுமையாக குணப்படுத்த முடியுமா? யாரை அணுகினால் முழுமையாக குணப்படுத்த முடியும்?

பதில்: அவருக்கு குறைந்த அளவிலான பக்கவாதம் வந்திருப்பதாகவே கருதுகிறேன். முழுமையான பக்கவாதம் எனில் அவரது ஒரு பக்க கையும் காலும் முழுமையாக இயங்காதிருந்திருக்கும். அதை ஹெமிபிளிஜியா (Hemiplegia) என்பார்கள்.

உங்கள் தந்தைக்கு 'வலது கையும் வலது காலும் பலமில்லாமல் இருப்பது போல்..' என்று நீங்கள் சொல்வதிலிருந்து அவை இயங்குகின்றன. ஆனால் முழுமையான பலத்துடன் அல்ல. அதாவது தசைகள் முழுமையான வீச்சுடன் செயற்பட முடியாதிருக்கிறது. இதை ஹெமிபரீசிஸ் என்பார்கள். ஹெமிபிளிஜியாவில் கை கால்கள் மட்டுமின்றி முகத்தின் தசைகளும் பாதிப்படையக் கூடும். முகத்தின் தசைகளும் சரியான முறையில் இயங்க முடியாததால்தான் அவர் பேசுவதற்கும் சிரமப்படுகிறார்.

பேசுவதற்கு மட்டுமின்றி உண்பது, உடுப்பது, நடப்பது, குளிப்பது, கழிப்பறை செல்வது, போன்ற பல நாளாந்த செயற்பாடுகளிலும் சுயமாக இயங்க அவருக்கு முடியாதிருக்கலாம். அவ்வாறெனில் வீட்டில் உள்ளவர்களின் உதவி பெருமளவு தேவைப்படும்.

சிகிச்சையின் முக்கிய அம்சமாக இருப்பது இயங்குவதற்கு சிரமப்படும் பகுதிகளை மீண்டும் உறுதியானதாக்கி செயற்பட வைப்பதுதான். உடற்பயிற்சி (Physiotherapy) சிகிச்சை மூலம்தான் அவரை பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும். இதற்கென நீங்கள் ஒரு உடற்பயிச்சி சிகிச்சையாளரின் உதவியைப் பெற வேண்டும். அவரின் உதவியுடன் வீட்டில் உள்ள நீங்கள் அனைவரும் இதற்கான ஒத்தாசையை வழங்க வேண்டும்.

கை கால்கள் விரல்கள் உட்பட இயங்க முடியாதிருக்கும் அவரது உறுப்புகள் அனைத்திறகும் தசைநார்களுக்கும் பயிற்சிகள் அளிக்க வேண்டும். இவை இயங்காது என்று எண்ணி அவற்றை கைவிட்டுவிட்டு மற்றப் பகுதியை மட்டும் பாதிக்கப்பட்ட உங்கள் தந்தை முயலக் கூடாது. கூடியளவு பேச்சுக் கொடுத்து அவரைப் பேச வைக்க முயல வேண்டும்.

உங்கள் தந்தைக்கு வலது கையும் காலும் பலமில்லாது இருப்பதாகக் கூறினீர்கள். இயலாத அந்தப் பக்கத்தையே அவர் கூடியளவு உபயோகிக்க முயல வேண்டும். உதாரணமாக முகங் கழுவுவதுஇ பல் விளக்குவது, எழுதுவது, தலை சீவுவது, உடை மாற்றுவது போன்ற அனைத்துச் செயற்பாடுகளுக்கும் இயங்குவதற்கு சிரமப்படும் பகுதியையே முன்னுரிமை கொடுத்து பயன்படுத்த அதே போல நடக்கும்போதும் பலமற்றதாகத் தோன்றும் வலது பகுதியையே அவர் தூக்கி வைத்து நடக்க வேண்டும். இந்த சிகிச்சை முறையை (modified constraint induced therapy) எனச் சொல்வார்கள்.
இதைத் தவிர மின் தூண்டல் செய்வதும் பயன் தரும். இதை அதற்கான பயிற்சி உள்ள உடற்பயிற்சி கொடுப்பவர்தான் செய்ய வேண்டும்.


பல துணைச் சாதனங்களையும் (assis-tive devices) தேவைக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும். உதாரணமாக நடக்கும்போது முழங்கால் தளர்கிறது எனில் அதற்கான முழங்கால் தளைப்பட்டி (Knee brace) உதவலாம். கைத்தடி, சக்கர நாற்காலி, நடக்க உதவும் றுயடமநச போன்றவற்றையும் தேவை அறிந்து பயன்படுத்தவும்.

சில வசதிகளை வீட்டில் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அவர் நாளாந்த நடவடிக்கைகளை இலகுபடுத்தவும், மற்றவர்கள் துணையை குறைத்து தன்னளவில் இயங்கக் கூடிய மனத்துணிவை வளர்ப்பதற்கும் முடியும்.

நடக்கும்போது பற்றி நடப்பதற்கு சுவர்களில் பிளாஸ்டிக் அல்லது இரும்புப் பைப்புகளை பதித்து வைக்கலாம். ரொயிலட் இருக்கையிலிருந்து தானாக எழுவது சிரமம் எனில் சற்று உயரமான ரொயிலட் இருக்கையை வைக்க வேண்டும்.

பிரஸ் பண்ணுவதற்கு கையை அவரால் உயர்த்த முடியாவிட்டால் இடது கையைப் பயன்படுத்த வேண்டாம். பிரஸ்சை ஒரு நீண்ட குச்சியைக் கட்டி வலது கையாலேயே பிரஸ் பண்ணட்டும். இதனால் பாதிப்புற்ற தசைநார்கள் பலம் பெறும்.

பிரஸர் இருந்தால் அதற்கான மருந்தை மருத்துவரின் ஆலோசனையுடன் பயன்படுத்தவும். இதைத் தவிர இது போன்ற பிரச்சனை மீண்டும் வராதிருக்க குருதி உறைதலைத் தடுக்கும் Aspirin, clopidogril போன்ற மருந்துகளையும் கொடுத்திருப்பார்கள். அவற்றையும் தவறாது உட்கொள்ள வேண்டும்.




T.T.S.Brothers GmbH&Co.KG



உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd





# றொறன்றோ சர்வதேசக் குறும்பட விழா - 2016

**வாழ்நாள் சாதனையாளருக்கான அகேனம் விருது இம்முறை இங்கிலாந்தில் வாழும்**
**ஓவியர், நாடகர், வரைகலை வடிவமைப்பாளர் கனகசபை கிருஷ்ணராஜா (கே.கே. ராஜா) அவர்களுக்கு வழங்கப்பட்டது.**

உலகின் முதலாவது திரைப்படமே லூமியே சகோதரர்களால் ஒளிப்பதிவு செய்யப்பட்டு, 1895 இல் வெளியான, 'ஒரு தொடருந்தின் வரவு' (Arrival of a Train) என்ற குறும்படமாகத்தான் இருந்தது. ஒரு தொடருந்து நிலையத்தினுள் தொடருந்து வந்து தரித்ததும் பயணிகள் இறங்குவதும் ஏறுவதும் நடைமேடையில் நடந்து திரிவதுமான 49 செக்கன் காட்சியே அது. பின்னாளில் ஒரு மாபெரும் தொழிற்றுறையாகத் திரைப்பட உருவாக்கம் வளர்ச்சியடைந்தது. முழுநீளத் திரைப்படங்களே திரைப்படங்களாக எடுக்கப்பட்ட காலத்தில் சொல்லவேண்டிய வியடத்தைக் குறுகிய நேரத்துள் நறுக்குத் தெறித்தாற் போன்று சொல்லக்கூடிய திரைப்படங்கள் குறும்படங்கள் ஆயின. ஒஸ்கார் விருதுக் குழு 40 நிமிடங்களுக்கு உட்பட்டிருந்தால் குறும்படம் என்ற பிரிவில் விருதுக்குப் பரிசீலிக்கும்.
ஈழத்தமிழர் குறும்படத்துறையினும் நீண்டகாலமாகத் தடம் பதித்திருந்தாலும், குறும்படங்கள் மூலம் சொல்லக்கூடிய கதைகளும் கதைக் களங்களும் நிறையவே இருக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளாக ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் குறும்படங்களின் வரவு அதிகரித்திருக்கிறது. குறும்படவிழாக்களில் ஈழத்திலிருந்தும் புலம்பெயர் தமிழர் வாழும் தேசங்களிலிருந்தும் பல படங்கள் பங்குபற்றி விருதுகளும் பெறத் தொடங்கியிருக்கின்றன.

சுயாதீன கலை, திரைப்பட மையம் 2001ம் ஆண்டிலிருந்து குறும்பட விழாக்களை நடத்தி விருதுகளும் வழங்கி வருகின்றது. றொறன்றோ சர்வதேசக் குறும்பட விழாவை நடத்த இந்த ஆண்டிலிருந்து சுயாதீன கலை, திரைப்பட மையத்தோடு தாய்வீடு பத்திரிகையும் இணைந்துள்ளது. 12வது குறும்பட விழா ஜூன் 11 சனிக்கிழமை மதியத்திலிருந்து மாலை 6.00 மணி வரை ஸ்காபரோ சிவிக் சென்ரரில் நடைபெற்றது. ஈழம், இந்தியா பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், கனடா, ஆகிய நாடுகளிலிருந்து 75 வரையிலான குறும்படங்கள் போட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. வன்மம் (ஈழம்), கெடு (ஈழம்), அறன் (ஐக்கிய இராச்சியம்), 18 குச்சிகள் (இந்தியா), வெள்ளம் (ஈழம்) , ஆதிவர்ணம் (கனடா),

Your Destination (பிரான்ஸ்) பங்களா நாய் (இந்தியா), சுநவரசநென (ஈழம்), அருவி (கனடா), நான் நானாக (பிரான்ஸ்), செரஸ் (பிரான்ஸ்) ஆகிய 12 குறும்படங்கள் விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டு விழாவிலும் திரையிடப்பட்டன. சிறந்த படத்துக்குச் சான்றிதழும் ஆயிரம் கனடிய டொலரும் ஏனைய அனைத்து விருதுகளுக்குசான்றிதழும் இருநூற்றைம்பது கனடிய டொலரும் வழங்கப்பட்டன.
சில உலகப்புகழ் பெற்ற பல்வேறு நாடுகளிலும் உருவான மூன்று ஒரு நிமிடக் குறும்படங்கள் சிறப்புத் திரையிடலாகக் காண்பிக்கப்பட்டன.
கனடியத் தமிழ்ச் சமூகத்தின் இளையதலைமுறை மாணவி ஒருவர் இயக்கிய 4 நிமிடத்துக்கும் சற்றுக் குறைவான My dear Fair & Lovely என்ற குறும்படமும் காண்பிக்கப்பட்டது.
வெள்ளைத்தோல் கொண்டவர்கள் சற்று நிறமுள்ளவர்களைக் கேலி இழிவு செய்வதை எதிர்க்கும் ஒரு கறுப்பு அல்லது மண்ணிறத் தோல் கொண்ட ஓர்ம்மமிக்க கவிதையே படத்தில் வசனமாக ஒலித்தது. நிறத்தால் பாகுபாடு இருக்கக்கூடாது என்று வலியுறுத்துவதோடு கனடியப் பல்கலாச்சார சூழலையிட்டுப் பெருமையும் கொள்கிறது அந்தக் கவிதை. படத்தை இயக்கிய Richmond Hill High School, 11ம் வகுப்பு மாணவி ஜதுஷா மகேந்திரராஜனே படத்தின் முக்கியமான பாத்திரத்தில் நடித்துமிருந்தார். இளையவர்களைக் குறும்படத்துறையில் ஊக்குவிக்கவும் சமூக அக்கறையுடனான படங்கள் மேன்மேலும் வெளிவரவேண்டும் எனும் நோக்கிலும் ஜதுஷாவின் இக்குறும்படம் திரையிடப்பட்டதோடு விழா அரங்கில் ஜதுஷா குறும்படவிழாவின் சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.
றொறன்றோ சர்வதேசக் குறும்பட விழாவின், வாழ்நாள் சாதனையாளருக்கான அகேனம் விருது இம்முறை இங்கிலாந்தில் வாழும் ஓவியர், நாடகர், வரைகலை வடிவமைப்பாளர் கனகசபை கிருஷ்ணராஜா (கே.கே. ராஜா) அவர்களுக்கு வழங்கப்பட்டது.











# காதல் வந்திடுமா!

**(குரு அரவிந்தன்)**



தை மாதத்தில் ஒரு நாள். தைப் பொங்கல் தினம். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. பூம்பனி கொட்டிக் கொண்டிருந்தது. அன்று தான் உன்னை முதன் முதலாகக் கண்டேன். பனிப் பிரதேசத்தில் வாழும் எஸ்கிமோ போல நீயும் குளிர் ஆடை அணிந்து தலையை மூடியிருந்தாய்.

கோயில் வாசலில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் எனது வண்டிக்குப் பக்கத்தில் தான் உங்கள் வண்டியும் நிறுத்தப் பட்டிருந்தது. உன் அப்பாவும் அம்மாவும் இறங்கி முன்னால் நடக்க, அவர்களைத் தொடந்து நான் செல்ல, எனக்குப் பின்னால் நீயும் உன் தம்பியோ, தங்கையோ வந்து கொண்டிருந்தீர்கள்.

'வழுக்கும், கவனம்..!' என்றாய்.
பின்னால் வருவது பெண் என்று குரல் காட்டிக் கொடுத்தது.
நான் திரும்பிப் பார்த்தேன்.
உன் தம்பியோ தங்கையோ தெரியவில்லை, கைகளைப் பற்றிக் கொண்டு கயிற்றிலே நடக்கும் சர்க்கஸ் பெண்மணி போல நீ கவனமாக அடிமேல் அடிவைத்து நடந்து வந்து கொண்டிருந்தாய்.

யாரை அப்படி எச்சரித்தாய்..? உன் பெற்றோரைத்தானே என்று நான் சற்று அலட்சியப் படுத்தி விட்டேன். முத்துக்களாய் உன் சிரிப்பொலி சிதறிய போதுதான் உணர்ந்தேன் பனித்தரையில் நான் விழுந்து கிடப்பதை.

'ஆ.. யூ.. ஓ கே..?' அருகே, என் முகத்திற்கு அருகே உன் குரல் கேட்டது. மழைக்கால மேகத் திரைகளை விலத்தி எட்டிப் பார்க்கும் முழுநிலாவாய் கறுப்பு மேலாடைக்குள்ளால் உன் முகம் பளீச் என்று பிரகாசித்தது. பகல் நிலவா..?
நான் எழுந்திருக்க முயற்சி செய்தேன்.

பட்ட காலே படும் என்பது போல எழுந்திருக்க முடியாமல் மீண்டும் மீண்டும் வழுக்கியது.

லட்சியத்தை நோக்கி முன்னேறும் போது "திரும்பிப் பார்க்காதே" என்று சொல்வார்கள். வெளி வீதியில் என்னை அங்கப் பிரதட்சிணம் செய்ய வைப்பதாக அம்மா ஏதாவது நேர்த்திக் கடன் வைத்தாளோ தெரியாது. நான் திரும்பிப் பார்த்ததன் பலன் என்ன என்று பனி நிலத்தை உழுத போதுதான் விளங்கியது.

என் உதடுகளில் பனி பூத்திருந்ததைப் பார்த்ததும் உன் முகம் சட்டென்று வாடிப்போனது.
'அடி பட்டிருச்சா..? இரக்கத்தோடு கேட்டு விட்டு தயங்காமல் கைகளை நீட்டினாய்.
"உதவிக் கரம்" பற்றிக் கொண்டு எழுந்து நின்றேன்.
கைகள் பட்ட இடம் இதமாய்ச் சுட்டது.

கோயில் வீதியில் இப்படியான தப்பான நினைப்பு வந்திருக்கக் கூடாதுதான், ஆனாலும் வந்து தொலைத்தது.
இந்தத் தொடுகைக்காக எத்தனை தடவை வேண்டும் என்றாலும் விழுந்து எழும்பலாம் போலவும் இருந்தது.

நீ என் கையைத் தொட்ட போது உன் கைகளிலே இருந்த கார்ச் சாவியில் தான் என் கவனம் முழுவதும் பதிந்தது. உன் வயதைக் கேட்காமலே நீ பதினாறைக் கடந்து விட்டாய் என்று அது சொல்லாமல் சொல்லிற்று. இதுவே ஊராய் இருந்திருந்தால் நீ என்னைத் தொட்ட போது ஒரு பிரளயமே வெடித்திருக்கும். நல்ல காலம், இந்த மண் இதை எல்லாம் தாங்கிக் கொள்ளும் தன்மை கொண்டது.

பிரகாரம் சுற்றிக் கும்பிடும் போது என் கண்களுக்குள் நீ சிக்கிக் கொண்டாய். பொட்டு வைத்த முகமும், பூச்சூடிய கூந்தலும், பட்டுப் பாவாடையும், அரைத்தாவணியும் உன் அழகிற்கு அழகு சேர்ப்பது போல இருந்தன. சேலை உடுத்தால் எப்படி இருப்பாய் என்று மனசு கற்பனை பண்ணிப் பார்த்தது. கற்பனை இலவசமாய்க் கிடைப்பதால் எப்படி வேண்டும் என்றாலும் உன்னைப் பற்றி நினைத்துப் பார்க்கும் சுதந்திரம் எனக்கு இருந்தது.

பூசை முடிந்து திரும்பிப் போகும்போது நான் மெதுவாக எனது காரை நோக்கி நடந்தேன். நீயோ என்னை விலத்தி, வேகமாக முந்திக் கொண்டு உனது காரை நோக்கி நிதானமாய் நடந்தாய்.

திரும்பிப் பார்ப்பாய் என்று நினைத்தேன். நீயோ திரும்பிப் பார்க்காமலே காரின் கதவைத் திறந்தாய். "திரும்பிப் பார்த்தால் வழுக்கி விழுந்து விடுவோமோ" என்ற எனது அனுபவம் உனக்கு ஒரு பாடமாய் இருந்திருக்கலாம். அனுபவங்கள்தானே நிறையப் பாடங்களைச் சொல்லித் தருகின்றன.

எங்கே திரும்பிப் பார்க்காமலேயே போய் விடுவாயோ என்று மனம் ஏங்கியது. நீ என்னை ஏமாற்றவில்லை.
என் மனதை உன் மனம் தொட்டிருக்கலாம்!
வண்டியின் உள்ளே நுழையுமுன் திரும்பி ஒரு பார்வை பார்த்தாயே, முதற் பார்வை! அப்படியே உறைந்து விட்டது என் இதயம்.

நீ என்னைத் தொட்டுத் தூக்கி விட்ட போது கூட அசையாத இதயம் அந்தப் பார்வையில் எப்படி உறைந்து போனது என்று எனக்கு இது வரை புரியாத புதிராகவே இருக்கிறது.

உறைந்த என் உள்ளத்தை அப்படியே விட்டு விட்டு நீ பேசாமல் போயிருக்கலாம். ஆனால் நீ அப்படிச் செய்ய வில்லை. போகும் போது காரில் இருந்து என்னைப் பார்த்து ஏன் அப்படி ஒரு புன்னகை சிந்தினாய்..? என்னைப் பைத்தியமாக்கவா..?

பனிக்கட்டியாய் இறுகிக் கிடந்த என் இதயத்தில் கொஞ்சம் உப்பைத் தூவி விட்டது போல இருந்தது. உறைந்து போயிருந்த இதயம் மீண்டும் உருகிவிட்டது.
பார்வையால் உறைய வைக்கவும், புன்னகையால் உருக வைக்கவும் எப்படி உன்னால் முடிகிறது?

தொடர்ச்சி 12ம் பக்கம்







## யேர்மனி- குறிஞ்சிக்குமரன் தேர்த் திருவிழா-24.07.2016

குறிஞ்சிக்குமரன் மலைசார்ந்த இடத்தில் அமைந்துள்ளதால்
தேர் கார் கொண்டும் இழுத்து வரப்படுகின்றது.


படங்கள்: வெற்றிமணி




# காதல் வந்திடுமா!

11ம் பக்கத் தொடர்ச்சி

எட்ட நின்று கொண்டு றிமூட் கொன்றோலால் காரை இயங்கச் செய்வதும், அணைக்கச் செய்வதும் போல கிட்ட வராமலே உன் விழி அசைவாலும், புன்னகையாலும் என் இதயத்தை ஆட்டிப் படைக்கிறாயே, தூர இருந்தே என்னை இயக்கும் கருவியாய் நீ மாறிவிட்டாய் என்பது உனக்குத் தெரியுமா?

சலனத்தை விதைத்து விட்டு நீ மட்டும் போய்விட்டாய்!
எனக்குள்ளே எப்படி இந்த மாற்றங்கள்? எதையோ எனக்குள் இழந்து விட்டது போல புரிந்து கொள்ள முடியாத தவிப்பு!

வேறு வழியில்லை! அரை மணி நேரமாய் வரிசையில் நின்றேன். ரோஜாக்களின் தோட்டம் எப்படி இந்தப் பெரும்சந்தைக்குள் வந்தது என்று வியப்பாக இருந்தது. ரோஜா மலர்களில் இத்தனை நிறங்களா? பல வர்ணங்களில் ரோஜாக்கள் பூப்பதுகூட இந்த மரமண்டைக்கு இத்தனை நாட்களாய்த் தெரிந்திருக்கவில்லை.
எந்த நாட்டு ரோஜாவோ தெரியாது, பார்த்தவுடன் கண்ணைக் கவர்ந்த இந்த சிவப்பு ரோஜாவை வாங்கி வந்திருக்கிறேன்.

நான் மட்டும்தான் காதலில் சிக்கித் தவிக்கிறேனோ என்று இதுவரை நினைத்ததைப் பொய்யாக்கி விட்டார்கள் அந்த வரிசையில் நின்றவர்கள். எவ்வளவு ஆவலோடும் எதிர் பார்ப்போடும் இவர்கள் காத்திருக்கிறார்கள். அடுத்த வருடமும் இவர்கள் நீண்ட வரிசையில் இப்படிப் பூ வாங்கக் காத்திருப்பார்களோ தெரியாது. 'இப்போதைக்கு எல்லோருடைய காதலும் வாழ்க..!' என்று வாழ்த்துவதைத் தவிர வேறு எதுவும் எனக்குச் சொல்லத் தெரியவில்லை.

உனக்காக இந்த ரோஜாவை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். எதைத் தருகிறோம் என்பது முக்கியமில்லை, ஏன் தருகிறோம் என்பதுதான் முக்கியம். அது உனக்குப் புரிந்தால் என் காதலும் புரியும்.

ஆசையோடு வந்திருக்கிறேன். நாகரிகமான முறையில் காதலைச் சொல்வதில் தப்பில்லை. மனம் திறந்து சொல்லிவிடு! சம்மதம் சொல்லத் தயக்கமா? வார்த்தைகள் வர மறுக்கிறதா? வார்த்தைகள் வேண்டாம், வார்த்தைகள் வேண்டாம், மௌனத்தினாலே பேசிவிடு!

ஒரு கண் அசைவு, அதுவே எனக்குப் போதும். அன்பே, ஏற்றுக் கொள்வாயா..?


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

இயற்கை ஆயுள்வேத ஐரோப்பிய நாடுகளுக்கு உகந்த

**கேரளா இயற்கை மருத்துவம்**

இந்தியா ஈரோடு - இலங்கை நல:லூர் - பிரான்ஸ் லாகூர்நெவ்
தொலைபேசி இல : 00919842256223

**குருநாந் ராம் லக்ஸ்மன்**

இயற்கை மூலிகை வைத்தியசாலையில்,கைநாடி பார்த்து
உங்கள் சகலவிதமான நோய்களுக்கும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்துவைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| முடி உதிர்தல் | தலைவலி | உள்மூலம் |
| சிக்கன் குனியாவால் காய்ச்சல் | காய்ச்சல் | வெளிமூலம் |
| தீராத கை-கால் வலி | சரவாங்கி | பகந்தரிமூலம் |
| ஆஸ்துமா,அலர்ஜி | இரத்தக்கொதிப்பு | கை-கால் குடைச்சல் |
| உடல் பருமன் அதிகரிக்க-குறைக்க | வாயுக் கோளாறு | கழுத்துவலி |
| மூட்டுவலி,பயம்,ஞாபக சக்தி | உஷ்ணம் | முகப்பரு |
| பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சனை | நரம்புவாதம் | தேமல் |
| தோல்வியாதி(சொரியாசிஸ்) | அல்சர் | வெண்குஷ்டம் |
| சிறுநீரகக் கோளாறு | வயிற்றுவலி | டி.பி |
| இருதயக் கோளாறு | இடுப்புவலி | வாதம் |
| பக்கவாதம் | காக்காவலிப்பு | மஞ்சள் காமாலை |
| நரம்புத் தளர்ச்சி | ஆண்மைகுறைவு | கண்,காது |
| | வெட்டைச்சூடு | தொண்டை நோய்கள் |
| | ஜனசுடு | ஆறாத காயங்கள் |

மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி,
பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியும்.



Gartenstrasse 185, 41236 Mönchengladbach - Germany
0049 1517-5230649 // 0049 1521-8215707




– நீர்வை. தி.மயூரகிரி சர்மா

## மக்களை நோக்கி இறைவனின் வருகை

சென்ற இதழின் தொடர்ச்சி....

### தேரின் பாகங்கள்

தேரின் சில்லிலிருந்து இறைவன் எழுந்தருளும் பீடம் வரையான பகுதி மூன்று பிரிவாகவோ ஐந்து பிரிவாகவோ வகுக்கப்பட்டு சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இறைவன் காட்சிதரும் பகுதிக்கு மேலுள்ள சிகரம் தமிழகத்தில் ஆண்டு தோறும் வண்ணத்துணிகளால் அலங்கரிக்கப்பட்டு மூலாலய விமானத்தின் மறுவடிவம் போல அழகுறக்காட்சி தரும். இலங்கையில் இவ்வாறு வருடாந்தம் அமைக்காமல் நிரந்தரமாகவே மரக் கூட்டுவேலைப்பாடுகளால் மேல்த்தளத்தை அமைக்கும் வழக்கமும் இருப்பது குறிக்கத்தக்கது.



தேரை ஆக்கவல்லவர் ஸ்தபதி எனப்படுவார். திராவிட உத்தரமட்டம் மற்றும் முகபத்திரம் முதலிய கலை மரபுகள் இவற்றுக்கு உண்டு. பார்விதானம், உபபீடம், அதிஷ்டானம், கமலாகார பண்டிகை நராசனமட்டம், தேவாசனமட்டம், உபசித்தூர்மட்டம் போன்ற அங்கங்கள் இறைவனின் இருக்கைப்பகுதிக்குக் கீழும் இருக்கைப்பகுதியில் தேர்ச்சாரதி தேர்க்குதிரைகள் மற்றும் பவளக்கால்களும் மணிமண்டபமும் மேல்விதானம் யாளிகளாலும் சிம்மங்களாலும் தாங்கப்பெறுவதாய் முகபத்திரமடக்கை முதலிய அம்சங்களுடனும் அமைக்கப்படுவதைக் காணலாம்.

இவற்றை தமிழ் இலக்கண இலக்கியங்களில் முறையே தேரின் அச்சிலிருந்த பீடம் வரையான பாகங்களை ஆரக்கால் உருள் (சில்லு- சக்கரம்) கிடுகு (தேர்த்தட்டைச் சுற்றி அமைக்கப்படும் மரச்சட்டகம்- நிகண்டு) என்றெல்லாம் அழைப்பர். பீடப்பகுதியிலுள்ள தாமரை மொட்டு வடிவிலுள்ள அமைப்பை 'கூவிரம்' என்றும் தேரின் நுகக்காலையும் சிகரத்தையும் இணைக்கும் பகுதியை 'கொடிஞ்சி' என்றும் தேரின் வெளிப்பாகத்து நீண்டமேல் வளைவை 'கொடுங்கை' என்றும் தேரை அலங்கரிக்கக் கட்டும் சீலையை 'தேர்ச்சீலை' என்றும் தேரின் நடுவிடம் தேர்த்தட்டு அல்லது 'தேர்த்தளம்' என்றும் சில நிகண்டுகளில் 'நாப்பண்' என்றும் அழைப்பர்.

தேரின் மேற்றட்டைச் சுற்றியுள்ள மரக்கைப்பிடிச்சுவர் 'பாகர்' என்றும் தேரின் நடுவிலுள்ள பீடம் 'பார்' என்றும் 'வேதிகை' என்றும் தேரில் ஏறுவதற்காக அமைக்கப்பட்ட மேடையை 'பிரம்பு' அல்லது 'தேர்முட்டி' என்றும் அழைப்பர். இதை வடமொழியில் 'ரதாரோஹணமண்டபம்' என்பதும் குறிப்பிட வேண்டியது. இது போலவே தேர்ச்சில்லை 'தேர்வட்டை' என்றும் குறிப்பிடப்படுகின்றது. தேர் ஓட்டுவபரை 'தேர்ப்பாகன்' என்றும் 'தேர்வலவன்' என்றும் கூறும் வழக்கம் உள்ளது.

### தேர் சைவ சித்தாந்த விளக்கம்

மந்திர கேசரி மலைகள் அச்சு: சூரிய சந்திரர் சில்லுகள்: ஷட்ருதுக்கள் சந்திகள்: பதினான்கு உலகங்கள் தட்டுகள்: ஆகாச ஆசனம்: நதிகள் கொடிகள்: மோட்ச உலகம் மேல்விரிவு: யாகங்கள் சட்டம்: நாள் திதி நட்சத்திரம் போன்றன குறுக்கு மரங்கள்: அஷ்ட பர்வதங்கள் தூண்கள்: அஷ்ட திக்கஜங்கள் தாங்கும் ஆதாரங்கள்: ஏழு கடல்கள் திரைச்சீலைகள்: உபவேதங்கள் மணிகள்: வாயுக்கள் படிகள்: நால்வேதங்கள் குதிரைகள்: உச்சிக்குடை பிரம்மரந்திரம்: கலசம் சோடஷாந்தத்தானம்: ஆக தேரானது சிவரூபம்... என்கிறது சைவ சித்தாந்திகளின் கருத்து. அகோர சிவாச்சாரியார் பத்ததியின் அடிப்படையில் 'ரதப்பிரதிஷ்டா பத்ததி' என்ற ஒரு கிரந்த நூலும் அபூர்வமாக வழக்கில் இருப்பதாகத் தெரிகின்றது.

அதே போலவே தேர் பிண்டஸ்வரூபமாக

சக்கரங்கள் தசவாயுக்கள்
முதலாம் அடுக்கு கீழண்டம்
அச்சு மூலாதாரம்
அதன் மேலே சுவாதிஷ்டானம்
அதன் மேலே மணிபூரகம் நாபித்தானம்
பீடம் அநாகதம் ஹிருதயஸ்தானம் பகவான் எழுந்தருளும் இடம்
மேலே விசுத்தி கழுத்துப்பகுதி
32 குத்துக்கால்கள் 32 தத்துவங்கள்
மேலே ஆஞ்ஞா முடிப்பகுதி பிரம்மரந்திரம் சஹஸ்ரகமலம்

என்றும் விளக்குவர்.

### தேர்த்திருவிழா தொடர்பான நடைமுறைகள்

பொதுவாக இறைவனை நோக்கி ஆலயத்திற்கு மக்கள் வருவதே வழக்கம். ஆனால் தோத்திருவிழாவில் மக்களை நோக்கி இறைவன் வருவதை அவதானிக்கலாம். கி.பி 5-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீனயாத்திரிகனான பாஹியன் என்பவனும் தனது குறிப்பில் இத்தேர் விழா பற்றிக் கூறியுள்ளான். சோழர்காலக் கல்வெட்டுகள் பலவற்றிலும் தேர்த்திருவிழா பற்றிக் கூறப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.


முட்டுக்கட்டை

அரவவரமயவவயகோயில் தோத்திருவிழாவில் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக அவர்களுக்குப் பெரியோர் வழங்கும் காசினை 'தேர்க்காசு' என்று வழங்கு வதனூடாக ஆலயத் தேர்விழா ஒரு பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம். இது போலவே தனது மாப்பிள்ளைக்கு இவ்விழாவை ஒட்டி மாமனார் அளிக்கும் சன்மானம் 'தேரடிச்சம்பாவனை' என்றும் கூறப்படும். தேரோடும் வீதியில் இடத்திற்கிடம் அதனை நிறுத்தி வைக்கவும் அதனை திசை திருப்பவும் தேர்ச்சில்லிற்கு 'முட்டுக்கட்டை' இடுவர்.

இதனைச் சறுக்குக்கட்டை என்றும் கூறுவதுண்டு. இது போலவே "தேர் நிலைக்கு வந்து விட்டது" என்பது ஒரு பெருங்காரியத்தை நிறைவு செய்ததைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுவதையும் அவதானிக்கலாம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தேர் நிலைக்கு வர குறைந்தது இரண்டு மூன்று நாள்களிலிருந்து ஒரு வாரம் பத்து நாள் என்றெல்லாம் ஆகிவந்த காலத்தில் 'தேரோடு கிளம்பி தெருவோடு நின்றாளாம்' என்றே ஆண்டாளுக்கு ஒரு வாக்கிய வழக்கு உள்ளது.

தொடர்ச்சி 14 ம் பக்கம்



13ம் பக்க தொடர்ச்சி....

# இலங்கையில் சில ஆலயங்களில் அம்பாள் தேரைப் பெண்களே இழுக்கும் வழக்கமுண்டு.

udupi-brahma-ratha இத் தேர் விழா பற்றி ஈழத்தின் புகழ்பூத்த பேராசிரியர்.கா.கைலாஸநாத குருக்கள், “இறைவனுக்குச் செய்யப்பெறும் ராஜோபசாரங்களில் தலை சிறந்தது தேர்த்திருவிழா. பிரம்மோத்ஸவத்தில் நிகழ்த்தப் பெறும் விழாக்களில் இது முதன்மையானது.” என்று குறிப்பிடுகிறார். தேர்த்திருவிழாவில் ஊர்கூடித் தேரிழுப்பதும் தேரில் ராஜமூர்த்தம் என்ற சிறப்புடைய விக்கிரஹம் எழுந்தருள்வதும் சிறப்பாகக் கொள்ளப்படுகின்றது. இலங்கையில் தேர்த்திருவிழாவுக்கு முருகன் ஆலயங்களாகில் ஷண்முகரும் சிவாலயங்களில் நடராஜமூர்த்தியும் விநாயகர் ஆலயங்களில் பஞ்சமுக விநாயகரும் தேரில் எழுந்தருளும் வழக்கம் உண்டு. தமிழகத்தில் இவ்வாறான வழக்கம் காணப்படுவதாக அறிய முடியவில்லை.

முன்பெல்லாம் ஆடவர்கள் மட்டுமே தேரை இழுக்கும் வழக்கம் இருந்தது. இலங்கையில் சில ஆலயங்களில் அம்பாள் தேரைப் பெண்களே இழுக்கும் வழக்கமுண்டு.

தற்போது பெருந்தேர்களில் வலப்பக்க வடத்தை ஆடவரும் இடப்பக்க வடத்தை மகளிரும் பிடித்திழுக்கும் வழக்கமும் ஏற்பட்டு வருகின்றது. இயல்பாக தேர் விழாவில் சாதீயப் பிடிமானங்களும் அக்காலத்திலேயே விலக்கப்பெற்று சகோதரத்துவம் வளர்க்கப்பட்டுள்ளது.

ஆனால் சில இடங்களில் விதிவிலக்குகள் இருக்கலாம். “இறைவனின் தேர் வடம் பிடித்தால் இறையுலகில் இடம் பிடிக்கலாம்” என்பது பக்தர்களின் விஸ்வாசம்.




இத்தகு சிறப்புடைய தேர்கள் நம் பண்பாட்டின் ஒரு பாகமாக இருக்கின்றன. சாதாரண மக்களிடம் கூட “திருவாரூர் தேர் அசைந்தாற் போல” என்றும் “திருவாரூர் தேரழகு போல” போன்ற பழமொழிகள் வழக்கிலுள்ளன. எனவே இவற்றைப் பற்றி சிறிதளவேனும் அறிந்து கொள்வது நம் கலை ரசனையை மெருகூட்டும். பண்பாட்டு ஆர்வத்தை வளர்க்கும்

## யேர்மனி டோட்முண்ட் சிவன் கோவில் தேர்.17.07.2016












யேர்மனி டோட்முண்ட்
சாந்தநாயகி சமேத
சந்திர மௌலீஸ்வரர் ஆலய
17.07.2016
தேர் திருவிழா காட்சிகள்.






| | | |
|---|---|---|
| கம் பிள்ளையார் கோவில் | கொடியேற்றம் | 30.07.2016 |
| Ferdinand poggel Str.25 59065 Hamm | தேர் | 07.08.2016 |

## பீலபெல்ட (யேர்மனி)
## அருள்மிகு கல்யாணதிருமுருகன் கோவில்
### 21.08.2016 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா



**மூன்றாவது ஆண்டு அலங்காரத் திருவிழா**
13.08.2016 சனிக்கிழமை தொடக்கம் 22.08.2016 திங்கட்கிழமை வரை
**21.08.2016 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா**

07:30 மணிக்கு ஸ்பன அபிஷேகம், பூஜை, 10:00 மணிக்கு வசந்த மண்டப விஷேட பூஜையைத் தொடர்ந்து, மங்கள வாத்திய சகித சர்வ அலங்கார வள்ளி தேவசேனா சமேத ஷண்முகப்பெருமான் உள்வீதி திருவுலா,வெளிவீதி திருவுலா, வந்து திருத்தேரில் எழுந்தருளல். 12:00 மணிக்கு தேர் புறப்பாடு 15:00 மணிக்கு பச்சைசாத்துதல்

22.08.2016 திங்கட்கிழமை தீர்த்தோற்சவம்
**Begaweg 11, 33649 Bielefeld**
**தொடர்புகளுக்கு: சண்முக சேவையில் திரு. சிவசோதி வரதராஜா**
**Tel: 0176 41 41 56 42, 0176 34 98 73 77**

# காதோடு காதாக
**கலைக்கதிர் கதிர் துரைசிங்கம்**

## தொலைபேசித் தொல்லையைத் தவிர்க்க குறும்பு வழி!

செல்லர்:
நான் எங்கு நிற்கிறேன் என்று கேட்டு அறியவும், நான் என்ன நேரம் வீட்டை வருவேன் என்று தெரியவும், என்ன வாங்கிக்கொண்டு வரவேண்டும் என்று எனக்கு சொல்ல வசதியாக இருக்கவும், என்று மகள் எனக்கு ஒரு செல்போன் வாங்கித் தந்தவள்.

செல் போனை எப்படி On பண்ணுவது. எப்படி Off பண்ணுவது எதை அமத்திக் கதைக்கிறது, எதை அமத்தி நிற்பாட்டுறது, சத்தம் எப்படிக் குறைக்கிறது, வந்த நம்பரை எப்படிப் பார்க்கிறது எண்ட சங்கதி எல்லாம் பேரன் இரண்டு கிழமையாகச் சொல்லித் தந்தது. நான் பாவிக்கப் பழகிவிட்டன்.

சொந்தக்காரருக்கும், நண்பர்களுக்கும் நம்பர் கொடுத்து, கதைச்சுக் கொண்டு வாறேன்.

நல்ல விஷயம் ஒன்று செய்திருக்கிறாள் எனக்கு உம்மைப்போல சந்திச்சுத்தான் கதைக்க வேண்டும் என்ற நியதி இனி இல்லை.

சோமர்: மாற்றங்களோடு நாமும் மாறவேண்டும் வாழ்த்துக்கள்

செல்லர்: நல்ல வசதியான சாமான். கதையிலை நல்லாய் நேரம் போகுது. ஆனால் சிலவேளைகளில் தொல்லை பேசியாக இருக்கு, தவிர்க்க வேண்டியதாகவும் இருக்கு.

**Answer பண்ணாமல் இருக்க வழி!**
பிறகு எடுத்துச் சொல்ல நம்பகரமான



சாட்டு, கதைச்சுக்கொண்டு இருக்கும் போது தொடர்பை வெட்ட யுக்தி, ஆகிய மூன்ற கைங்கரியங்களுக்கும் நல்ல உபாயம் சொல்லித்தாரும்.

சோமர்: **Answer பண்ணாமல்விட:**

எடுக்காமல் விடும் அல்லது Off பண்ணி விடும். சத்தம் என்றால் ,Silent இல் விடும்.

பிறகு எடுத்துச் சொல்ல நல்ல சாட்டு: Silent இல் விட்டனான் கேட்கவில்லை. மேசையில் வைச்சிட்டு மறந்திட்டேன். யக்கட்டுக்குள் வைச்சிட்டு இருந்திட்டேன். கார் ஓடிக்கொண்டு இருந்தனான், பொலிஸ் பக்கத்திலை. பஸ்சில் ஏறிக்கொண்டு நின்றனான். On பண்ண மறந்திட்டேன். Charge இறங்கிட்டுது.

**கதை நடுவே வெட்ட:**

meeting இல் இருக்கின்றேன். பிசி பிறகு எடுக்கின்றேன். Chrge இறங்கிப் போச்சு பிறகு எடுக்கின்றேன். Lift இல் போறேன் Signal குறைவாக இருக்கு, மருமகள் வேலையில் நின்ற அடிக்கிறாள். மனிசி கூப்பிடுது. Long Distance Call வருது.


**மங்கல இசைக் குழு**
நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman





Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236
Mob: 0049 157 89 15 95 71








RKL IMMO .de IMMOBILIEN & BAUFINANZIERUNG
Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan | Tel. 05723-914519 | www.rklimmo.de | info@rklimmo.de



Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com

தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால்

## சுவர் இல்லாமலும் சித்திரம் வரையலாம்.




07

# பதின் வயது, தடுமாறும் மனது

**சேவியர்**

பதின்வயது பக்குவமாய்க் கையாள வேண்டிய வயது. சட்டென உடைந்து விடும் முட்டையைப் போல சில நேரம், உடைக்கவே முடியாத பாறை போல சிலநேரம் என மாறி மாறி வித்தை காட்டும் அவர்களுடைய மனம் புதிர்களின் புகலிடம். "தன்னம்பிக்கையெல்லாம் பெரியவர்களுக்கான விஷயம்" என பல வேளைகளில் நாம் ஒதுக்கி வைப்பதுண்டு. உண்மையில் தன்னம்பிக்கை பதின் வயதுப் பெண்களுக்குத் தான் ரொம்பவே தேவை.

இன்றைய வாழ்க்கைச் சூழல் பதின் வயதுப் பெண்களின் மீது ஏகப்பட்ட சுமைகளை இறக்கி வைக்கிறது. அவர்களுக்கு முன்னால் விளம்பர மாடல்களும், திரை நட்சத்திரங்களும் ரோல் மாடல்களாக விரிகிறார்கள். நட்சத்திரங்களின் உடலமைப்பு, நிறம், குணாதிசயம் இவையெல்லாம் இருந்தால் தான் அங்கீகரிக்கப்படுவோம் எனும் தப்பான எண்ணம் அவர்களுடைய மனதில் பசுமரத்தாணியாய் பதிந்து விடுகிறது. அவர்களுடைய தன்னம்பிக்கையின் மேல் விழும் மிகப்பெரிய அடி இது !

அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. இன்றைய முகப்பூச்சு விளம்பரங் களையே எடுத்துக் கொள்ளுங்களேன். கறுப்பு நிறம் நல்லதென்று ஏதேனும் ஒரு முகப்பூச்சு சொல்கிறதா ? கறுப்பிலிருந்து எப்படி வெளியே வரலாம் என்பதை மட்டுமே அது பேசுகிறது. அதாவது சிவப்பு நிறம் மட்டுமே அழகானது, மற்ற எந்த நிறமானாலும் பூச்சுகளைக் கொண்டு சரி செய்யப்பட வேண்டும் என்பதே அவை போதிக்கும் பாடம். இந்தியாவில் எத்தனை கருப்பு நிறப் பெண்கள் இருப்பார்கள் ! அவர்களில் எத்தனை பேருடைய தன்னம்பிக்கையை இத்தகைய விளம்பரங்கள் தவிடு பொடியாக்கியிருக்கும் ?

இப்படி சமூகமும், ஊடகங்களும், சக மனிதர்களும் இடுகின்ற பட்டியலுக்குள் அடங்க முடியாமல் போகும் போது பதின் வயதினரின் தன்னம்பிக்கை தவிடு பொடியாகி விடுகிறது.

பதின்வயதினரின் தன்னம்பிக்கை உடைந்து போக சின்னச் சின்ன விஷயங்களே போதுமானது ! நண்பர்கள் மத்தியில் பாப்புலராய் இருப்பது பதின் வயதினருக்கு இனிமை தரும் சமாச்சாரம். அந்த பாப்புலாரிடி இல்லாமல் போகும் போது கூட அவர்களுடைய தன்னம்பிக்கை சிதைந்து போய் விடுகிறதாம். ஃபேஸ் புக்கில் நிறைய நண்பர்கள் சேரவில்லை என்றாலே கவலைப்பட்டு அப்செட் ஆகி விடும் இளம் பெண்கள் இருக்கிறார்கள்.

எட்டு, ஒன்பது வயதுகளில் பெண்களிடம் தன்னம்பிக்கை அபரிமிதமாக இருக்கும் என்கின்றன பல்வேறு ஆய்வு முடிவுகள். அதே பெண்கள் சில ஆண்டுகள் கழிந்து பதின் வயதுக்குள் நுழையும்போதோ தன்னம்பிக்கை ஆட்டம் காண ஆரம்பித்து விடுகிறது. இதற்கு அவர்களுடைய உடல் மாற்றங்களும் ஒரு முக்கிய காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

பெரியவர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய தன்னம்பிக்கையை அவர்களே தான் கட்டி எழுப்ப வேண்டும். பதின் வயதுப் பெண்களுக்கோ, பெற்றோர், நண்பர்கள், உடன்பிறந்தோர் ஆகியோருடைய உதவியும் வெகுவாகத் தேவைப்படுகிறது. அதற்காக அட்வைஸ் மழையை அவிழ்த்து விடவும் முடியாது. காரணம் பதின் வயதுப் பெண்களுக்கு அட்வைஸ் என்பது உலக மகா அலர்ஜி. எனவே சொல்ல வேண்டியதை அவர்களுடைய பாணியில், அவர்களுடைய மொழியில் நாசூக்காகச் சொல்ல வேண்டும் !.

**ஜெர்மனியில் நடந்த மனக்கணக்கு போட்டியில் உலகக் கோப்பையைப் பெற்றவர் பிரியான்சி ஸொமானி.**

குறிப்பாகப் பெற்றோர் தங்கள் பதின் வயதுப் பிள்ளைகளிடம் நதியில் மிதக்கும் படகைப் போல மிதந்து வாழ்வைப் புரிய வைக்க வேண்டும்.
"எங்க காலத்துல பன்னிரண்டு முழம் புடவை கட்டினோம்..." என கதைகளை அவிழ்த்து விட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. சக தோழிகளெல்லாம் ஜீன்ஸில் சுற்றும் போது, உங்கள் மகள் புடவையில் போனால் அவளுடைய தன்னம்பிக்கை தான் பாதிக்கப்படும். எனவே குணாதிசயம் சிதையாமல் சில அடையாளங்கள் மாறிப் போவதைக் கண்டு பெற்றோர் கவலைப்பட வேண்டியதில்லை.
குறிப்பாக தலை முடியை ஸ்டைலாக வெட்டுவது, நிறம் மாற்றுவது, தங்க நகையை கழற்றி வைத்து விட்டு தோசைக் கல் கம்மல் மாட்டுவது, இதெல்லாம் பதின் வயது பேஷன். தன்னைச் சுற்றியிருக்கும் நண்பர்களைப் போல உடையணியாவிடில் நிராகரிக்கப்பட்டு விடுவோம் எனும் பயம் அவர்களிடம் இருக்கும். எனவே அவர்களுடைய மாற்றத்தின் நிலையறிந்து அனுசரித்துப் போவது அவர்களுக்கு உற்சாகம் ஊட்டும்.
உங்கள் மகள் செய்யும் அனைத்தையும் நீங்கள் ஒத்துக் கொள்ள வேண்டுமென்பதில்லை. ஆனால் புரிந்து கொள்ள முயலுங்கள். உங்கள் பதின் வயதில் நீங்கள் எப்படி இருந்தீர்கள் என நினைவு வருகிறதா ?

தொடர்ச்சி 17 ம் பக்கம்

AMMA's food

ammas-food.de

டோட்மூண்ட் நகரில் ...

அம்மா'ஸ் உணவகம்

அறுசுவைக்கறிகளுடன் சோறும், புறியாணியும்
கொத்து ரொட்டி ,இட்டலி , தோசை, வடை இடியப்பம்
இவற்றுடன் இன்னும் இன்னும் உங்கள் விருப்பறிந்து
தரக்காத்திருக்கின்றோம்!

உங்கள் இலத்தின் மங்கல வைபவங்கள் அனைத்திற்கும்
அம்மாவின் சமையலை நினைவூட்டும் உருசியுடன்
தயாரித்து பரிமாறுவோம்!

காலை 11.00 மணி முதல் மாலை 11.00 மணிவரை
செவ்வாய் கிழமை விடுமுறை!

அம்மாஸ் உணவகத்தின் சிறப்பு அம்சம்
சுவையைச் சுடச்சுடத் தருவதும் ஆகும்.




Amma's Food
Rheinische Straße 80A
44137 Dortmund

Tel:0231 33 89 86 91

Fax:0231 33 89 86 93

**தன்னம்பிக்கைத் தொடர்...**

பெரும்பாலும் தனிமையிலும், குழப்பத்திலும் கழிந்திருக்கத் தானே வாய்ப்பு அதிகம். அதே உணர்வுகள் உங்கள் மகளுக்கும் இருக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் மகளை ஏதாவது ஒரு நல்ல பொழுதுபோக்கில் ஈடுபட வையுங்கள். அது அவளுக்கு ரொம்பப் பிடித்ததாக இருக்க வேண்டியது அவசியம். உங்களுக்குப் பிடித்ததை அவளிடம் திணிக்காதீர்கள். அது அவளுக்கு ஹாபியாய் இருக்காது ! வேலையாய் மாறிப் போய்விடும். அதே போல சமூகக் குழுக்கள், பள்ளிக் குழுக்கள், ஆலயக் குழுக்கள் போன்றவற்றில் ஈடுபட வையுங்கள். அவர்களுடைய தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்ப இவையெல்லாம் உதவும்.

எந்தக் காரணம் கொண்டும் பதின் வயதினரை இளக்காரமாய்ப் பேசாதீர்கள். அவளுடைய நடை உடை பாவனைகளைக் கிண்டலடிக்கவே அடிக்காதீர்கள். குறிப்பாக பிறருக்கு முன்னால் வைத்து அப்படி ஒரு சிந்தனையே உங்களுக்கு வர வேண்டாம். அவளுடைய தன்னம்பிக்கையின் வேர்களில் அது கோடரியாய் விழும்.

உங்கள் மகள் தவறான வழியில் செல்கிறாள் எனில் அவளுக்கு சரியான பாதையைக் காட்ட வேண்டியது உங்கள் கடமை. அதில் இரண்டு வகை உண்டு. “நீ செய்வது தவறு” என்று தவறைச் சுட்டுவது ஒரு வகை, எது சரியானது என வழிகாட்டுவது இன்னொரு வகை. நீங்கள் இரண்டாவது வகையைத் தேர்ந்தெடுப்பது நல்லது என்கின்றனர் உளவியலார்கள்.

உங்கள் மகளிடம் நிறைய நேரம் செலவிடுங்கள். பெரும்பாலான பெற்றோர் செய்கின்ற மிகப்பெரிய தவறு மகள் வளர்ந்து விட்டால் தனியே விட்டு விடுவது. இது பெற்றோர் குழந்தைகளிடையே பெரிய இடைவெளியை உருவாக்கி விடும். பதின் வயதினருக்கு அது மிகுந்த மன உளைச்சலைத் தரும். எனவே உங்கள் மகளுடன் போதுமான நேரம் செலவிட வேண்டும் என்பதில் உறுதியாய் இருங்கள். அது அவளுடைய பாதுகாப்பு உணர்வை அதிகரிக்கும். அந்தப் பாதுகாப்பு உணர்வே அவளுடைய தன்னம்பிக்கையைக் கட்டி எழுப்பும்.

உங்கள் மகளுடைய ஆரோக்கியத்தில் கவனமாய் இருங்கள். உடற்பயிற்சி செய்ய ஊக்கப்படுத்துங்கள். சரியான உடற்பயிற்சி உங்கள் மகளுடைய தன்னம்பிக்கையை வளர்க்கும். அவளுடைய மன அழுத்தம், தடுமாற்றம் போன்ற பல விஷயங்கள் மறையும். ஏழைகளுக்கு உதவுவது, நேர்மையாய் இருப்பது, நல்ல கல்வி, ஆரோக்கியமான உணவுப் பழக்கம் போன்ற விஷயங்களிலெல்லாம் உங்கள் மகளை ஈடுபடுத்துங்கள். இவையெல்லாம் உங்கள் மகளை தன்னம்பிக்கையில் வளர்த்தெடுக்கும் விஷயங்கள்.

பாராட்டுங்கள். உங்கள் மகளின் சின்னச் சின்ன நல்ல விஷயங்களுக்கெல்லாம் அவளைப் பாராட்டுங்கள். அவளுக்குத் தன்னம்பிக்கை தரக் கூடிய எந்த விஷயத்தையும் பாராட்டத் தயங்காதீர்கள். ஒருவேளை உங்கள் மகள் குண்டாய் இருப்பதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், அவளுடைய தோற்றம் அழகாக இருக்கிறது என பாராட்டுங்கள் !
விளையாட்டில் ஆர்வமுடைய பிள்ளைகளைத் தடுக்காதீர்கள். விளையாட்டு அவர்களுடைய உடல் ஆரோக்கியம், குழு மனப்பான்மை போன்ற பல விஷயங்களுக்கு நல்லது. கூடவே அவர்களுடைய மன அழுத்தங்களும் இதனால் அடிபட்டுப் போய் விடும்.

இந்தப் பதின் வயது தான் பாலியல் ஈர்ப்பு, போதை, அதீத பொழுது போக்கு என எல்லை தாண்டிச் சென்று சிக்கி விடும் அபாயம் உண்டு. குறிப்பாக தந்தையின் வழிகாட்டுதல் இல்லாத பெண்களும், தன்னம்பிக்கை இல்லாத பெண்களும் தான் இத்தகைய சிக்கல்களில் போய் சிக்கிக் கொள்வார்கள் என்கின்றன ஆய்வுகள். எனவே பதின் வயது மகளுக்கு தன்னம்பிக்கையை




ஊட்டும் வழிகளை விட்டு விடாமல் இருக்க வேண்டியது அவசியம். சினிமா பிரபலங்கள், விளம்பர மாடல்களெல்லாம் உண்மையைப் பிரதிபலிப்பதில்லை எனும் விஷயத்தைப் புரிய வையுங்கள். அதீத மேக்கப், லைட்டிங், கேமரா கோணம், கிராபிக்ஸ் என ஏகப்பட்ட விஷயங்கள் இதில் உண்டு. இவற்றை உங்கள் மகளிடம் இயல்பாக விளக்கலாம். இவர்களைப் போல ஆக வேண்டுமென பதின் வயதினர் பலரும் டயட், ஸ்லிம் மாத்திரை என தப்பாய் குதிக்கும் போது அவர்களுடைய உடலும் மனமும் பாதிப்படைகிறது. பலர் உயிரை இழக்கவும் இது காரணமாகி விடுகிறது.

சுருக்கமாக பதின் வயதுப் பெண்கள் தன்னைப் பற்றி அறிந்து கொண்டிருப்பதும், தங்களால் எதையும் செய்ய முடியும் என ஆழமாய் நம்புவதும், சமூகத்தின் எதிர்பார்ப்புகளின் எல்லைகளில் உலவ முடியும் எனும் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டியதும் அவசியம். பதின் வயதினரின் தன்னம்பிக்கையைக் கட்டி எழுப்புவது வலுவான ஒரு இளைய சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்குச் சமம். பதின் வயதை உரமூட்டுவோம்!! எதிர் காலத்தை நிறமூட்டுவோம்

பதின் வயதுப் பிரபலங்கள்.
பிரியான்சி ஸொமானி (Priyanshi Somani ).

**ஜெர்மனியில் கடந்த ஆண்டு நடந்த “மெண்டல் கால்குலேஷன்” எனும் மனக்கணக்கில் உலகக் கோப்பையைப் பெற்றவர்**



Seven Of The World’s Most Talented Kids

ஜெர்மனியில் கடந்த ஆண்டு நடந்த “மெண்டல் கால்குலேஷன்” எனும் மனக்கணக்கில் உலகக் கோப்பையைப் பெற்றவர் பிரியான்சி ஸொமானி. அந்தப் பெருமையைப் பெறும்போது அவருடைய வயது வெறும் பன்னிரண்டு. 1998ம் ஆண்டு பிறந்தவர் இவர். மனக்கணக்கில் கில்லாடி. ஆறு வயதாக இருக்கும்போதே மனதில் கணக்குப் போட்டுப் பழகினாராம். உலக அளவில் பட்டையைக் கிளப்பும் இந்தச் சிறுமி, இது வரை பதினாறு நாடுகளிலிருந்து 37 பதக்கங்களை அள்ளியிருக்கிறார். ஆறு இலக்க எண் ஒன்றின் ஸ்கொயர் ரூட்டை மனக்கணக்காய்க் கண்டு பிடிக்க இவருக்கு ஏழு நிமிடங்கள் கூட தேவைப்படவில்லை. பத்து இலக்க எண்கள் பத்தைக் கொடுத்தால் சட்டென மனக்கணக்காய்க் கூட்டிச் சொல்கிறார். எட்டு இலக்க எண்கள் இரண்டைக் கொடுத்தால் அதைப் பெருக்கி எவ்வளவு வருகிறது என சில நிமிடங்களில் சொல்லி பிரமிப்பூட்டுகிறார். கால்குலேட்டர் இருந்தாலே நமக்குக் கை உதறுகின்ற கணக்குகளையெல்லாம் ஊதித் தள்ளும் இவர் இந்தியர் என்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி நமக்கு.





# நின்னைச் சரணடைந்தேன்

5

கலாசூரி திவ்யா சுஜேன்



வாழ்வியல் வசந்தங்களில் அரிய பெரிய வரமாய் அமையக்கூடியது யாதென வியக்கும் போது???

ஊனுளம் உருக நம் மெய்யன்பை காதலன் / காதலியிடம் வாரியிறைக்கும் உறவில், அவர்களால் நாம் காதலிக்கப்படுவதை தவிர, அவர்கள் காதலை நாமும் அனுபவிப்பதை விட வேறு ஏதுவாக அமையமுடியும் என ஊர்ஜிதமாகின்றது.

அவ்வாறு இவ்வுடலைச் சுமந்து வந்த ஆன்மாவின் தேவதாகம் இதுவென எண்ணும் வண்ணம் நயாகராவின் எழுச்சி போல் தூய நேய அன்பினால் அணையற்று அணைக்கும் கண்ணம்மாவின் காதலாழியுள் வீழ்கிறார் பாரதி.

**“சுட்டும் விழிசுடர் தான் - கண்ணம்மா**
**சூரிய சந்திரரோ?**

இரவு பகல் இயக்கமாய் சகல காரியங்களின் மூலமாய் துணையானவை சூரியனும், சந்திரனும் என் வாழ்வின் இயக்கமே நின் விழியசைவோ எனக் கருதியோ? இல்லை சிவபிரானின் வலக்கண் சூரியனாயும் இடக்கண் சந்திரனாயும் அமைவது போல் என் சிவமே, இறையே நீதான் கண்ணம்மா எனக் கடவுளிலும் காதலைப் பெரிதாய் மதிக்கும் நிலை கருதியோ? கண்ணம்மாவின் இரு கண்களையும் சூரியன், சந்தரின் என ஒப்பிடுகிறார்.

பெருஞான வெளியின் உயர் தடமாய் காதலைக் காணும் பாரதி, இரு விழிகளில் ஞானஒளி வீசுவதாலும், அகத்தினுள்ளாடும் காதல் தீ கண்களில் தெறிப்பதாலும், ஞாயிறும், திங்களும் இரு கண்களென உவமை சொன்னதாலும் விழி சுடர் எனக் கூறுகிறார். அதிலும் தன் புலன்களை அறியும் அறிவு கொண்டதாயும் குறிப்பறிந்து செயல்படக்கூடிய கண்கள் என்பதாலும் சுட்டும் விழிச்சுடர் என மேலும் மேன்மை சேர்க்கிறார்.

**“வட்டக் கரிய விழி கண்ணம்மா**
**வானக் கருமை கொல்லோ?**

விழியழகிலிருந்து விடுபட முடியாதவராய் இன்னமும் விழிமேல் தஞ்சம் புகுந்து வட்ட வடிவிற்கு உருவகப்படுத்த முயற்சிக்கிறார். ஒரு பெண்ணின் கண் உரு கொண்டு அவள் குணம் கூறும் வித்துவத்தன்மையில் வட்ட வடிவக் கண்கள் ஈர்ப்பின் முதலிடமாய், தேசுலவும் தெளிவிடமாய் அமையலாம். ஏலவே இவ்வடிவை மனத்திருத்தி சூரிய, சந்திரரை வட்ட உருவென வெளியுருப்படுத்தி உவமித்துள்ளார். விரிந்த வானம் போலான எல்லையற்ற என் காதல், இந்த சிறு வட்ட விழிக்குள் அடக்கம் என்று வானத்தோடு விரிவுபடுத்தும் பாரதி கருமை நிறத்தின் அழகிற்கும் துணையாகிறார்.

**“பட்டுக் கருநீலப் புடவை**
**பதித்த நல்வயிரம்**
**நட்ட நடு நிசியில் தெரியும்**
**நட்சத்திரங்களடீ”**

அகக் கண்களுள் கண்ணம்மாவின் எழில் காணும் கற்பனைத் திரையில் அவளைப் பட்டு கருநீலப் புடவையில் காண்கிறார். ஆங்காங்கு தெரியும் அவள் அங்கச் செறிப்பை நடுநிசியில் தெரியும் நட்சத்திரம் என்கிறார்.

“சோலை மலரொளியோ உனது
சுந்தரப் புன்னகை தான்”

ஓர் சோலையின் எழில் அத்தனையும் ஒவ்வொன்றாய் அனுபவிக்கக்கூடிய பேரானந்த அழகு அங்கு தேனுண்ண வரும் வண்டிற்கு காத்துக் கிடந்து மொட்டவிழ்ந்த மலர்களை காணுமிடத்து கண்ணம்மாவின் இதழ்கள் நினைவு மழையில் தூறலாகிறது. நம் அன்புணர்வின் ஒளியைப் புன்னகையால் மொழி பெயர்க்கும் அவள் சுந்தரப் புன்னகையை எண்ணுகிறார். அவை தன் வாழ்விற்கு மென்மையானவை, காதலிற்கு ஒளியூட்ட வல்லன என்பதனால் மலர் ஒளியிற்கு உவமிக்கிறார்.

**“நீல கடலலையே உனது**
**நெஞ்சின் அலைகளடீ”**

விரிந்து கிடக்கும் கடலுக்கு பேரழகு தந்து பெருவோலம் கூட்டி மெல்லக் கலை பயிலும் அலையழகிற்கு விலை ஏது? தொலைவிலிருந்தே ஆரவாரம் கூட்டி கரை தொட்டதும் அடங்கும் நீலக்கடலலை போல் எனைத் தீண்டினால் அடங்கவல்லன கண்ணம்மாவின் நெஞ்சலைகள் எனக் கூற முயற்சிக்கிறார்.

**“கோலக் குயிலோசை உனது**
**குரலினிமையடீ**
**வாலைக் குமரியடீ கண்ணம்மா**
**மருவக் காதல் கொண்டேன்”**

ஒலிக்கும் ஓசைக்கும் இடையான வேறுபாட்டை நன்கு உணர்ந்தவராய், தன் செவிகளில் சுருதி சேர்த்து வரும் நாதமான ஓசை கூடி நின்ற அழகிய குயில்களின் பரிபாஷையல்ல உன் குரலின் இனிமையது. நாம் கூடும் வேளை நிசப்த வெளியில் சப்த சிருங்காரம் செய்யும் ஓசையது. கண்ணம்மா

தொடர்ச்சி 19 ம் பக்கம்


கேவலார் மாதாவின் புனிதத் திருவிழாவில் (13.08.2016) சிறப்புச் சலுகைகள்



# எதற்காகத் தாயகத்தில் விடுமுறையைக் கழிக்கின்றோம்

றஜினா தருமராஜா







எமது பெற்றோர்கள் புலம்பெயர்ந்து வந்ததமையால் நாங்கள் எல்லோரும் வெளிநாட்டில் பிறந்து வளர்ந்து வருகின்றோம். எங்களின் பெற்றோர்கள் பிறந்து வளர்ந்த மண்ணை, ஊரை, இருப்பிடங்களைக் காண்பதற்காகவே தாயகத்திற்குச் செல்கின்றோம்.
முக்கியமாக அவர்கள் கல்வி கற்ற பாடசாலைகளையும் பார்த்து ரசிக்க ஆவலாக இருக்கின்றது. சீருடைகளோடு போவதைக் காண்பதற்காகவே கூட நாங்கள் செல்கிறோம்.

வெளிநாட்டில் எல்லா வசதிகளுடனும் வாழ்ந்தாலும் அந்நியராகத் தான் வாழ்கின்றோம். ஏதோ ஒன்றை விட்டு வந்துவிட்டதாகவே இருக்கின்றது. ஆகவே உறவினரைக் காண்பதற்கும், சொந்த பந்தங்களோடு சேர்ந்து பேசுவதற்கும் பழகுவதற்கும் அவர்களிடம் செல்கிறோம். முழுமையாகத் தமிழ்மொழியிலேப் பேச வாய்ப்புக் கிடைக்கிறது.

சொந்த நாட்டில் வயிராற உண்ணவும் கவலைகளை மறப்பதற்கும் கோயில்களுக்குச் சென்று நேர்த்திக்கடன்களை முடிப்பதற்கும் ஆவலோடு செல்கின்றோம்.
எமது முன்னோர்களின் கட்டடக்கலைகளைகளையும், திறமைகளையும் சுற்றுலாப் பயணிகளைப் போல் பார்த்து வியந்து போவதற்கும் தாயகத்திற்கு பயணிக்கிறோம்.

இணையத்தளங்களிலும் நூல்களிலும் பார்த்தவற்றை நேரே காண் பதற்காகவும்.
பரதநாட்டியம், சங்கீதம் பயிலவும் செல்கிறார்கள்.

ஒரு சிலர் தங்களது பிள்ளைகளின் பூப்புனித நீராட்டு விழாவையும், மற்றவர்கள் திருமண விழாவையும் செய்வதற்கும் செல்கின்றனர்.

சிலரின் நோய்கள் மாறுவதற்கு ஆயுள்வேத வைத்தியத்தைத் தேடுகின்றனர். தாயகத்திற்குச் சென்று வைத்தியத்தை மேற்கொள்கின்றனர்.

இன்னும் சில பேர் அவர்களின் சொத்துக்களைக் காக்கச் செல்கின்றார்கள். பல நிலங்களை வாங்கி வீடுகளையும் கட்டி விடுகிறார்கள், இதன் நோக்கம் சில காலங்களில் அவர்களின் தாய்நாட்டுக்குச் சென்று நிம்மதியாக வாழலாம் என்பது தான்!

இன்னும் சிலர் அவர்களின் செல்வாக்குகளைக் காட்டச் செல்கிறார்கள். இவர்கள் உதவிகள் செய்தால் நன்றாக இருக்கும்!
இதையும் தாண்டி சிலர் ஆதரவற்றக் குழந்தைகளுக்கு உதவிசெய்யவும், அவர்களைத் தத்தெடுக்கும் வேலைகளைப் பார்க்கவும் செல்கிறார்கள்.

---

18ம் பக்க தொடர்ச்சி....

# நின்னைச் சரணடைந்தேன்

நீ குமரியல்ல வாலைக்குமரி இளங்கன்னி உனைத் தழுவிப் புணரக் காதல் கொண்டுள்ளேன் என்கிறார். வாலைக்குமரி என்பதில் வயதைக் குறித்ததாகவின்றி அன்பினால் ஆனந்தம் வழிந்தோடவல்ல உறவினைப் பரிசளிக்கும். காதலி பாரதியின் கண்களில் என்றும் செல்லமாய் குழந்தையாய் இளமையாய் ப்ரியமாகிறாள்.

**“சாத்திரம் பேசுகிறாய் கண்ணம்மா**
**சாத்திரம் ஏதுக்கடீ**
**ஆத்திரம் கொண்டவர்க்கே கண்ணம்மா**
**சாத்திரம் உண்டோடீ?”**

பன்னெடுங்காலமாய் செய்யத்தக்கன, செய்யத்தகாதன என யாரோ போட்டு வைத்த வாய்ப்பாடுகளுள் முடங்கி பவித்திரமான ப்ரியங்களைப் புடவைக்குள் மறைத்து வழங்கங்களோடு துவைத்துப் போடும் சாத்திரம் ஏதுக்கு? அன்பின் தீரம் அறிந்தோர்க்கு உன்னத உறவு இற்றைக்கு ஏற்பட்டதல்ல முற்பட்ட பிறவிகளின் தொடர்தேடல் என்றுணர்ந்தோர்க்கு இந்த சாத்திரமும் சம்பிரதாய வழக்கங்கள் உண்டோ?


ஆன்ம பந்தமாய், கர்ம சம்பந்தமாய் இணையும் இரு ஆன்மாக்களை எந்த சாத்திர சக்தியாலும் கட்டிப்போட்டு காவல் செய்ய விடலாமோ? என்று உறுதியாய் தம் உயிருறவில் உண்மை கொண்டு கூறுகிறார் காதலன் பாரதி.

**“மூத்தவர் சம்மதியில் வதுவை**
**முறைகள் பின்பு செய்வோம்**
**காத்திருப்பேனோடீ இதுபார்**
**கன்னத்து முத்தமொன்று”**



இருமனம் இணைந்த ரகசிய சுகத்தை பரகசியப்படுதத்தும் திருமண முறைகளை நம்பி நாணாதே. அவற்றை நியமித்த நம் முற்பட்ட சந்ததியான மூத்தோர் சம்மதியில் பின்பு ஒரு காலத்தில் அவ்விதிகளை செய்வோம். அது நம் தூய பந்தத்திற்கான தேவையும் அல்ல. இத்தருணம் சருகான ஊனில் சிறகான எண்ணச் சுவையெலாம் ஒன்றே ஒன்று தான்.

காத்திருக்கிறேன்............... கண்ணம்மா!!
காத்திருக்கிறேன்
க-ன்-ன-த்-து மு-த்-த-மொ-ன்-று!!!



# யேர்மனியில் மாதாவுக்கு மணி மகுடம்

**சேவியர்.**

அன்னை மரியாள் என்றதும் மனக் கண்ணில் என்ன விரிகிறது ? ஒரு மென்மையான கருணை வடியும் முகம். குழந்தை இயேசுவை தாங்கியிருக்கும் ஒரு தாய்மையின் வடிவம். அல்லது துயரத்தின் விழிகளோடு, இயேசுவின் வலிகளையும், மரணத்தையும் காணும் உருவம். இப்படித் தான் உலகின் பெரும்பாலான ஓவியங்களும், சிற்பங்களும் அன்னை மரியாவை காட்சிப்படுத்துகின்றன.

உலகெங்கும் குறைந்தபட்சம் 37 மில்லியன் கிறிஸ்தவ ஆலயங்கள் இருக்கின்றன. இவற்றில் கத்தோலிக்க தேவாலயங்கள் அனைத்திலும் தவறாமல் பார்க்க முடிகின்ற ஒரு சிற்பம் அன்னை மரியாளின் சிற்பம். அதே நேரத்தில், கத்தோலிக்கம் சாராத எந்த ஒரு ஆலயத்திலும் நீங்கள் அன்னை மரியாளின் சிலையைப் பார்க்க முடியாது.

'ஒரு மனிதனின் உடலிலுள்ள உறுப்புகளெல்லாம் நாவாக மாறினாலும் மரியன்னையை அவருடைய தகைமைக்கு ஏற்றவாறு புகழ முடியாது' என்கிறார் புனித அகுஸ்தீனார். 'அருள் நிறைந்த மரியே வாழ்க' என்று கபிரியேல் தூதர் மரியாளை வாழ்த்துகிறார், தூதர்கள் தாமாக எதையும் செய்வதில்லை. அவர்கள் கடவுளின் கட்டளைப்படியே இயங்குகிறார்கள். எனவே இந்த வாழ்த்தும் கடவுளிடமிருந்தே வந்திருக்கிறது. எனவே அன்னை மரியாள் வாழ்த்துதலுக்கு உரியவரே.

'தூய ஆவி நிரம்பியவராய் பெண்களுக்குள் நீர் ஆசீர்வதிக்கப் பட்டவர். என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார் ?' என்று எலிசபெத் மரியாவை வாழ்த்துவதாய் விவிலியம் சொல்கிறது. எலிசபெத் வாயிலாக கடவுள் இயேசுவை 'ஆண்டவரின் தாய்' என்கிறார்.

அன்னை மரியே 'இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னை பேறுபெற்றவர் என்பர்' என்கிறார். விவிலியம் சொல்வதெல்லாம் இறை ஏவுதல் என்றும், தூய ஆவியின் ஏவுதல் என்றும் கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்.

இயேசு சிலுவையில் உயிர் பிரியும் தருணத்தில் சீடரிடம் 'இதோ உன் தாய்' என்றது மனுக்குலத்துக்கே அவரைத் தாயாக்குவது போல தான். சீடர்களுக்கு இயேசுவழங்கும் அறிவுரைகளை நமக்கே வழங்கப்படும் அறிவுரைகளாக நாம் ஏற்றுக் கொள்ளும் போது, சீடரிடம் ஒப்படைத்த அன்னையை நம்முடைய அன்னையாய் பாவிப்பதே பொருத்தமாகும்.

அப்படி உலகெங்கும் பல்வேறு அன்னை மரியாள் ஆலயங்கள் மிகப்பெரிய வசீகரத்தோடும், புகழோடும் நிலைபெற்றிருக்கின்றன. அந்த ஆலயங்கள் பல்லாயிரம் மக்களை ஆசீர்வதித்திருக்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை. அன்னை மரியாள் மக்களுக்கு காட்சி தந்த இடங்களிலெல்லாம் அவருக்கு ஆலயங்கள் எழுப்பப்பட்டன. வேளாங்கன்னி, பாத்திமா, உவரி என தமிழக மாதா ஆலயங்கள் பெரும்பாலும் மரியாள் காட்சி கொடுத்த இடங்களில் எழுப்பப்பட்டவையே.

அப்படிப்பட்ட பிரமிப்பூட்டும் ஆலயங்களில் ஒன்று ஜெர்மனியின் கேவலார் ஆலயம். இதுவும் அன்னை காட்சி கொடுத்த பின்னணியில் எழுப்பப்பட்டது என்கிறது வரலாறு. 1641 ல் மெக்கேல் ஸ்ரோஷ் என்பவருக்கு மாதா குரல் மூலமாகவும், காட்சி மூலமாகவும் தரிசனமானதன் விளைவு தான் இந்த ஆலயம். 375 ஆண்டுகளாக இந்த ஆலயம் கம்பீரமாய் காட்சியளிக்கிறது.

மாதா ஆலயங்களுக்கு ஒரு சிறப்பு தகுதி உண்டு. பிற மத மக்கள், குறிப்பாக இந்துக்கள், அதிகமாக வருகின்ற கிறிஸ்தவ ஆலயம் மாதா ஆலயம் தான். அன்னையின் வடிவில் ஆண்டவரைத் தரிசிக்கும் மனப்பாங்கு அவர்களுக்கு இயல்பிலேயே உண்டு. தங்களுடைய மனதின் சோகத்தை மாதாவிடம் கொட்டி விடும் சிந்தனையே அவர்களை இந்த ஆலயங்களுக்கு அழைத்து வருகிறது.

கேவலார் ஆலயமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆண்டுக்கு பத்து இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற இந்த ஆலயத்தில் வருபவர்களில் கணிசமானவர்கள் பிற மத சகோதரர்கள் தான்.

இரண்டாம் உலகப்போரின் போது எதிரிகளின் குண்டு வீச்சுக்கு இலக்கானது, ஆனாலும் மக்களின் பிரார்த்தனைகள் அந்த குண்டுகளை வெடிக்காமல் செய்தன. போர்க்காலத்தில் வெளிநாட்டுப் பயணிகளை தங்க வைக்கும் இடமாகவும் இந்த ஆலயம் பயன்பட்டது. இந்த ஆலயத்திலுள்ள மாதாவின் படம் உண்மையான அன்னை மரியா படம் என்று பக்தர்களால் நம்பப்படுகிறது.

இந்த ஆலயம் கட்டப்பட்ட பின் பல்வேறு மாற்றங்களையும், விரிவாக்கங்களையும் கண்டுள்ளது. இன்று பார்வைக்கும், மனதுக்கும் இதமாகவும் வசீகரமாகவும் இருக்கின்ற இந்த ஆலயம் மாதா ஆலயங்களில் ஒரு மகுடம் என்றால் மிகையல்ல.

ஆன்மீக சிந்தனையுடையவர்களுக்கும், கலாரசனை உடையவர்களுக்கும் தவிர்க்கக் கூடாத இடமாய் கம்பீரம் காட்டுகிறது இந்த ஆலயம்.










16 வருட அனுபவம் மிக்க சேவையாளர்

உங்கள் ஆசையை
நிறைவு செய்ய
இதுவே தருணம்
விரையுங்கள்

Büro für Deutsche Vermögensberatung
Ram Mohan
Westwall 117
47798 Krefeld

Ram.Mohan@dvag.de
www.dvag.de/Ram.Mohan

Telefon: +49 2151 3259152-Fax: +49 2151 3259153- Mobil: +49 1726835790




பிரபல ஓவியர்
கே.கே.ராஜா

10ம் பக்கத் தொடர்ச்சி

## றொறன்ரோ சர்வதேசக் குறும்பட ..

முடிவுகள்

1.
சிறந்த குறும்படம்
செரஸ்

2.
சிறந்த சமூக விழிப்புணர்வுக் குறும்படம்
நானாக நான்

3.
சிறந்த குறும்படத்துக்கான
சிறப்பு நடுவர் விருது
Your Destination

4.
சிறந்த இயக்குநர்
சதா பிரணவன் (செரஸ்)

5.
சிறந்த ஒளிப்பதிவு
விஜிதன் சொக்கன் (செரஸ்)

6.
சிறந்த படத்தொகுப்பு
விஜிதன் சொக்கன் (செரஸ்)

7.
சிறந்த திரைக்கதை
மணி மாறன் (18 குச்சிகள்)

8.
சிறந்த நடிகர்
இலங்கை நாதன் (18 குச்சிகள்)

9.
சிறந்த நடிகை
தேனுகா கந்தராஜா

10.
சிறந்த குழந்தை நட்சத்திரம் - சிறப்பு விருது
வானதி தனேஷ் (அருவி)

12.
சிறந்த படத்துக்கான விமர்சகர் விருது
அருவி

"ஈழத் தமிழர்களின் ஓவியத்துறையில் தனக்கென ஓரிடத்தினை வகுத்து அதில் தன் பின்வந்தோரை வழிநடத்தியிருந்தார் திரு. அ. மாற்கு அவர்கள். அவருடைய கலைக் குழந்தையாக இந்த வாழ்நாள் விருதினை நான் அவர் சார்பில் பெற்றுக் கொள்கின்றேன். அத்தோடு தாஸிஸியஸ், மௌனகுரு, அன்ரன் பொன்ராஜா ஆகியோரைத் தவிர்த்து ஈழத்து நாடகத்துறையை வரையறுக்க முடியாது. அவர்களது பட்டறையில் வளர்ந்த நான் இந்த விருதை அவர்கள் சார்பாகவும் பெற்றுக்கொள்கின்றேன்" என்று தன் ஏற்புரையில் கூறி விருதைப் பெற்றுக்கொண்டார் ராஜா.

பல்வேறு அலுவல்களுக்காகக் கனடாவுக்கு வருகை தந்திருக்கும் ஈழத்தில் வாழும் எழுத்தாளர், விமர்சகர் அத்தனாஸ் யேசுராசா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, மேற்கூறிய இரு விருதுகளையும் வழங்கினார்.

"ஈழத்திலிருந்து தோன்றுகின்ற திரைப்படங்களில் எமது மக்களின் தனித்துவங்கள், வாழ்வியல்கள், பிரச்சனைகள் இன்னமும் அதிகமாகவே பேசப்பட வேண்டியவையாக இருக்கின்றன. தமிழகத் திரைப்படங்கள் மீது மக்கள் கொண்டுள்ள இரசனை ஈடுபாடுகளினால் ஈழத்திலிருந்து உருவாகின்ற குறும்படங்களிலும் திரைப்படங்களிலும் நமது அடையாளங்கள் பெருமளவில் தொலைக்கப்படுகின்றன. தமிழகத் திரைப்படத் துறையினரால் எமது கதைகள் திரையாக்கப்படுவதற்கும் ஒரு தனித் தேசிய இனமாக இருக்கும் ஈழத்தவராகிய எம்மால் நமது வரலாற்றை, அடையாளத்தை, பிரச்சனைகளை, வழக்கங்களை திரையாக்குவதற்குமிடையில் உள்ள வித்தியாசத்தை நாம் உணர வேண்டும். எம்மோடு நெருக்கமாக இருக்கும் வாழ்வியலை திரையில் கொண்டு வருவதற்குரிய கைங்கரியம் எம்மை விட தமிழகத் திரைத்துறையினர்க்குக் கிடைத்துவிடப் போவதில்லை" என்று தனது சிறப்புரையில் தெரிவித்தார் திரு. யேசுராசா அவர்கள்.

விருதுக்குரிய குறும்படங்களைத் தெரிவு செய்த நடுவர்களாக திரைப்பட கல்லூரிப் பட்டதாரியும் குறும்பட, ஆவணப்பட இயக்குநரும் தயாரிப்பாளரும் ஒளிப்பதிவாளருமான Eric Nettel, குறும்பட, ஆவணப்படத் தயாரிப்பாளரும் இயக்குநரும் திரைக்கதை மேற்பார்வையாளருமான Karene Nettel, முன்னாள் ரூபவாகினி தொலைக்காட்சி நிறைவேற்றுத் தயாரிப்பாளரும் TVi தொலைக்காட்சியின் தலைமை நிர்வாக அலுவலரும் நாடக இயக்குநரும் விமர்சகருமான பி. விக்னேஸ்வரன், சமூக ஆர்வலரும் இயக்கிய விமர்சகரும் எழுத்தாளருமான வி. ஆனந்தராம், முகரம் ஆசிரியரும் கவிஞருமான அ. கந்தசாமி, TVi நிறைவேற்றுத் தயாரிப்பாளரும் இயக்குநருமான ராஜதுரை ரமேஷ், ஆவணப்பட, திரைப்பட இயக்குநரும் எழுத்தாளருமான ஜி. விஜயபத்மா, திரைப்பட இயக்குநர் லெனின் எம். சிவம், விம்பம் (பிரித்தானியா) அமைப்பின் இயக்குநரும் ஓவியரும் நாடகரும் விமர்சகருமான கே.கே. ராஜா, திரைப்பட, இலக்கிய விமர்சகர் ரஞ்சன் சேவியர் ஆகியோர் பணியாற்றினர். விமர்சகர் விருது நடுவர்களாக சமூக, அரசியல் செயற்பாட்டாளர் கார்த்திகா கோபிநாத், எழுத்தாளரும் விமர்சகருமான ரவிச்சந்திரிகா, முகரம் ஆசிரியர் அ. கந்தசாமி ஆகியோர் பணியாற்றினர். ஆர்த்திகா குமரேஷ், கந்தசாமி கங்காதரன் ஆகியோர் நிகழ்வைத் தொகுத்து வழங்கினர்.

-கந்தசாமி கங்காதரன்




ஓம் சிவசக்தி ஜோதிட நிலையம்

From KERALA
IS NOW IN DORTMUND - GERMANY
FACE READING
100%
Solutions within 3 Days
100%

பத்திரகாளி அம்மன் பூஜாரி
பண்டித் காளிதாஸ்

குடும்பப்பிரச்சினைகள்,கணவன் மனைவி உறவு, உடல்நிலை வேலை குழந்தைப்பாக்கியம் திருமணம் பணம் காதல் பிரச்சினைகள் ,படிப்பு, வியாபாரம், உங்களுக்கு ஏற்ற அதிட்ட எண்கள், மற்றும் பலபிரச்சினைகளுக்கும் தீர்வுகாணலாம்.

**உங்கள் முகம்,கைரேகை இவற்றைவைத்து உங்கள் எதிர்காலம் துல்லியமாகக் கூறப்படும்**

ஆங்கிலம், தமிழ், கிந்தி,
ஆகியமொழிகளில் பேசலாம்
வாரத்தில் 7 நாட்களும்
காலை 10:00 முதல்
மாலை 8:00 மணி வரை

+49(0)15213504803
+49(0)15145849222
Rheinischestrasse 80
44137 - Dortmund - Germany






லண்டனில் தங்க இடமும், இலங்கை உணவும், கொண்ட இனிய நம்மவர் விடுதி!

Rising Sun Hotel & Restaurant

அறைகள் யாவும் நவீன வசதிகளுடன் அமைந்துள்ளது.
இவற்றுடன் காலை ,மதிய, இரவு உணவு வசதிகளும் சிறப்பாக உண்டு

En-Suite Rooms ,Restaurant & Bar facilities available
to make your stay comfortable.

Free Wi-Fi & Car Park

admin@risingsunhotels.com

138, Greenford Road
Sudbury Hill
Harrow
Middlesex HA1 3QL
U.K

Tel: +44 208 4222 575

Sudbury Hill Station இல் இருந்து இரு நிமிட நடைத்தூரத்தில் !
Heathrow Airport இல் இருந்து 30 நிடங்களில் எம்மை வந்தடைய நேரடி Train வசதி உண்டு



முதன்முறையாக LONDON EALING அம்மன் கோயில் தேர்த்திருவிழாவில்
AJ HOME APPLIANCES UK LTD., வழங்கும்
பிரம்மாண்டமான அதிரடி மலிவு விற்பனை..!
14.08.2016 ஞாயிற்றுக்கிழமை
13.08.2016 சனிக்கிழமை
சேவலார் தேர்த் திருவிழாவில்...
07.08.2016 ஞாயிற்றுக்கிழமை HAMM
பிள்ளையார்கோவில் தேர்த்திருவிழாவில்...
ADCHAYA
Premier
மிக்ஸி வாங்கினால்
39 € பெறுமதியான
சப்பாத்தி மேக்கர்
முற்றிலும் FREE !
தள்ளுபடி எல்லாரும் தான் தருவாங்க.. ஒகே..
ஆனா தரம்...?
Chapathi Maker
Premier
Super-g
Mixer Grinder
சமையலறைசாதனங்கள் + புத்தகங்களின்
70 € க்கு மேற்பட்ட கொள்வனவிற்கு
15 € பெறுமதியான 1 புட்டுமேக்கர் OR
1 அப்பச்சட்டி OR 1 திருவலை
முற்றிலும் FREE !
GIFTSET
INSULATED
Premier
SANCHA
SKY
PURI PRESS
Kitchen Press
இவ்வாண்டின்
எமது புதிய தரமான
வெளியீடுகள்...
AJ HOME APPLIANCES GMBH
CHAPATI MAKER
AYVIN
ஐரோப்பாவில் தரத்தோட இப்படியொரு தள்ளுபடி எவரும்
இதுவரை தந்ததில்லை..! முதல் முறையா அட்சயாவில் மாத்திரமே..!
முன்னணி எழுத்தாளர்களின் புதிய வெளியீடுகள்...!
புத்தக திருவிழாவும்
மலிவு விற்பனையும்..!
Megic Press
ALLOY & ABS BODY
Code N.132
Megic Press (With 21 Blades)
Cake Decorative Nozzle
With 21 Blades
இந்த Megic Press மூலம் 16 வகையான
பலகாரங்கள் தயாரிக்கலாம்... மற்றும் நீங்கள் வீட்டில் தயாரிக்கும்
கேக் வகைகளுக்கும் மிக எளிதாக அலங்காரம் செய்து கொள்ளலாம்..
முதன்முறையாக இதனை அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகிறோம் !
1 எடுத்தா 1 FREE !
மிக்ஸி எடுத்தா
சப்பாத்தி மேக்கர் FREE !
AJ HOME APPLIANCES GMBH
FRIEDRICH-EBERT-STR-7A, 59425 UNNA.GERMANY, Tel : 0049-23035948129,
Mobile : 004917663092804, 0049175405080 e-mail : ajhomeapplinces@gmail.com

# “எமக்கு அருகில் அவர் சீட்டு இலக்கம் இருக்கப்படாது” என பயணிகள் வேண்டத் தொடங்கினர்!






அன்றைய மக்கள் குடியைவெறுக்க காரணம் என்ன. திருமணம் என்று சொன்னால் முதல் கேள்வி பையன் எப்படி குடி கிடி இல்லைத்தானே! நண்பர்கள் என்றால் எப்படி அவன் நண்பர்கள் குடி புகை என்று இல்லைத்தானே! இப்படி சேரும் இடம் அவை அறிந்தே அன்று சேர்ந்தனர். இன்று உலகில் மது அருந்துபவர்கள், அருந்தாதவர்கள் என்று பிரித்துப்பார்த்து கணிப்பது அரிது. காரணம் மருந்துபோல் மது அருந்துபவர்களும்,விருந்துகளில் மட்டும் அருந்துபவர்களும் உண்டு. எப்படி இருந்தாலும் அன்று குடிகாரனுக்கு இருந்த வரவிலக்கணம் இன்று இல்லை.

அப்போ குடிகாரன் என்றால் உடுப்பு, அரையில் நிற்காது. வாய் சும்மா இருக்காது. உலகத்தில் உள்ள அத்தனை கெட்வார்த்தைகளின் அகராதிகளும் அவன் வாயுக்குள்ளால் வரும். சாதிச்சண்டை, வேலிச்சண்டை,வாய்க்கால் சண்டை என்று எல்லாமே இந்தக் குடியால் உச்சம் பெறும். இன்று அவை முற்றாக மறைந்து விட்டன என்று இல்லை, என்றாலும் அன்றுபோல் அவை பெரும் பேசும் பொருளாக இல்லை.

ஒரு மனிதனுக்கு எப்படி நல்ல குணங்கள் அவர்களது முப்பாட்டனார்களது ஜீன்ஸ் அணுக்களில் இருந்து (மரபணுக்கள்) வருகிறது என விஞ்ஞானம் சொல்கிறதோ, அதே விஞ்ஞானக்கருத்தின் படி கெட்டபழக்கவழக்கங்களும் அவற்றில் இருந்துதான் வருவதாக எண்ணவேண்டும்.

இல்லை என்றால் இந்தக்காலத்தில் மது அருந்துதல் நாகரீகமாகவும், அது ஒரு வெறும் உற்சாக பானமாகவும்,மருந்தாகவும் பாவனையில் இருக்கும்போது, அவை எப்படி அன்று உள்ளவர்களது குணாதிசயங்களை சிலர்மட்டும் தமதாக்க வேண்டும். இந்தக் கேள்வி இன்று குடித்துவிட்டு உளறுபவர்களைப் பார்க்கும் போது எழும் கேள்வி.

விமானப்பயணம் இன்று குடும்பத்துடன் செல்கின்ற ஒரு திருமணவீடு, அல்லது விருந்தினர் வீடு போல் ஆகிவிட்டது. அங்கு நம்மவர்களும், பிற இனத்தவர்களும் சில மணி நேரம் ஒன்றாக மகிழ்வாக பயணிக்கும் இடமாகவுள்ளது. அங்கு அந்த சில மணித்தியாலத்தில் நாம் எம்மினத்தின் பண்பாட்டை ஒழுக்கத்தை, எடுத்துக்காட்டும் ஓர் அரங்காவும் எடுத்துக்கொள்ள வேண்டும். எப்படி நாம் ஒழுக்கமற்ற பண்பாடு அற்ற இடங்களுக்கு பிள்ளைகளை அழைத்தச்செல்வதை தவிர்க்கின்றோமே அதுபோல் விமானப்பயணத்ததையும் அங்கு ஒழுக்கமில்லை என்று தவிர்க்க முடியாது.

எனவே நம்மவர்களது ஒழுக்கம், நம்கையில்தான். குடிப்பழக்கத்தால் வரும் அசௌரியங்கள் எந்த இன மக்களாக இருந்தாலும் சகிப்பதற்கு இல்லை.

நமது நாட்டில் இருந்து ஒருவர் கோடைவிடுமுறையைக் கழித்துவிட்டு வெளிநாடு திரும்ப, குடிபோதையில் கையில் தேசிக்காயால் முகத்தை தேய்த்தபடி விமான நிலையத்தில் இருந்தார். வாய்க்குள் கெட்ட வார்த்தைகள் பல, மள மள வென வந்து போயின. இவ்வளவு நாளாக எங்கோ ஒளிந்திருந்த கண்ணி வெடிகள் மள மளவென வெடிப்பதுபோல், வெடித்தன. நம்மினப் பெண்கள் பலர் தமது பிள்ளைகளுடன் அங்கு இருந்தனர். அவர்களுக்கு அவனது செயல் பெரும் நாணத்தைக் கொடுத்தது.

விமானம் சுகமே பறந்து நாடு செல்ல வேண்டும் என வேண்டியவர்களைவிட, கடவுளே இவன் எனது சீட்டுக்கு பக்கத்தில் அமரப்படாது என வேண்டியவர்களே அதிகம்.

விமானத்தில் ஏற பணிப்பெண் அழைத்தார். விமானப்பணிப் பெண் சீட் இலக்கத்தை கேட்க, அவர் பதில் இல்லை. விமானத்தில் உள்ளே சீற்றோடு சாய்ந்த படி நித்திரை. அது குடிவெறியில் என்று பயணிகளுக்கும், பணிப் பெண்ணுக்கும் தெரியும். பின்பு சீட்டில் அமர முயற்சித்தார். தானகவே குடி அமாத்திவிட்டது.

பின்பு புலம்பல் அடங்கிவிட்டது. இறங்கும்போது குவைத்தில் பஸ் வண்டி பயணிகளை ஏற்றிச் சென்றது. பணிப்பெண் பஸ்சை செல்லவிடாமல் ஒரு நபர் குறைவதாக கூறிக்கொண்டு நின்றாள். சுற்று நேரத்தில் ஒருவர் படியால் இறங்கினார்.

எல்லோரது பார்வையும்,அவர் மீது குவிந்தது. புதுப்பிக்கப்பட்ட குடியோடு போதையால் நடக்க முடியாமல் படியால் ஒரு முதியவர்போல் இறங்கி வந்தார். ஆயிரம் ஆயிரம் நிகழ்ச்சிகள் வைத்து எமது இனத்தின் உயர்வைக் காட்டினாலும், இந்த ஒரு நிகழ்வு அவற்றை அடியோடு மாற்றிவிடும் என் எண்ணத்தோன்றியது. இறங்கி வந்து பஸ்ஸில் ஏறினார். மீண்டும் விட்ட இடத்தில் இருந்து கெட்வார்த்தைகள் தமிழில் வந்தவண்ணம் இருந்தன. யார் மீது கோபம்! உறவினர்கள் மீதா!! அல்லது தன்மீதா!!! என்று தெரியிவில்லை. மீண்டும் அடுத்த தொடர் விமானத்தில் எமக்கு அருகில் அவர் சீட்டு இலக்கம் இருக்கப்படாது என பயணிகள் வேண்டத் தொடங்கினர்.




## புரமோஷன்

கோகுலனும் தீபனும் ஒரே மாதத்தில் பிறந்தவர்கள். ஒன்றாக ஒரே பாடசாலையில் பிறைமரியில் சேர்ந்தார்கள்.

சேர்ந்த சிறிது காலத்தில் கோகுலன் உட்பட நான்கு மாணவர்கள் வகுப்பேற்றப்பட்டார்கள்.

தீபனின் அம்மா, தனது மகனையும் வகுப்பேற்றும்படி ஆசிரியரிடம் கெஞ்சினார்.
“நன்றாகப் படிக்கக் கூடியவர்களை மாத்திரம் வகுப்பேற்றினோம்” ஆசிரியர் மறுத்துவிட்டார்.

”இருவரும் ஒன்றாக வளர்ந்தவர்கள். தயவு செய்து தீபனையும் வகுப்பேற்றுங்கள், இல்லாவிட்டால் கோகுலனை வகுப்பு இறக்கி விடுங்கள்”
ஆசிரியர் திகைத்துப் போனார்.

Thushi -Deko
உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்.....
Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram






Elephant Stage
Thushiyanthan. Thiruselvam
Tel:02305 - 85945 - 0176 608 108 13

திருக்கணித ஜோதிடம்
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

# நான்கு தமிழர்கள் ஒரு காட்டில் சந்தித்தால் என்ன செய்வார்கள்?

**சிரித்திரன் சுந்தரின் நெஞ்சில் நிறைந்த சில நகைச்சுவைகள்:**



மகுடி பதில்
சிரித்திரன் சுந்தரின் மகுடி பதில்கள் நறுக்கு, வித்துவத்தனம், நகைச்சுவையினூடு கலந்திருக்கும் கருத்தாழம், புதுக் கவிதை போல் முகத்திலறையும் வேகம் நிறைந்திருக்கும். அவற்றில் சிலவற்றை இப்போது பார்ப்போம்.

கே: மரண அறிவித்தல் பற்றி என்ன சொல்கிறீர்?
மகுடி: இறந்தோர் பெயர் சொல்லி இறப்போர் புகழ் பாடல்.
கே: நான்கு தமிழர்கள் ஒரு காட்டில் சந்தித்தால் என்ன செய்வார்கள்?
மகுடி: சங்கம் அமைப்பார்கள், சண்டை பிடிப்பார்கள்.

**மெயில்வாகனத்தார் குளிக்கப்போறியளோ?**

**இல்லை கொழும்புக்குப்போறேன்... வழியில் எல்லாம் திறந்து பார்க்கிறாங்களாம். அதுதான் இப்படி..**




கே: எனது நண்பன் பெண்களைக் கண்டால் நாக்கைக் காட்டுகிறான். இதற்கு அர்த்தம் என்ன?
மகுடி:அவர் பாவம் விஷமில்லாத சாரைப்பாம்பு.
கே: தூங்கி விழுந்த தமிழனைத் தட்டி எழுப்பியது யார்?
மகுடி:அநுராதபுரத்தில் ரயிலில் ஏறிய சிங்களப் பிரயாணி.
கே: எப்போது கை நிறையப் பணம் இருக்கும்?
மகுடி: வாய் நிறையப் பொய் இருந்தால்.
கே: உலகில் சிறந்த சங்கீதம் எது?
மகுடி: அனாதைக் குழந்தையின் சிரிப்பொலி.
நன்றி: சுவைத்திரள் சஞ்சிகை (ஆசிரியர்: திக்கவயல் தர்மு)

“செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்“ என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு கலை இலக்கிய வானில் பறந்து திரிந்தவர் சிரித்திரன் சுந்தர் என அழைக்கப்படும் சிவஞானசுந்தரம். சிரித்திரன் சுந்தர் என்றவுடனே முகத்தில் புன்னகை அரும்பும் நெற்றியில் சிந்தனைக் கோடுகள் வரைபடமாகும்.

45 வருடங்களாகக் கேலிச்சித்திரத் துறையில் தனது ஆளுமையைச் செலுத்திய சிரித்திரன் சுந்தர் 15000க்கு மேற்பட்ட கேலிச்சித் திரங்களைத் தீட்டியுள்ளார். 1963ஆம் அண்டில் ஆரம்பிக்கப்பட்ட ”சிரித்திரன்” சஞ்சிகை திரு சி சிவஞானசுந்தரம் அவர்களின் மறைவு வரை 32 வருடகாலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது.

சிரித்திரன் சுந்தரின் நெஞ்சில் நிறைந்த சில நகைச்சுவைகள்:

சிரித்திரனின் ஆரம்பகாலத்தில் வெளிவந்த கார்ட்டூன் ஒன்றில் ஒரு கடா ஆட்டினைத் தீபாவளிக்காக வெட்டுவதற்குக் காவல் நிற்கிறார்கள். ஆடு சொல்கிறது: ”எல்லோரும் இன்புற்று இருப்பதேயன்றி வேறொன்று அறியேன் பராபரமே” என்கின்றது. சமய உண்மை ஒன்று இங்கு சிரிப்பாக வெளிப்பட்டது.

பாம்புக்குட்டியொன்று தன் அம்மாவிடம் கேட்கிறது: ”அம்மா! அப்பா எப்படி செத்துப் போனார்?”, அதற்கு அம்மா பாம்பு இப்படிப் பதில் கூறுகிறது: ”கள்ள பெட்டிஷன் எழுதுகிற ஒருவரைக் கொத்தி, உடம்பில் விஷம் ஏறி உன் அப்பா செத்துப் போனார்.” அடக்கடவுளே! கள்ள பெட்டிஷன் எழுதுகிறவர்கள் உடம்பில் அவ்வளவு விஷமா?

ரயிலில் “ஓசிப் பேப்பர்“ கேட்கிறான் ஒருவன். அதனைக் கொடுத்தவுடன் மூக்குக் கண்ணாடியைத் தரச் சொல்லிக் கேட்கிறான். இவன் எப்படிப்பட்ட மனிதன்?

பிச்சைக்காரன் ஒருவன் ஒரு வாலிபனை பார்த்துப் பின்வருமாறு கேட்கின்றான்: ”ஐயா பிரபு, சீதனமாக வேண்டின 3 லட்சத்தில் ஒரு 50 சதக் குத்தியை எறிஞ்சுவிட்டுப் போ.”

Adhaven Beauty Palar
E-mail: b.pirathini@gmail.com





Eyebrow threading
புருவம் திருத்தம்செய்தல்
Bridal make up
மணப்பெண் அலங்காரம்
Facials
முகப்பொலிவு
Hairstyle
சிகை அலங்காரம்
pimples threadment
முகப்பருசிகிட்சை
Tel: 0152 041 24 756
Tel. 0176 72787821
0234 3258759

சேலை
கட்டபழக்கப்படும்
பூமாலை
கட்டிக்
கொடுக்கப்படும்
*Aleo vera Facial 25Euro*
*Gold Facial 34Euro*
*Saffron Facial 34Euro*
*Chat Conversation End*
புதிய முகவரி: 1.OG
Brückstr.20-26
44135 Dortmund

Nimal HD
Film Style Cinematography
nimalvideo@gmail.com
Videography|Photography|Graphic Designing
Video Editing|Photo Album Making
3D Logo Creating|3D Logo Annimation
Web Development|Add film|Visual fx
Event entertainment
தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55
01776 794 261



உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள் கலை விழாக்கள
மனதோடு நிற்க ஒளிப்பதிவு செய்து தரப்படும்! 45 நாட்களில் கிடைக்கும்!

உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF ASP இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

A.tu.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
Lise-Meitner-Str.20
45144 Essen
e.mail:atuzuebersetzung@hotmail.com

1G வது ஆண்டு நிறைவான சேவை
Kaneen Electronics
Internet-sat, Receiver,Camera-Alam கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்
சகல Alarmanlage, Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet, பொருத்துதல், பழுதுபார்த்தல் சகல வேலைகளுக்கும். 2016 Januarry; புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள் மூலம் பொருத்துவதற்கும், உங்கள் வீடுகளில் நடைபெறும் சகல மங்கள நிகழ்வுகளையும் மிகத்துல்லியமான தொழில்நுட்பமுறையில் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கும் இன்றே நாடுங்கள்
Tel: 02053 423 740 Fax: 2053 423 741 -Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal




# கிரகப் போர்

**காசியரின் பேரன்**

பரமசாமியும் சுந்தரியம் நண்பரின் வீட்டிற்குள் நுழைந்த போது வீட்டின் நிலவரம் களேபரமாக இருந்தது.கதவு திறநதிருந்ததால் அவர்கள் இருவரும் சுலபமாக நண்பரின் நுழைய முடிந்தது. அங்கு நடைபெற்று முடிந்த அசாதரண சூழ்நிலையால் வீட்டிலுள்ளவர்கள் வீட்டின் வாசல் கதவை மூட மறந்துவிட்டார்கள். வீட்டில் உள்ளவர்கள் இவர்களை வரவேற்கவில்லை.
வீட்டிற்குள் மின்சாரம் இல்லை என்பதை அங்கு எரிந்து கொண்டிருந்த மெழுகுவரத்தி சாட்சியாக இருந்தது. ஆனால் தொலைக்காட்சியில் ஒரு காட்சி திரும்பத் திரும்ப தெரிந்து கொண்டிருந்து. நண்பரின் மனைவி சோர்ந்து போய் கணவரை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். நண்பரோ தொலைக்காட்சியை பலமுறை நிறுத்தியும் அது நிற்காமல் காட்சி தெரிந்து கொண்டே இருந்தது. அந்தக் காட்சியைப் பார்த்து பரமசாமியும் சுந்தரியும் திகைத்தார்கள்.நண்பர் யாரோ ஒரு பெண்ணின் தோளில் கைபோட்டபடம் பார்த்துக் கொண்டிருந்த காட்சிதான் அது. பேராசைப்பட்டு வானத்திலிருந்து இறங்கி வந்த மூட்டையிலிருந்து எடுத்து வந்து சட்டலைட் டெக்கோடர் காட்டை தனது வீட்டு டொக்கோடரில் போட்ட வினையைத்தான் நண்பர் அனுபவித்துக் கொண்டிருந்தார்.
வீட்டில் இராமனாகவும் வெளியில் கிருஸ்ணனாகவும் நடந்து கொண்ட நண்பரின் சுயமுகம் அவர் வீட்டில் வெளிப்பட்டுக கொண்டிருந்தது. அதற்குள் அவர்களால் நிற்க முடியவில்லை. தாமாக வந்தது போலவே அவர்கள் நண்பரின் வீட்டிலிருந்து வெளியேற முற்படுகையில்"சாமி இங்கை பார்த்ததை தயவு செய்து ஊருக்குள் சொல்லிப் போடதையுங்கோ" இது பேயின் விளையாட்டு, நீங்களும் ரிவியில் பார்ப்பதை நம்பாதையுங்கோ என நண்பர் கெஞ்சுவது போல் சொன்னார்.

.இருவரும் தலையாட்டிவிட்டு வெளியேறுகையில் மூட்டையிலிருந்து எடுத்து வந்திருந்த பெனறைவ், கமராஸபைகர் காட், சட்லைட்டெக்கோடர் காட் வைத்திருந்த பயத்தில் பரமசாமிக்கு வேர்க்கத் தொடங்கியது. தனது கைக்குள் இருப்பது என்னென்ன திருவிளையாடல்களைக் காட்டப் போகிறதோ எனப் பயந்து மனைவிக்கு தெரியாமல் கைகளை விரித்து நிலத்தில் போட்டுவிட்டார்.

மூட்டையில் வந்திறங்கிய பென்றைவ், கமராஸ்பைகர்காட், டெககோடர் காட் ஆகிவற்றை பேராசையில் எடுத்துக் கொண்டு போனவர்கள் இதற்கள் என்ன இருக்கும் என பரீட்சித்தப் பார்க்கவும் அவை அவரவர் செய்து மூடிமறைக்கப்பட்ட தவறுகளை குடும்பத்திற்குள் எல்லோருக்கும் தெரியப்படுத்த குடும்பங்களில் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டு ஊரே கலவரமாகிப் போய்விட்டது. பரமசாமி, சுந்தரி வாழ்ந்த ஊரில் மட்டுமல்ல அனைத்து நாடுகளிலும் இதே நிலைமைதான். உலகமே குழம்பிப் போய்க் கிடந்தது.
இது பேய் பிசாசின் வேலைதான் எனப் பத்திரிகைகள் சில எழுதின.இது வானத்தில் மிதக்கும் சட்லைட்டின் வேலைதான் இது என இன்னும் சில பத்திரிகைகள் எழுதின. ஆனால் ஒருசில வெளிநாட்டுப் பத்திரிகைகள் இது வேற்றக்கிரகத்தின் அதீத தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் மனிதர்களை வேவு பார்க்கும் செயல், மனிதர்களால் கண்டறிய முடியாதவாறு பூமியில் வந்திறங்கும் மனிதர்களைவிட பலவாயிரம் தனிமனித மூளை வளர்ச்சியுள்ள வேற்றக்கிரக உயிரினங்களின் பயமுறுத்தல் இது. பூமி மிது போர் தொடுக்கும் முன்னேற்பாடுதான் என எழுதின.

உலகம் திகைத்துப் போயிருந்த அன்றிரவு பரமசாமியும் சுந்தரியும் மிகவும் அச்சத்துடனயே நித்திரைக்குப் போனார்கள். ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் போது கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு பயத்துடன் போய் கதவைத் திறந்தார்கள்.கதவடியில் இரண்டு அழகான பெண்கள் புன்முறுவல் பூத்தபடி நின்றிருந்தார்கள்.பரமசாமி திரும்பி சுவர் மணிக்கூட்டைப் பார்த்தார் நேரம் 2.30 மணி காட்டியது. அந்த அழகான இரண்டு பெண்களில் ஒருத்தி மஞ்சள் நிறச் சேலையிலும் இன்னொருத்தி சிவப்புநிறச்சேலையிலும் ஒய்யாரமாக நின்றார்கள். அவர்களிலிருந்து ஒரு சுகந்தமான நறுமணம் வந்து கொண்டிருந்தது.

பேய்களும் பெண்கள் வடிவில் வரும் கேள்விப்பட்டிருந்ததால் இவர்கள் பேய்தானோ என பரமசாமியும் சுந்தரியும் நினைக்க" நீங்கள் இருவருமே எங்களை பேய்யென்று ஒரே மாதிரி நினைக்கிறீர்கள், நாங்கள் பேய்கள் அல்ல, உங்களைப் போல மனிதர்கள்தான், உங்கள் இருவரையும் எங்கள் ஊருக்கு அழைத்துக் கொண்டு போக வந்திருக்கிறோம்" என அந்த இரு அழகிகளும் தமிழில் தாம் நினைத்ததை சொன்னதும் திகைத்த இருவரும் சிலையாக நிற்க"வாருங்கள் என இருவரின கையையும் மெதுவாக பிடிக்க, பரமசாமியின் உடலுக்குள்ளும் சுந்தரியின் உடலுக்குள்ளும் ஒரு உணர்வு பரவத் தொடங்கியது.

மந்திரித்துவிட்ட கோழி போல அந்த அழகான பெண்களுக்குப் பின்னால் பரமசாமியும் சுந்தரியும் சென்றார்கள். ஒரு நிமிடத்திற்குள் அவர்கள் வீதியில் நின்ற காரொன்றில் அவர்களை ஏற்றிவிட்டு பக்கத்திற்கு ஒருவராக அழகிகள் இருவரும் உட்காரந்திருக்க கார் புறப்பட்டது. புறப்பட்ட கார் மெதுவாக மேலெழுந்து. பரமசாமிக்கும் சுந்தரிக்கும் அது புது அனுபவமாகத் தோன்றியது. மனதில் பயம் இல்லாது சுகமா இருந்தது. அழகிகள் இருவரினதும் கைகளும் இவர்களின் உடலில் பட்டதும் இவர்களின் நரம்பு மண்டலங்கள் மூளை என்பன ஒருவிதமான புதிய உணர்வைப் பெற்றுக் கொண்டதை அவர்கள் உணரந்தார்கள்.

கார் மெலெழுந்ததும் ஒரு இடத்தில் நின்றது. அழகிகள் இருவரும் கதவுகளை திறந்து இறங்கிக் கொண்டே"வாருங்கள்" என அழைத்தார்கள். அவர்கள் இருவரும் பூமியிலிருந்து பலவாயிரம் கோடி கிலோமீற்றர் அப்பாலிலிருந்த ஒரு தளம்.
அது ஒரு விமானத்தளம் போலிருந்தது. இவர்கள் இருவரும் அந்தத் தளத்தில் காலை வைத்ததும் "வாருங்கள் வாருங்கள் உங்களை மாங்கதிர் கிரகத்தின் பிரபஞ்ச தளத்தினராகிய நாங்கள் வரவேற்கிறோம்" என ஆண்களும் பெண்களுமாக அங்கு நின்ற நூற்றுக்கு மேற்பட்டவர்கள்' தமிழில் வரவேற்க, நாங்கள் காண்பது கனவா நினைவா என பரமசாமியும் சுந்தரியும் தடுமாற, நீங்கள் கனவு உலகத்தில் நிற்கவில்லை, பூமியைப் போல பலமடங்கு பொரிய மாங்கதிர் கிரகத்தின் போக்குவரத்திற்கான பிரபஞ்சத் தளத்திலேதான் நிற்கிறீர்கள், இன்னும் சில நிமிடத்தில் உங்கள் பூமியை உங்களுக்குக் காட்டுவோம், பூமியில் இப்பொழுது நீங்கள் நித்திரை கொள்ளும் நேரம் முதலில் நித்திரை கொள்ளுங்கள், நீங்களிருவரும் நித்திரையால் எழுந்ததும் பூமியைக் காட்டுவோம் அதில் உங்கள் வீட்டையும் பார்க்கலாம்" என்று ஒரு ஆண் தமிழில் சொன்னான்.

அவர்களிருவரையும் படுக்கை அறை வாசல்வரை இரு பெண்கள் அழைத்துச் சென்று விட்டனர். பரமசாமியும் சுந்தரியும் பூமியிலிருந்து பலவாயிரம் கோடி கிலோமீற்றர் அப்பாலுள்ள அழகான நவீனமான பிரபஞ்சத் தளத்தில் உள்ள படுக்கை அறைக்குள் நுழைகிறார்கள். படுக்கை அறையைப் பார்த்ததும் அவர்களின் வியப்புக்கு அளவே இல்லை.
தொடரும்



# வெந்தயத்தின் வெகுமதி



நம் முன்னோர் சமையல் அறையில் இருக்கும் முதலுதவிப் பெட்டிக்குள் இருக்கும் பொருட்கள் இவைதான். வெந்தயம், சீரகம், சோம்பு, கடுகு மிளகு என ஒவ்வொன்றும் மனிதனை நோயின்றி காக்கும் சிரஞ்சீவிகளாகும்.

இதில் வெந்தயத்தின் அளப்பறிய பயன்கள் பற்றி பார்ப்போம்.
வெந்தயம் லேசான கசப்புச்சுவை உடையது. இதனை உணவில் சேர்ப்பதால் உணவுக்கு நறுமணத்தைத் தருவதோடு நல்ல ஊட்டத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது.

எலும்பை உறுதியாக்கும் பாஸ்பரஸ் தாது உப்புக்களும், தசையைப் பாதுகாக்கும் லெசிதின் பொருளும் முட்டையில் உள்ள சத்துக்களைப் போல் நுக்லியோ அல்புமினும் நிறைந்துள்ளது.
வெந்தயத்தை மெந்தியம், மேதி, வெந்தை என பல பெயர்களில் அழைக்கின்றனர்.

பித்தவுதி ரம்போகும் பேராக் கணங்களும்போம்
அத்திசுரத் தாகம் அகலுங்காண்-தத்துமதி
வேக இருமலோடு வீறுகயம் தணியும்
போகமுறும் வெந்தயத்தைப் போற்று

- அகத்தியர் குணவாகடம்

பொருள் - குருதியழல், எலும்பு சம்பந்தப்பட்ட சுரம், உடல் எரிச்சல், நீர்வேட்கை, இளைப்பு, இருமல் இவைகள் நீங்கும். ஆண்மைத் தன்மையை அதிகரிக்கும்.
இரவில் சிறிதளவு வெந்தயத்தை நீரில் போட்டு ஊறவைத்து காலையில் அந்த நீரை வெந்தயத்துடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் வயிற்றுப்புண் வாய்ப்புண் ஆறும். வயிற்றுப் பூச்சிகள் வெளியேறும். செரிமான சக்தி அதிகரிக்கும். உதடு வெடிப்பு, நீங்கும். பல் ஈறுகள் பலப்படும்.

ஊறவைத்த வெந்தயத்தை பச்சரிசி சேர்த்து வேகவைத்து தேவையான அளவு தேங்காய்த்துருவல், பனைவெல்லம் சேர்த்து காலை உணவாக வாரம் இரண்டு அல்லது மூன்று நாட்கள் அருந்தி வந்தால் உடல் சூடு தணியும். நரம்புகள் புத்துணர்வு பெறும்.
இரத்தத்தில் உள்ள பித்தம் குறையும். இரத்தம் தேவையான பிராணனை உட்கிரகித்துக்கொள்ளும். இரத்தக்குழாய்களில் ஒட்டியுள்ள பசைபோன்ற கொழுப்புப்பொருள் வெளியேறும். இரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற வேதிப்பொருட்கள் நீங்கும்.

- சிறுநீரகத்தை சீராக செயல்படவைக்கும்.
- வாயுத்தொந்தரவு நீங்கும்.
- இருமல், சளி, தொண்டைக்கட்டு குணமாகும். சருமம் புத்துணர்ச்சி பெறும்.
- எலும்புகள் பலப்படும். பல் கூச்சம் நீங்கும்.

வெந்தயத்தை வறுத்து பொடியாக்கி நீரில் கொதிக்க வைத்து பனங்கற்கண்டு சேர்த்து அருந்தி வந்தால் பாலூட்டும் தாய்மார்களுக்கு தாய்ப்பால் நன்கு சுரக்கும். மாதவிலக்குக் காலங்களில் உண்டாகும் பாதிப்புகள் நீங்கும். உடல் சூடு குறையும். கருப்பை பலப்படும்.

வெந்தயத்துடன் உளுந்து, அரிசி சேர்த்து அரைத்து தோசையாக செய்து சாப்பிடலாம். களியாகவும் செய்து சாப்பிடலாம். இதனால் உடல் அசதி நீங்கும். நரம்புகள் பலப்படும். செரிமான சக்தி அதிகரிக்கும்.

வெந்தயத் தோசையுடன் கருணைக் கிழங்கை அவித்து சாப்பிட்டு வந்தால் மூலச்சூடு குறைந்து, மூலநோயின் பாதிப்பு நீங்கும்.

வெந்தயத்தை பாசிப்பயறுடன் சேர்த்து அரைத்து தலை, உடல் எங்கும் பூசி குளித்து வந்தால் சருமப் பாதிப்புகள் நீங்கும்.

வெந்தயம், செம்பருத்திப் பூ, பாசிப்பயறு, சீயக்காய், கறிவேப்பிலை, இவற்றை சேர்த்து அரைத்து தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் உடல் சூடு தணியும். தலைமுடி உதிர்தல், புழுவெட்டு, பொடுகு நீங்கும்.

குழந்தைகளுக்கு உண்டாகும் இருமல், சளித் தொல்லைக்கு வெந்தயக் கஞ்சி, வெந்தயத் தோசை மிகவும் நல்லது.

நீரிழிவு நோயாளிகளுக்கு

மனித இனத்தை ஆட்டிப்படைக்கும் நோய்தான் நீரிழிவு. உணவு முறை மாறுபாடு, உடற்பயிற்சி யின்மை, மன அழுத்தம் இவைகளால் கணைய நீர் சுரப்பு குறைந்து போகிறது. இதனால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்கிறது.

கணையத்தை சீராக செயல்படவைக்கவும், சர்க்கரை நோயின் பாதிப்பைக் கட்டுப்படுத்தவும் வெந்தயம் சிறந்த மருந்தாகும்.

வெந்தயத்தை லேசாக வறுத்து பொடியாக்கி வைத்துக்கொண்டு தினமும் காலை மாலை இருவேளையும் ஒரு ஸ்பூன் அளவு நீரில் கலந்தோ அல்லது பொடியாகவோ சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோயின் தாக்கம் குறையும்.


நீரிழிவு நோயாளிகள் வெந்தயக் கஞ்சியில் இனிப்பு சேர்க்காமல் சாப்பிடுவது நல்லது. வெந்தய தோசை மிகச் சிறந்தது.

வெந்தயக் கஞ்சி

வெந்தயம், அரிசி, பாசிப்பயறு, சின்ன வெங்காயம், பூண்டு, சீரகம், இவற்றில் தேவையான அளவு சேர்த்து கஞ்சி செய்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்படும்







# 9 திருமந்திரமும் வாழ்வியலும்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

பதி (இறைவன்), பசு (ஆன்மா உயிர்), பாசம் (ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்கள்) ஆகிய இவை மூன்றும் அனாதியானவை (தோற்றமும் முடிவும் இல்லாதவை, என்றும் உள்ளவை) என்னும் பதி, பசு, பாசம் பற்றிய சைவசித்தாந்த தத்துவத்தை விளக்கும்.

பதியை நாடப் பாசம் விலகும் எனக் கூறும் பாடல் எண் 115

“பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்
பதிஅணுகில் பசு பாசம் நிலாவே”.

இப்பாடலின் பொருள் “பதி (இறைவன்), பசு (ஆன்மா - உயிர்), பாசம் (மலங்கள்) ஆகிய மூன்றில் இறைவனைப் போலவே உயிர்களும் மலங்களும் அனாதியானவை (தோற்றமும் முடிவும் இல்லாதவை, என்றும் உள்ளவை). ஆன்மாக்கள் தலைவனாகிய இறைவனை நெருங்குவதில்லை. காரணம் அவற்றைப் பற்றியுள்ள பாசங்கள். ஆனால் ஆன்மாக்கள் இறைவனை நெருங்கினால் அவற்றைப் பீடித்த பாசம் நிற்காது. விலகிப் போகும்” என்பதாகும்.

பாசம் அகலப் பரமனருள் வேண்டும் என்பதை கூறும் பாடல் எண் 117
“சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே”.

இப்பாடலின் பொருள் “சூரிய ஒளியில் சூரிய காந்தக் கல் முன் வைத்த பஞ்சு பற்றி எரிவதைப் போல், வெறும் சூரிய காந்தக் கல் முன் பஞ்சை வைத்தால் அது எரியாது. சூரிய ஒளிதான் சூரிய காந்தக் கல்லில்ப் பட்டு வெப்பத்தை அதிகமாக்கி பஞ்சைப் பற்றி எரியச் செய்கிறது. இவ்வாறே இறைவன் அருட்பார்வை உயிர்களின் அக இருளைப் போக்கும்” என்பதாகும்.

இதே கருத்தைக் கூறும் பாடல் எண் 118
“மலங்கள் ஐந்தாம்என மாற்றி அருளித்
தலங்கள் ஐந்தான்அச் சதாசிவம் ஆன
புலங்களைந்தான் அப் பொதுவினுள் நந்தி
நலங்களைந் தான்உள் நயந்தான் அறிந்தே”.

இப்பாடலின் பொருள் “ஆணவம், கன்மம், மாயை, சஞ்சிதம், பிராரத்தம் ஆகிய ஐந்து மலங்களையும் கெட ஐந்து மூர்த்தங்களாக இருக்கின்ற சிவப்பரம்பொருள் அருள் செய்தான். பொதுமன்றில் திருநடனமிடும் இறைவன் தானாக விரும்பி உள்ளத்துள் வந்தமர்ந்து புலன்வழி உயிர்களைப் பற்றும் இச்சைகளைப் போக்கி அருளினான்” என்பதாகும்.

இதே கருத்தைக் கூறும் பாடல் எண் 120

“ஆவுமே பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னம் தனிநித்தம்
தீமேவு பல்கரணங்கள் உள் உற்றன
தாம்ஏழ் பிறப்பு எரிசார்ந்த வித்தாமே”.

இப்பாடலின் பொருள் “நீருடன் கலந்த பசுவின் பாலை அன்னப்பறவை நீரை வேறாக்கி விட்டுப் பாலை மட்டும் பருகும் என்பார்கள். இவ்வாறே இறைவன் சிற்றம்பலம், பேரம்பலம், பொன்னம்பலம் ஆகிய அம்பலங்களில் ஆனந்தக் கூத்தை நிகழ்த்துவதோடு, ஆன்மாக்களின் உயிரோடும் ஒன்றியிருக்கின்றான். என்றாலும் இந்த ஆன்மா அழுக்கடைய தீமையான பலவகைக் காரணங்கள் ஆன்மாக்களைச் சேருகின்றன.
இவையே உயிர்கள் தொடரும் ஏழ்பிறவிக்கும் காரணம் ஆகின்றன. இறைவன் அருள் இருந்தால்ப் போதும் பிறவித்துயருக்குக் காரணமான மலங்கள், வினைத்தொடர்புகள், நெருப்புப் பற்றிய விதை போலக் கரிந்து போகும்” என்பதாகும்.

சிவலோகம் இருப்பது சீவனுக்குள்ளே எனக் கூறும் பாடல் எண் 126

“முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்குச்
செப்பரிய சிவம்கண்டு தான் தெளிந்து
அப்பரிசாக அமர்ந்து இருந் தாரே.”

இப்பாடலின் பொருள் “பேரின்ப வீடு அடைவதற்கு உதவும் வழியாகிய முப்பத்தாறு தத்துவங்களையும் 1. ஆன்மதத்துவம் ( பிரகிருதி மாயை ) - 24. அவையாவன 1.ஐம்பூதங்கள் - 5 ( 1.நிலம் , 2.நீர், 3.தீ, 4.காற்று, 5.ஆகாயம்.),2.கன்மேந்திரியங்கள் - 5 (1.வாய்-பேச்சு, 2.கை, 3.கால், 4.எருவாய், 5.கருவாய்.), 3.ஞானேந்திரியங்கள் - 5 (1.மெய், 2.வாய்-நாக்கு, 3.கண், 4.மூக்கு, 5.செவி.), 4.தன்மாத்திரைகள் - 5 (1.சுவை, 2.ஒளி, 3.ஊறு, 4.ஓசை, 5.நாற்றம்.) , 5.அந்தக்கரணங்கள் - 4 (1.மனம், 2.புத்தி, 3.சித்தம்,,4.அகங்காரம்.). 2. வித்தியாதத்துவம் ( அசுத்த மாயா தத்துவங்கள் ) - 7. அவையாவன 1.காலம், 2.நியதி, 3.கலை, 4.வித்தை, 5.அராகம், 6.புருடன், 7.மாயை-ஒருபகுதி. 3. சிவதத்துவம் ( சுத்த மாயா தத்துவங்கள் ) - 5. அவையாவன 1.நாதம்-சிவம், 2.விந்து-சக்தி, 3.சதாக்கியம்-சதாசிவம், 4.ஈஸ்வரம், 5.சுத்தவித்தை.ஸ ஏணிப் படிகளாகக் கொண்டு மேல் ஏறி (மூலாதாரத்தை அடந்து) , அங்கு ஒப்புவமை இல்லாத இறைவனின் ஆனந்தத் தாண்டவம் தன் உள்ளத்தில் ஒளி வெள்ளமாய்ப் பரவி நிற்க, அந்த ஒளி வெள்ளத்தில் சொல்லுவதற்கு இயலாத பெருமை உடைய சிவப் பரம்பொருளைக் கண்டு, அதுவே மெய்ப்பொருள் எனத் தெரிந்து (தெளிந்து) அந்தத் தெளிந்த ஞான நிலையே பிறவிப் பயன் என்று இருந்தவர்கள் ஞானிகள்” என்பதாகும்.





யோ்மனியில் சிவத்தமிழ் ஆன்மிகச் சஞ்சிகையைப் பெற விரும்பும் ஆலயங்கள் தொடர்பு கொள்ளவும்

0163 199 2 333

vettimaniy@hotmail.com

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!



# கண்டி கலஹா தேயிலைத் தோட்டத்தில் படப்பிடிப்பு!



## இளையவர்களை தாயகத்தில் அரவணைத்துக்கொண்டு பயணித்த வெற்றிமணி.






தாய்மண்ணில் கொட்டிக்கிடக்கும் வளங்கள் அற்புதமானவை. வேலைக்கு பினபும், வாழ்வு ஒன்று அங்கு நிச்சயம் உண்டு. இங்கு வேலைக்காக வாழ்வை இழக்கின்றோம் என்பது அங்கு நின்ற நிமிடங்களில் தெரிந்தது.

மாலையில் கூடிப்பேசக் கலைகள் இருந்தன, இலங்கியம் பூத்தது,காலத்துக்கு ஏற்ப கலைகளின் வளர்ச்சி கண்முன்னே விரிந்துகிடந்தன. இளையவர் மனதில் ஏதாவது புதுமைபடைக்கவேண்டும், என்ற ஆவா பொங்கிவழிகின்றது. ஆண்,பெண், என்ற உணர்வுகளைப் பூட்டிவைத்த காலம் மலையேறிவிட்டது. கற்றவர்கள் சாதரணமானவர்கள் போல் மகி மிக எழிமையாக பழகும் தாய்மண்ணில், புதிய உலகத்தில் கால்வைக்கும் உணர்வுடன் TBB இசையமைத்த பாடல் அட இராவாச்சு போச்சு புள்ளே ஒளிப்பதி வேலையைத் தொடங்கினோம்.

தேர்ந்தெடுத்த இடம் மலையகம். கண்டி கலஹா தேயிலைத்தோட்டம். அங்கு தொழிலாளர்கள் வசிக்கும் லயத்தில் ஒரு நாளில் ஒரு பாடல் பூரணமாக எடுத்த முடித்து, மறுநாள் எடிடடிங் வேலையும் முடித்து பாடல் வெளியிடத்தயாரானது.

இவ்வளவு சுறு சுறுப்பாக ஒரு பாடலை களமமைத்து, நடிகர்களைத் தெரிவு செய்து, ஒளிப்பதிவாளர் மற்றும் உதவியாளர்களை ஒன்று கூட்டி, இப்பணியினை வெற்றிமணிக்கு முடித்துத்தந்தவர். ஓர் இளம் கலைஞர். பேரதனைப்பல்கலைக்களகத்தின் ஓர் கலைப்பட்டதாரி. ஊடகத்துறையில் கால்பதித்து உச்சத்தைத் தொடத் துடிக்கும் ஓர் இளம் பெண். அவர்தான் செல்வி பிரதீபா குலசிங்கம்.

இவர்களுடன் சுலக்சிதா சுகுமார், நடிகர் அஷ்வக் மொகஹமட், ஒளிப்பதிவாளர் ஜெனோஷன் ஜெயரட்ணம். ஆர்ச்சலா கதிரேசன், சித்திரா லிண்டா, திலினி, ரிஸ்மியா, என்று ஒரு பெரும் பல்கலைபட்டாளமே திரண்டுவந்தது.

படத்தளத்தை நோக்கி புறப்பட்ட நேரம் அதிகாலை 4.30. பேராதனை பல்கலைக்கழகத்தை காலை 7.30 அடைந்து விட்டோம். அங்கு சிற்றூண்டிகள் உடன் எம்மை வரவேற்க பேராசிரியர்கள் காத்து நின்னர். அனைவரும் இளம் மலர்கள். இவர்களில் சிங்கள ஆசிரியாரும் உள்ளடக்கம். இவர்களது வழிகாட்டலில் ஓர பாடல் பேரதனை பல்கலைக்க வெளிச் சுற்றாடலிலும், மறுபாடல் கலஹா தேயிலைத்தோட்ட லயத்திலும் படமாக்கினோம்.

லயத்தில் உள்ள மக்களது அன்பு எம்மை லயிக்கவைத்தது. சின்னஞ்சிறுசுகள் முதல் முதியவர்வரை எந்த இடைஞ்சலும் இன்றி ஒத்துளைப்பு நல்கினர். 40 வருடங்களுக்குபின் அந்த மக்களைச் சந்தித்தபோது அவர்கள் அன்று போல் இன்றும் அன்பில் நிறம்மாறாத பூக்களாகவே இருந்தனர்.

அன்று கல்வியைவிட்டு விலகி இருந்த அம்மக்கள் இன்று கல்விகற்பதில் பெருநாட்டம் காட்டுவது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியைத்தந்தது.

இந்து பௌத்தம் முஸ்லீம் என 3 மதத்தவரும் எம்முடன் இணைந்து பணியாற்றினார்கள். அரசியல்வாதிகள் செய்யும் திருகுதாளங்களுக்கு சாதரணமக்கள் மேல் குறைகூறமுடியாது. தோட்டத்தில் இருந்த சிறு கோவிலில் படம்பிடிப்பு நடத்தினோம். அப்போது அக்கோவிலில் திருவிழாவருவதாகக் கூறி உதவிகேட்டனர். நாம் கொடுப்பதற்கு முன்னரே எம்முடன் வந்த இளம் முஸ்லீம் பெண் தனது பணத்தைக் கொடுத்துவிட்டார். இனம் மதம் மொழி யாவும் கடந்து நிற்கும் கலை, எவ்வளவு புனிதமானது. ஆதனால்தான் தெய்வீகக்கலையானது.பாடல் காட்சிகளில் அஷ்வர் அசத்தினார். நாயகிகள் இருவரும் நடிக்கும்போது நாயகிகள், மறுகணம் சகோதரிகள். இந்த உறவு இளம் சந்ததிகளிடம்தான் பெரிதும் பெருகிக்கிடக்கிறது.



இந்த பாடல்காட்சியினை ஒளிப்பதிவு செய்தவர் ஜெனோஷன். சுடச்சுட ஒவ்வொரு காட்சியும் எடுத்துவிட்டு அதனை ஆனந்தத்துடன் பார்த்து சரிபிழை செய்வார். மொத்தத்தில் சிறந்த பாடல் ஒன்று தாய்மண்ணில் இதுவரை எவரும் எடுத்திராத பின்புலத்தில் எடுத்த பெரு மகிழ்வுடன் வெற்றிமணி அப்பாடலை வெளியிடக்காத்துள்ளது.

வெற்றிமணியின். அடுத்த படைப்புடன் பங்குகொண்ட கலைஞர்களின் தனித்திறமைகளைத் தனித்தனியாகத் தந்து பெருமைப்படுத்துவோம்.

Neuss நகரில் மளிகைப்பொருட்களுக்கு ஓர் சிறந்த ஸ்தாபனம்

SP Markt

info@sp-gmbh.eu
www.sp-gmbh.eu

SP Großhandlel &Lagerverkauf GmbH



கடலுணவுப் பொருட்கள் மற்றும் உடன் இறச்சிகள்யாவும் சிறப்புவிலையில் கிடைக்கும்

இல்லத்திற்குத் தேவையான அனைத்து மளிகைப்பொருட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்



Sperberweg 14 a
41468 Neuss

Fax:02131-384 13-10
Tel: 02131-384 13-0 / 02131-384 13-15


Akchaya
Digital Photography
Akilan wedding planner
உங்கள் திருமண நாள், பிறந்த நாள் மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டம் மணவறை அலங்காரம். நாதஸ்வரம். பூ மாலை. கேக், சிற்றுண்டி, குடிபானங்கள், உணவு வகைகள், மேக்கப், வாகன ஒழுங்குகள் மற்றும் ஐயர் பேன்ற அனைத்து தேவைகளையும் செய்துதரக் காத்திருக்கின்றோம்!
எமது வாடிக்கையாளர்களுககு ஓர் அரிய வாய்ப்பு
எம்மிடம் மணவறை, மேடை அலங்காரம், மேசை அலங்க்காரம் மற்றும் வீடியோ, புகைப்படம் பதிவு செய்து கொள்பவர்களுக்கு
1 Album இலவசமாகச் செய்து தரப்படும்...!
20.01.2017 - 20.03.2017
www.akchayadigitalphotography.eu
இச் சலுகை குறிப்பிட்ட
காலம் மட்டுமே
என்பதையும் மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்
akchaya photography
Grüner Weg-6 53474 Bad Neuenahr-AW, GERMANY
contact : E,Akilan
Professional Photography
e-mail:akchayadigitalphotography20@gmail.com
Tel. : 02641 91 68 98
Mobile:0163 39 40 474

## நிகழ்வின் நிழல்கள்

படங்கள்: நந்தபாலன்









### ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா

கடந்த மாதம் (03.07.2016) ஞாயிற்றுக்கிழமை யேர்மனி கம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவில் இருந்து சில காட்சிகள்







# வழிபாட்டில் வாழை

(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)

வழிபாட்டு நடைமுறைகளில் வாழைமரத்திற்குச் சிறப்பான இடம் வழங்கப் பெற்றுள்ளது. மனித வாழ்வியலில் 'வாழையடி வாழை' என்ற சிறப்பான வாழ்த்துரையும் வழக்கிலுண்டு. வளத்திற்கும், செழிப்புக்கும், பசுமைக்கும் வாழை எடுத்துக் காட்டாக விளங்குகிறது. வழிபாட்டு நடைமுறைகளில் தூய்மையான இடத்தை வரையறை செய்ய வாழைமரம் நாட்டப்படும். நான்கு மூலைகளிலும் வாழை மரங்களை நட்டு அவற்றை மாவிலை. தோரணங்களால் தொடுத்து விடும் நடைமுறை இன்றும் நடைமுறையாக உள்ளது.

வாழை மரங்களில் பல இனங்கள் இருந்த போதும் கதலிவாழையே வழிபாட்டு நடைமுறைகளில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் 'கதலிப்பழம்' எனச் சிறப்புப் பெயரும் வழங்கப்படுகிறது. மனிதவாழ்வியலில் வாழை பெரும் பயன்தரும் மரமாக விளங்குகிறது. வாழை இலை உணவருந்தும் பரிகலமாகப் பயன்படுத்தப்படுகிறது. இம்மரத்தின் தண்டு, காய், பூ, பழம் என்பன உணவாகப் பயன்படுகின்றன. வாழைப்பூவின் சுவை அறுசுவைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. வாழைக்குலையில் நிறையப் பழங்கள் இருக்கும். அவை சீப்புகளாக நெருக்கமாக இருப்பது கண்ணைக் கவரும் காட்சியாகும்.

தெய்வத்திற்கு மடைபோடும் போது நீண்டதலை வாழையிலை களைப் பரப்பி அதன் மேல் வாழைக்குலைச் சீப்புகளை குன்று போல அடுக்கி வைப்பர். அவை பூசை முடிந்த பின்னர் எல்லோருக்கும் பகிரப்படும். பொதுவாக ஒரு வாழைக்குலையில் பத்துச் சீப்புகள் இருக்கும். ஒவ்வொரு சீப்பிலும் முப்பதுக்குக் குறையாமல் பழங்கள் இருக்கும். எனவே ஒரு வழிபாட்டு நடைமுறையிலே பங்கு கொள்ளும் அனைவரும் வாழைப்பழம் பிரசாதமாகப் பெற்றுச் செல்லமுடியும். மடைபரவும்போது வாழைக்கனிகளின் கீழ்ப்பாகத்தையும் மேற்பாகத்துத்தண்டையும் வெட்டி விடுவர். இதனைக் கிராமப்புறங்களிலே இன்னமும் நாக்குமூக்குத் தள்ளுதல் என்பர். இதற்குக் காரணம் பழத்தை உண்ணும் போது எளிதாகத் தோலை உரிப்பதற்காகவே எனக் கருத இடமுண்டு.

பொங்கல் மடைபோடும் போது வாழையிலையிலே பொங்கலைப் பரவி அதன் மேல் தயிரை ஊற்றி அதற்கு மேல் தோலுரித்த வாழைப்பழத்தை வைப்பர். வாழைப்பழம் முக்கனிகளில் முதன்மையானதாக விளங்குகிறது. வாழை, பலா, மா என்னும் முக்கனிகளில் பலாவும் மாவும் ஒரு பருவ காலத்தில்தான் பழத்தை நல்கும். ஆனால் வாழையோ ஆண்டு முழுவதும் பலன் தரும். மேலும் ஒரு குலை ஈன்ற வாழையின் வாழ்வு அத்துடன் முடிந்துவிடும். அதனுடைய குட்டிகள் தொடர்ந்து பயன்தரும். 'வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்' என்ற ஒரு முதுமொழியும் வழக்கிலுண்டு. வாழைப்பழம் மஞ்சள் நிறமானது. ஆனால் ஓரிருநாட் சென்றால் அப் பழத்தின் மேல் கரும்புள்ளி தோன்றிவிடும். அத்தகைய பழங்கள் தெய்வமடைப் பொருளாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

வழிபாட்டு நடைமுறைகளில் வாழைத் தடலும் வாழைநாரும் கூடப்பயன்படுத்தப்படுகின்றன. வாழைத்தடல் பூசைக்குரிய மலர்களைச் சேகரிக்கும் கூடை செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. வாழைநார் இறைவனுக்குச் சூட்டும் மாலைகளைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும். இதனால் 'பூவுடன் கூடிய நாரும் புனிதர் முடிக்கு அணியாகும்' என்ற முது மொழியும் உருவாகியுள்ளது.

வாழைப்பழம் தெய்வமடைப் பொருளான 'பஞ்சாமிர்தம்' என்னும் முழுக்குப் பொருளிலும் இணைந்து உள்ளது. பஞ்சாமிர்தத்தில் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்னும் முக்கனிகளும் தேனும் நெய்யும் சேர்ந்திருக்கும். பலாப்பழம், மாம்பழம் கிடையாதபோது வேறு சில பழங்களைச் சேர்க்கும் வழக்கம் இப்போது நடைமுறையாகி விட்டது. ஆனால் வாழைப்பழம் எப்போதுமே பஞ்சாமிர்தத்தில் இணைந்திருக்கும் சிறப்பு உடையது.

வீட்டு வழிபாட்டு நடைமுறைகளிலும் வாழைப்பழம் சிறப்பாகப் பயன்படுகிறது. 'விளக்கடியில் வைத்தல்' என வீட்டில் நடைபெறும் சிறுமடையில் வாழைப்பழம் தனியிடம் பெற்றிருக்கும். வழிபாட்டில் சிறப்பாக இடம் பெற்றிருந்த வாழை தற்போது விழாக்களிலும் தனிச்சிறப்புப் பெற்று விட்டது. வாசலிலே வாழை மரம் நாட்டியிருந்தால் அங்கு ஏதோ விழா நடைபெறவுள்ளது. என்பது அறிவுறுத்தப்படுகிறது. மங்கல நிகழ்வுகளில் மட்டுமன்றி அமங்கல நிகழ்வுகளிலும் வாழை கட்டப்படும். ஆனால் மங்கல நிகழ்வுகளில் வாழை பழக்குலையுடன் நிற்கும். அமங்கல நிகழ்வுகளில் வாழை காய்க்குலையுடன் காட்சிதரும். மேலும் அலங்கார நிலையிலே வாழைக்குட்டிகளை நட்டு அவற்றோடு மாவிலைத் தோரணங்களைத் தொடுத்து விடுவது மரபாகவுள்ளது.

வாழைத்தோட்டம் திருக்கோயில்களுக்கு அருகே செய்கின்ற வழக்கமும் தொடர்கிறது. நாளாந்தம் வழிபாட்டு நடைமுறைகளுக்கும் அன்னதானத்திற்கும் திருவிழா அலங்காரங்களுக்கும் வாழை பயன்படுவதால் வாழைத்தோட்டம் இன்றியமையாததாக விளங்கியுள்ளது. சமயகுரவர்கள் திருக்கோயில்களைப் பற்றிப் பாடிய பதிகங்களிலே இதனைப் பதிவு செய்து உள்ளனர்.

ஆனால் இன்று வழிபாட்டு நடைமுறைகளில் வாழையின் தோற்றமும் மாறிவிட்டது. விஞ்ஞானக் கண்டு பிடிப்பான பிளாஸ்ரிக் வாழைமரம் குலையோடு நிற்கிறது. வெளிநாடுகளிலே வாழை பயிரிடமுடியாத காலநிலையில் பிளாஸ்ரிக் வாழைமரங்களை வழிபாட்டிற்குப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. அதை வாழை பயிரிடும் வளமுள்ள நாடுகளிலும் பயன்படுத்துவது பொருத்தமற்றது. வாழை மரம் வெறுமனே ஒரு அழகுதரும் மரமென நமது முன்னோர் எண்ணவில்லை. அந்த மரத்தின் இயல்பு மனிதவாழ்வியலை நெறிப்படுத்துவதை நன்கு உணர்ந்திருந்தமையால் அதனை வழிபாட்டு நடைமுறையில் பயன்படுத்தினர். 'வாழையடிவாழையாக' மனித வாழ்வு வளம் பெற வேண்டும் என எண்ணினர். அவர்களுடைய பொதுநலப் பண்பாட்டை நாமும் பேண வேண்டும். நமது தலைமுறையினருக்கும் பயிற்ற வேண்டும். வழிபாட்டில் இணைந்து வாழை எமது வாழ்வியலும் பல நிலைகளிலே தொடர்புற்று இருப்பதை நாம் மறந்து விடக் கூடாது.






ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte



யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main



# காதலிக்க நேரமில்லை ரவிச்சந்திரன்




இன்றைக்கு சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் திரையுலகில் நுழைவது என்பது அவ்வளவு சாதாரணமான விஷயம் அல்ல. அதிலும் நடிப்புத்துறையில் நுழைவது பகீரதப் பிரயத்தனம். எடுத்த எடுப்பிலேயே கதாநாயகனாக அவதாரம் எடுத்துவிட முடியாது. பல படங்களில் சின்னசின்ன வேடங்களில் நடித்தபின்பு, சில ஆண்டுகள் கழித்தே ஆக முடியும். சிலருக்கு பல கருப்பு வெள்ளைப்படங்களில் நடித்த பின்பே கலர்ப்பட வாய்ப்புக்கள் கிடைக்கும். சிலருக்கு முதலில் சில படங்கள் தோல்விகளைக்கண்ட பின்புதான் வெற்றிப்படங்கள் அமையும். சிலருக்கு முதலில் சிறிய இயக்குனர்களிடம் நடித்த பின்பே பெரிய இயக்குனர்கள் அறிமுகம் கிடைக்கும்.

முதல் படத்திலேயே கதாநாயகன்

முதல் படத்திலேயே பெரிய டைரக்டரின் இயக்கம் முதல் படமே கண்ணைக்கவரும் வண்ணப்படம்.

முதல் படமே 200 நாட்கள் ஓடிய மாபெரும் வெற்றிப்படம்

காதலிக்க நேரமில்லையில் நடிக்க நேர்ந்த சம்பவம் குறித்து ரவியே ஒரு தொலைக்காட்சியில் சொல்லியிருந்தார். "மலேசியாவிலிருந்து (அப்போது மலேயா) கப்பலில் சென்னை வந்து, தெரிந்தவர்கள் வீட்டில் தங்கியிருந்த நான், திருச்சிக்குச்செல்ல வேண்டிய ரயிலைத்தவற விட்டதால், வீடு திரும்ப நேர, மறுநாள் காலை என்னைச்சந்தித்த ஒளிப்பதிவாளர் பி.என்.சுந்தரம், ஸ்ரீதர் எடுக்கும் புதுப்படத்துக்கு புதுமுகம் தேடுவதாகசொல்லி என்னை அழைத்துப்போனார். மிகவும் ஒல்லியாக இருந்த நான், "நமக்கெல்லாம் எங்கே சான்ஸ் கிடைக்கப்போகிறது" என்ற எண்ணத்தில் டைரக்டர் ஸ்ரீதர் முன்பாகவே சிகரெட்டும் கையுமாக அசால்ட்டாக இருக்க, என்னுடைய அந்த அலட்சிய போக்கே ஸ்ரீதருக்குப் பிடித்துப்போக என்னை தேர்ந்தெடுத்துவிட்டார்" என்று தான் திரைக்கு வர நேரந்த அனுபவத்தைச் சொல்லியிருந்தார்.

"காதலிக்க நேரமில்லை"



முதல் குட்டு மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும் என்ற இலக்கணத்திற்கேற்ப, முதல் படத்தில் புதுமை இயக்குனர் ஸ்ரீதரின் இயக்கத்தில் அறிமுகமானார் ரவி. அப்படத்தில் மூன்று ஜோடிக்காதலர்கள். அதில் ஒரு நாயகனையும் நாயகியையும் அறிமுகப்படுத்தினார் ஸ்ரீதர். வழக்கமாக இவ்வாறு அறிமுகம் செய்யும்போது புதிய நாயகனையும், புதிய நாயகியையும்தான் ஒருஜோடியாக எல்லோரும் போடுவார்கள். ஆனால் ஸ்ரீதர். இதிலும் புதுமை செய்ய எண்ணி, பழைய நடிகர் முத்துராமனுக்கு புது நடிகை காஞ்சனாவை ஜோடியாகவும், புது நடிகர் ரவிச்சந்திரனுக்கு பழைய நடிகை ராஜஸ்ரீயை ஜோடியாகவும் போட்டார். அதாவது ஒவ்வொரு ஜோடியிலும் ஒரு அனுபவம், ஒரு அறிமுகம்.

"காதலிக்க நேரமில்லை" கதையை இங்கே சொல்வது, கொல்லன் தெருவில் ஊசி விற்பதுபோல. அந்த அளவுக்கு தமிழ் ரசிகர்களிடையே பிரபலமான படம் அது. அதில் ஸ்ரீதர், கோபு, கண்ணதாசன், விஸ்வநாதன் - ராமமூர்த்தி, வின்சென்ட், பி.என் சுந்தரம், எடிட்டர் என்.எம்.சங்கர் ஆகியோர் பெரிய ராஜாங்கமே நடத்தியிருந்தனர்.

முதல் படத்திலேயே ரவிச்சந்திரனுக்கு பி.பி.எஸ் குரலில் நான்கு அருமையான பாடல்கள். (முத்துராமனுக்கு ஜேசுதாஸ் குரலில் இரண்டு பாடல்களும் சீர்காழியின் குரலில் ஒரு பாடலும் தான். அதுபோக நாகேஷ் சச்சு ஜோடிக்கு ஒரு பாடல்). விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையில் அத்தனை பாடல்களும் தேன் சொட்டின. இன்றுவரை அவையனைத்தும் மக்களால் பெரிதும் விரும்பிக்கேட்கப்படுகின்றன. பாடலின் தரத்துக் கேற்றாற்போல வின்சென்ட் - சுந்தரம் கூட்டணியின் அற்புதமான ஒளிப்பதிவு. காஞ்சனாவையும், ராஜஷ்ரீயையும் ரவிச்சந்திரன் டீஸ் செய்து பாடும் "உங்க பொன்னான கைகள் புண்ணாகலாமா?" என்ற சாதாரண பாடலில்தான் கேமரா என்ன விளையாட்டு விளையாடியிருக்கும்?. ஆளியாறு அணைப்பகுதியில் படமாக்கப்பட்ட வெளிப புறக்காட்சிகள் கண்ணுக்கு விருந்து படைத்தன. "அனுபவம் புதுமை" மற்றும், "நாளாம் நாளாம் திரு நாளாம்" பாடலின் மெலோடியைப பற்றியெல்லாம் பேச நிச்சயம் எனக்கு தகுதியில்லை. ஆனால் "நாளாம் நாளாம்" பாடலை செட்போட்டுப் படமாக்கியிருந்தது கொஞ்சம் நெருடலாக இருந்தது. அதைவிட சென்னை மெரீனாவில் படமாக்கியிருந்த "என்ன பார்வை உந்தன் பார்வை" காட்சியமைப்பிலும், படமாக்கிய விதத்திலும் சூப்பர்.

படம் துவக்கத்திலிருந்து "வணக்கம்" வரை நகைச்சுவை கொடிகட்டிப்பறந்தது. காதல் ஜோடிகளோடு சேர்ந்துகொண்டு, பாலையா, நாகேஷ், சச்சு, பிரபாகர் (சச்சுவின் அப்பா) ஆகியோரும் நகைச்சுவையில் கலக்கினர். அதற்கு முக்கிய காரணமாக அமைந்தது சித்ராலயா கோபுவின் வசனங்கள். போதாக்குறைக்கு படத்தில் ரவிச்சந்திரன் வைத்திருக்கும் அந்த டப்பா காரும் நமக்கு சிரிப்பை மூட்டியது. அதுவரை சோகம், செண்டிமெண்ட் படங்களில் நடித்து வந்த முத்துராமனுக்கு, காதலிக்க நேரமில்லையில் அவர் ஏற்றிருந்த "டூப்ளிகேட்" பணக்கார கிழவன் வேடமும், அதில் அவர் கொடுத்த நகைச்சுவை சரவெடிகளும் திரையுலகில் அவருக்கு மிகப்பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியது. முதன்முதலாக ஜெமினி கலர் லேபரட்டரியில் வண்ணப்பிரதிகள் தயாரானதும் இப்படத்துக்குத்தான். (அதற்குமுன் வந்த கர்ணன், படகோட்டி ஆகிய ஈஸ்ட்மன் கலர்ப்படங்கள் மும்பை ஃபிலிம் செண்ட்டரில் ப்ராஸஸிங் செய்யப்பட்டன).

முதல் படமே 200 நாள் படமாக அமைய, "வெள்ளிவிழா நாயகன்" என்ற சிறப்புப்பட்டத்துடன் திரையுலகில் வலம் வரத்துவங்கினார் ரவிச் சந்திரன்.

அடுத்து இவர் கே.ஆர்.விஜயா நடித்த இதயக்கமலம் மறக்கமுடியுமா



ரவிச்சந்திரன் மறைவு 25.07.2011








## சூரியாவுக்கு ஓர் வேண்டுதல்! கபாலி மாதிரி எதிர்பார்ப்பைக் கூட்ட எதுவும் பண்ணிடாதிங்க!

## 24, எஸ்3யைத் தொடர்ந்து... ரஞ்சித்துடன் சூர்யா இணையும் படத்தின் தலைப்பு "5.35"?

ரஞ்சித் இயக்கத்தில் சூர்யா நடிக்கவுள்ள புதிய படத்திற்கு 5.35 எனப் பெயரிட படக்குழு திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பா.ரஞ்சித் ரஜினியை வைத்து இயக்கிய கபாலி படம் தியேட்டர்களில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் தனது புதிய பட வேலைகளைத் துவக்கி விட்டார் ரஞ்சித். ஆம், இப்படத்தில் சூர்யா தான் நாயகன். ஏற்கனவே கார்த்தியை வைத்து ரஞ்சித் மெட்ராஸ் படத்தை இயக்கியபோதே, அடுத்து சூர்யா தான் அவரது நாயகன் எனக் கூறப்பட்டது. ஆனால், இடையில் ரஜினிக்கு படம் பண்ண ரஞ்சித் சென்று விட்டதால், அந்த படம் தள்ளிப் போனது.

தற்போது கபாலி வெற்றிகரமாக ஓடி வருவதால், சூர்யாவும், ரஞ்சித்தும் தங்களது பட வேலைகளை ஆரம்பித்து விட்டனர். இப்படத்தில் சூர்யா குத்துச்சண்டை வீரராக நடிப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், இப்படத்தின் தலைப்பு குறித்து புதிய தகவல் கிடைத்துள்ளது. அதாவது இப்படத்திற்கு 5.35 எனப் பேர் வைக்க படக்குழு முடிவு செய்துள்ளதாம். விரைவில் இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், ஏன் இந்தப் படத்திற்கு 5.35 எனப் பெயர் வைக்க முடிவு செய்தனர் என்பது குறித்து தகவல்கள் இல்லை. சமீபகாலமாக சூர்யா தனது படப்பெயர்களில் நம்பர் இருக்கும்படி அமைத்து வருகிறார். 24, பசங்க 2வைத் தொடர்ந்து தற்போது ஹரி இயக்கத்தில் சூர்யா நடித்து வரும் சிங்கம் பட மூன்றாம் பாகத்திற்கு எஸ்.3 எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சரி என்ன பெயர் வைப்பது என்றாலும் வையுங்கள். ஆனால் கபாலி மாதிரி ஓவர் எதிர் பார்ப்பைக் கொடுத்து இரசிகர்களைக் கவிழ்த்துவிடாதீர்கள்.

## விஜய், அமலா பால் விவாகரத்துக்கு காரணம் விஜயின் பெற்றோர் தான்?





இயக்குநர் விஜய் - அமலா பால் ஜோடி விவாகரத்து முடிவிற்கு வரக் காரணம், விஜயின் குடும்பத்தார் தான் எனப் புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. தெய்வத் திருமகள், தலைவா உள்ளிட்ட படங்களில் பணியாற்றிய போது, நடிகை அமலாபால் - இயக்குநர் விஜய் இரண்டு பேருக்கும் இடையே ஏற்பட்ட நட்பு காதலாக மாறியது. கடந்த 2014ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந் தேதி, கேரள மாநிலம் கொச்சியில் இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது. சென்னை அடையார் போட் கிளப்பில் உள்ள ஒரு பங்களாவில் இருவரும் தனிக்குடித்தனம் நடத்தினார்கள்.

திருமணத்திற்கு முன் ஒப்பந்தமான சில படங்களின் படப்பிடிப்பை மட்டும் முடித்துக் கொடுத்த அமலாபால், சிலகாலம் சினிமாவில் இருந்து ஒதுங்கி இருந்தார். பின்னர் மீண்டும் நல்ல பட வாய்ப்புகள் கிடைத்ததால், பசங்க 2, அம்மா கணக்கு உள்ளிட்ட படங்களில் அவர் நடித்தார். ஆனால், திருமணத்திற்குப் பின் மீண்டும் அமலாபால் நடிப்பது விஜய் மற்றும் அவரது குடும்பத்தாருக்குப் பிடிக்கவில்லை எனக் கூறப்பட்டது. அடுத்தடுத்து புதிய படங்களில் அவர் ஒப்பந்தமானது, அவர்களுக்கிடையே கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியது. இதனால் விரைவில் அவர்கள் இருவரும் விவாகரத்து செய்து கொள்ளப் போவதாகத் தகவல்கள் வெளியானது. ஆனால், இது குறித்து சம்பந்தப்பட்ட இருவரும் வாய் திறக்கவில்லை. ஒருவர் மீது மற்றொருவர் புகார் பத்திரம் வாசிக்கவில்லை. இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் விஜயின் தந்தை அழகப்பன் அளித்த பேட்டியில், "அமலா யாருடைய பேச்சையும் கேட்பதில்லை. அதனால் தான் இந்த விவாகரத்து முடிவு" எனக் குற்றம் சாட்டினார். அதற்கும் அமலாபால் தரப்பில் இருந்து விளக்கம் அளிக்கப்படவில்லை.

இது தான் காரணம்...?



இந்த சூழ்நிலையில் விஜய் மற்றும் அமலா பாலின் நெருங்கிய உறவினர்கள் கூறியதாக வெளியான தகவலில், "அமலா பால் தொடர்ந்து நல்ல கதாபாத்திரங்களில் நடிக்க விஜய் உறுதுணையாகவே இருந்தார். ஆனால், இது அவரது பெற்றோருக்குப் பிடிக்கவில்லை. தொடர்ந்து அமலாபால் நடிப்பதை அவர் விமர்சித்து வந்தனர். இதனால் பெற்றோரை எதிர்க்க முடியாத நிலையில் விஜய் மவுனம் காத்து வந்தார். இதனாலேயே இருவரும் சுமூகமாகப் பிரிவது என முடிவெடுத்தனர்" எனத் தெரிவித் துள்ளனர்.



உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு

# EurAsian - Tours



LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692

Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965

VALUTRANS MONEY TRANSFER
துரித பண மாற்றுச் சேவை!

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

Further Str. 156
41462 Neuss

இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com

# Jasmine Silk House



என்றும் மலிவாக தரமாக திருமணப்
பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள்,
பஞ்சாபிகள்,அனைத்தும் புத்தம்,
புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!

புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்

HP:0173 1937 325
Tel:02102 844744

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas

ஜஸ்மின் சில்க் ஹவுஸ்



# ASIA BAZAR



துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...

Ria Money Transfer
MoneyGram
VALUTRANS MONEY TRANSFER

உரிமையாளர்:
பா. கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

# வீட்டுக்கடன் 1,2%

01.06.2016
வட்டிவீதத்திலிருந்து

நீங்கள் புதிய மனை
அமைக்கவோ, கடன் பெறவோ,
எதுவானாலும் உடனடி உதவி
எங்களிடம் உண்டு

தற்போதைய வீட்டுக்கடனை
அல்லது (தனிநபர்)கடனை
குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
“Umschuldung”

தொடர்புகளுக்கு:
gothab Finance 0231/53375365 0152/53961138
Rheinische Str. 72, 44137 Dortmund 0231/10876361
Th. Gobinath

# SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN



069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main





India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

# StaR - Impex

Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00



Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de



StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Kipper Str.3 44147 Dortmund Germany